
41 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று




| | |
|---|---|
| வருடச்சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

[வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வி... ...கள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
பே... ...விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
தனி விகிதமும் உண்டு.

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-ஸூ மார்கழி 4-உ (19—12—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 34.

## உண்மையான கதர்

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமானவிலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டுகாரியதரிசி

விலாசம்:—க. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

## கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், ரச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,

A. முருகேச முதலி.

No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

## காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பின் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

ஊத்துக்குளி S. I. Ry.

## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916-ஸு ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிக்கேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா

மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர்-மதருஸ்.

## திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

## கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

## வில்வாதி இலேகியம்.

பித்த வாயுவுக்கும் அஜீரணத்துக்கும்.

ஆகாரம் ஜீரணமாகாமல் ஏற்படும் வயிற்றுப் பிசம், வயிற்றுவலி, ஏப்பம், மார்நோய், பக்க நோய், முதலியவைகளை மூன்று பொழுதில் நீக்கக் கூடியது. பத்தியமில்லை.

40 வேளை சாப்பிடக்கூடிய இலேகியம் ரூ. 1—8—0.

## கீழ்காய்நெல்லித் தைலம்.

இத் தைலத்தை வாரம் இருமுறை தலை முழுகுவதனால் மேக, பித்த, உஷ்ணங்களால் ஏற்படும் கண்ணெரிச்சல், கை கால் எரிச்சல், மயக்கம், தலைவலி, மயிர் உதிர்தல் முதலியவைகளை நீக்கும். மூளைக் குளிர்ச்சியும் கொழுமையையும் உண்டாக்கும். நாள்தோறும் சிகையில் தடவி சீவிக்கொள்ளலாம்.

கீழ்காய் நெல்லித் தைலம்

8 பலம் டின் 1-க்கு ரூ. 1—4—0

ஷை டின் 3-க்கு ரூ. 3—4—0

வி. பி. தபால் செலவு வேறு

எம். சி. நடேச வைத்தியர்,

சுதேச ஔஷததசாலை,

கு. மேல வீதி, கும்பகோணம்.

### "ஆனந்த விகடன்"

இதில் பல அருமையானதும் விடாநகைப்பைத் தருவதுமான விகடங்களும் விகடத்தேவாரம், திருவாசகம், திருபுகழ் முதலிய அநேகப் பாடல்களும், விகடக் கதைகளும், ஞானந்தரும் வியாசங்களும், பலவகை குறிப்புகளும், "முத்தாம்பாள் அல்லது மோகனவடிவு" என்னும் தொடர்பு நாவலும், பஞ்சாங்கமும் அடங்கியுள்ளது. இதை ஒரு தரம் வாசித்தவர்கள் மறுபடியும் வாசிக்காதிருக்கமாட்டார்கள்.

வருட சந்தா ரூ. 2, வெளிநாட்டிற்கு ரூ. 2-8-0


1 அணா ஸ்டாம்பு அனுப்ப மாதிரி இனாம்.

[மாத சஞ்சிகை] ஆனந்த விகடன், ஆபீஸ்,

சௌகார் பேட் போஸ்டு, ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!

டேபில் டயம்பீஸ் இனாம்!!!



(திருப்தியில்லாவிடில் பணம் வாபீஸ்.)

எங்கள் 22 காரட் ரோல்டு கோல்டு "கோல்டன்" அழகிய கைக்கடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேனேஜரின்பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டயம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். இரண்டுக்கும் ஐந்து வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள். இனாம் டைம்பீஸுடன் ஷை கடிகார வாட்சு விலை ரூ. 7. வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நண்பர்கள் தபால் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்ப வேண்டும். விலாசம்:—

தி பான்ஸி வாட்சு அவுஸ்,

15-A பீட், அண்ணா பிள்ளை தெரு,

மதராஸ்.

## மஹேந்திரஜாலம்

இது சென்ற மஹா யுத்தத்தின்போது ருஷ்யாவைத் தலைகீழாக வீழ்த்திய மாயா விநோதப் பாதிரி ரஸ்புட்டீனின் மெய்யான சரித்திரம். இதனால் ஆஷாடபூதிகளின் வேஷத்தை யறியலாம். பாதிரியின் படமும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

தபாற் செலவுடன் விலை ரூ. 1 0 0

மணவாழ்க்கையின் மர்மங்கள்.

படங்களுடன் விலை ரூ. 2 0 0

பண்டிதை மேஸ்மேரிஸா

படங்களுடன் விலை ரூ. 1 8 0

தபால் பெட்டி நெ. 248,

சென்னை.

## ஜீர்ணாமிர்தம்.

தங்கம் சேர்ந்த ருஜிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச்சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுபடும். பித்தம், இருமல், வயிற்றுப் பிசம், குத்தல், மூலம், பீனிசம், மார்பெரிச்சல், வாசம், புளியேப்பம், ஜ்வரதாசங்கள் முதலியவற்றை உடனே குணபடுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

## நாடுமதித்த நவகுண மிளகு.

1. பித்த மயக்கங்கள் காணாதோடும். 2. ஈரக்குலைவலி, மார்வலி, நீங்கிவிடும். 3. அமட்டல், வாந்தி, விக்கல் க்ஷணத்தில் நிற்கும். 4. உஷ்ணத்தால் ஏற்பட்ட போக்கு, அஜீரணம் தீர்ந்துவிடும். 5. வைசூரி, ஜுரம், ஜன்னி, பிரஸவ அறை, இக்காலங்களில் ஏற்படும் தாகம், வறட்சி உடனே நிற்கும். 6. ரயில், கப்பல், வண்டி முதலிய பயணத்தில் ஏற்படும் 1, 3 லக்கத்திலுள்ள தூர்க்குணங்களுக்கு சஞ்சீவியாக பயன்படும். 7 சுருட்டு, சிகரெட் முதலியன அதிகம் உபயோகப்படுத்துவதால் நேரும் கெடுதல்களை போக்கடிக்கும், 8. லகிரிவஸ்துக்களால் ஏற்படும் மயக்கங்களை உடனே தணிக்கும். 9. பிரசங்கிகள், வக்கீல்கள், மாணவர்கள் இவர்களுக்கு ஏற்படும் நாவறட்சியை நீக்கவும், சாதாரண தாகத்தை தணிக்கவும், பின்னும் மூளைக்கு அதிக வேலை தந்து, ஆவியை போக்கி ஆன்ம சக்தி குறைந்து அதனால் உண்டாகும் தீமைகளுக்கு அவசியமாகும்.

குறிப்பு:—இது சாதாரண முழு மிளகை அப்படியே சொரூபம் மாறாமல் பக்குவம் செய்தது. ஒருநாளில் எத்தனை தடவையேனும், தடவைக்கு எத்தனை மிளகேனும் வியாதி இருப்பினும், இல்லையேனும் பயமின்றி உபயோகிக்கலாம்:

அரை அவுன்ஸ் பாட்டல் 1க்கு 0—8—0

" " டஜன் 5—0—0

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும் வி. பி.ல் 3 பாட்டல்களுக்குக் குறைந்து அனுப்பப்படமாட்டாது.

ஹக்கீம் ம. அ ஷம்ஷுதீன் சாஹிப்,

யூனானி தமிழ் சித்தவைத்தியம்,

மாயவரம், (தஞ்சாவூர் ஜில்லா S.I.R.)

## எதுவேண்டும்?

| | |
|---|---|
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | ரூ. 2—4 |
| கர்ப்ப சாஸ்திரம் | 1—8 |
| மனோவசிய சாஸ்திரம் | 1—8 |
| ரதி சாஸ்திரம் | 1—4 |
| ஸதிரீ புருஷ ரகசியம் | 1—0 |
| சதிபதிகளின் மர்மம் | 1—0 |
| சரீர மர்ம சாஸ்திரம் | 1—0 |
| ரதிமதன சிங்கார ரஹஸ்யம் | 1—0 |
| மதனரதி ரஹஸ்யம் | 1—0 |

இன்னும் எல்லாவித தமிழ்ப் புஸ்தகங்களும் எம்மிடம் கிடைக்கும். வி. பி. சட்டமில்லாதவெளிநாட்டு நேயர்கள் தபாற் செலவையும் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்.



பெட்ரோமாக்ஸ் லைட்.


லைட்கள், மாண்டில், டூம், தனித்தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். பொட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்.

## சரீர மர்ம சாஸ்திரம்.

(ஓர் மானிட மர்ம நூல்.)

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும் அவர்களது ஸ்தானங்களின் அமைப்பும், சம்சார சுகம்



குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கை மர்மம், அடங்கியது. கல்யாணமானவருக்கும், கல்யாணமாகாத சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல்.

64 படங்களுடன் 200 பக்கங்கள் பெரிய புஸ்தகம் ஒன்றுக்கு விலை ரூ. 1.

மாணிக்க விலாஸம் பிரஸ்,

அருணாசல முதலி வீதி, மதராஸ்.

## நம்பிக்கையான வியாபார ஸ்தலம்.

சகல விதமான புஸ்தகங்கள் கதர் துணிகள் மருந்துகள் கடிகாரம் ஷராப் சாமான் முதலிய இதர எல்லா சாமான்களும் கிடைக்கும். முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

விலாசம்:—

என். தண்டபாணி கம்பெனி.

தபால் பெட்டி 292.

6-99 பவழக்காரத்தெருவு,

சென்னை.

# நம்மவர்க்கோர் நயமொழி.

(சிவசம்புசுவாமி எழுதுகிறர்)

அருந்தமிழ் நாட்டுப் பெருந்தகையாளர்காள்! ஆரியரல்லாத சீரியர்காள்! பூரியரல்லாத வீரியர்காள்! கேண்மின்! கேண்மின்! தம்மை உயர்த்திப் புகழ்ந்தும், எம்மைத் தாழ்த்தி இகழ்ந்தும் ஏமாற்றித் தட்டிப்பறித்து இம்மைப்பயனை ஒருசேர எய்திக்களிக்கும் வஞ்ச நெஞ்சினர் மாயவலையினின்றும் தப்பித்துய்யச் சாற்றுதும்; கேண்மின்! மயக்கத்தினின்றும் தெளிமின்! உறக்கத்தினின்றும் எழுமின்! பரந்த அறிவின் விரிந்த பேரொளியிலே விழிமின்! தன் மதிப்பென்னும் ஆக்கங்கருதி ஊக்கத்தோடு முன்னேறி விரைந்து சென்மின்! உறுதி பெறுதிர்; குற்றம் குறையும்; குணமே நிறையும்; சற்றும் தயங்காதீர்; வெற்றி நமதே.

அன்பார்ந்த சகோதரிகளே! சகோதரர்களே! மடியெனும் இருளை அடியோடு கடிந்து, மிடியெனும் பகையை வெட்டிக்குமைத்து, நம்மவர் எந்நாளும் நலம்பெற வாழும் நன்னெறியைத் திட்டம்பெறக்காட்டில் படிமிசை முடியெனப் பண்புற நடைபெறும் "குடி அரசு" என்னும் கோதிலாப் பத்திரிகையைப் பன்னூள்தொட்டுப் படித்து வருகின்றீர்களே. வீணாரவாரம் சிறிதேனுமின்றி ஆனேறுபோல உள்ளதை உள்ளபடியேமெய்யறியாப் பொய்யர்களைப் போலல்லாமல் உள்ளத்துறுதிபெற எண்ணி, எழுதி, எடுத்துரைத்து அரும்பெரும் பாடுபட்டுழைக்கும் அன்பர் திருமிகு, ஈ. வெ. ராமசாமி நாயக்கரவர்கள் சென்னெறியே செந்நெறி. மானத்தோடு உயிர் வாழ்வதே மக்களுக்கு மிக்க மாண்புடையதாகும் என்பதே நாயக்கரவர்களின் உள்ளக்கிடை. சென்னைச் சட்டகலாசாலைப் போராசிரியர் உயர்திரு, கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல். அவர்களின் அறிவான்விரிந்து பரந்த நோக்கமுமஃதே. தீதிலா உண்மையையே பாதுகாத்துச் செந்தமிழ் நாட்டவர் செவ்வனே வாழுமாறு அவ்விரு பெரியாரும் எடுத்துக்கொண்டிருக்கும் முயற்சி ஈடேற்றதென்பதை எல்லாரும் உணர்வீர்கள். கரும்புதின்னக் கூலியும்வேண்டுமோ? தமக்கென அனுபவம் வராதவனாயில் எவரும் எதையும் அறிந்தவராகார். ஆதலின் குருட்டு நம்பிக்கையைக் கூட்டோடே கொளுத்திவிடுமின்!

பழுத்த உணர்வைப் பற்றுமின்! விடேன்மின்! ஞாலத்தின்கண்ணே சாலச்சிறந்த அறிவையும், அறத்தையும், அன்பையும் பெறுதற்கு அனைவரும் உரியரே. ஒவ்வொருவருள்ளத்தும் பேராற்றலும், பேரறிவும் மறைந்து கிடக்கின்றன. நாளடைவிலே வெளிப்பட்டேவரும். ஒரு காலத்தில் முற்றும் தோன்றி முன்னேறி நிற்கும். நிற்கவே நிலையான தெளிவு நிகழும். தன்னுடைய முகத்தை இரு கைகளாலும் இறுக மூடிக்கொண்டு இருட்டாயிருக்கிறது, இருட்டாயிருக்கிறது என்று ஒருவன் சொல்லிக்கொண்டிருப்பானானல் மூடிய கைகளை எடுக்குந்தனையும் இருட்டுத்தானே இருந்துகொண்டிருக்கும். எடுத்தவுடனே இருட்டைக்காணமுடியுமா? இருப்பது ஒளிதானே. நாளேற நாளேற நல்லொளி விளங்கும், "பழக்கம் கொடியது, பாறையினுங் கோழி கிழிக்கும்." நம்மவர் பன்னெடுங்காலந்தொட்டே தந்நலப்பேயரின் சார்பிலே சென்று, தங்கிநின்று வளர்ந்து, தன்மதிப்பை இழந்து தலைதடுமாறி, நிலைகுலைந்து, இடுக்கண் பட்டு, பாசப்பிணிப்புண்டு நடைப்பிணம் போலவும், சூத்திரக் கயிற்றிலாடும் பொம்மைகளைப்போலவும் ஆய்விட்டனர். இன்னும் அந்நிலையிலோ இருக்கவேண்டும்? பாழ்படச் செய்தவர் பக்கலில் இனி யென்ன வேலை? தன் காலூன்றி நடந்து, தன் கையால் வேலைசெய்து தனக்குத்தானே துணையாயும் தக்கோர் முதுமொழிப்படி நடப்பவனும் உள்ளவனே அறிவாளியாவன், வீரனுவான், தாளாண்மையுடையனுவன். விடாலை யொன்றே வெற்றிக்கு உற்றதுணை.

பழக்கங்களெல்லாம் நாளடைவிலே வழக்கங்களாகும்; வழக்கங்களெல்லாம் காலப்போக்கிலே ஒழுக்கங்கள் [ஆசாரங்கள்] ஆகும்; அவ்வொழுக்கங்கள் எல்லாம் விதியாக மாறும். அவ்விதி எல்லாதேசத்துக்கும், எல்லாச் சாதிக்கும், எல்லா மதத்துக்கும், எல்லாக் காலத்துக்கும் ஏற்புடையதாகமாட்டாது. பொதுவென்றும், சிறப்பென்றும் அவ்விதி இருவகைப்படுமென இயம்புவர். சிறப்பென்பது தத்தம் கொள்கைக்கோ, நிலைமைக்கோ வகுப்புக்கோமட்டும் செல்லும். அது வேற்றுமைக்கு வித்தாயிருப்பினும் இருக்கும். காலம், இடம், வகுப்பு, கொள்கை முதலிய எல்லாவற்றிற்கும் பொதுவிதியே பெரும்பாலும் இயைபுடையதாகும். சிறுபான்மை சிறப்பு விதியும் பொருந்தும். சாதிமத வேறுபாடுகள் பண்டைக்காலத்தில் தண்டமிழ் நாட்டில் நிலைபெற்றிருந்ததில்லையென்றும் கூறலாம். ஆரியப்பூரியர் வஞ்சகமாக ஒற்றுமையியக்கத்தை மாற்றி, வேற்றுமை மயக்கத்தைத்தோற்றுவித்து, நம்மவர்க்கிடையே ஆசையையும், அச்சத்தையும் நுழைத்து மோசஞ்செய்துவிட்ட சங்கதியை நுண்ணறிவாளர் எவரும் அறியாதிரார். அறிந்தும் என்பயன்? பொதுவாக மக்கள் ஆசையின்பாற்பட்டும், அச்சத்தை முன்னிட்டும் ஏமாந்துபோயினர்! எதையும் எளிதில் நம்பும் இயல்பினராகிய நம்மவர் ஆராயாமல் இடங்கொடுத்ததிலிருந்து மடம்பட்டு புந்தியோடு நைந்துருகவேண்டியிருக்கின்றது.

இன்பத்திலாசையும், துன்பத்திலச்சமும் எவர்க்கும் உள்ளாதல் இயல்பே. இன்பம் பயப்பது வானுலகமென்றும், துன்பந் தருவது நிரய உலகமென்றும் நீளநினைந்து வாய் கூசாமற் பேசித் தங்களைப் பூசுரர் [உலக தேவர்] என்றும், தாங்கள் திருத்தியடையும்படி கொடுத்தவர்களை வானுலகத்தில் இன்புறச் செய்வோமென்றும், கொடாதவர்களை நிரயத்திலே துன்புறச் செய்வோமென்றும் மருட்டி வெருட்டி மாழ்கப்பண்ணிவிட்டனர். அத்துடன் நில்லாமல் பற்பல வேறுபாடுடைய வகுப்புப் பிணக்குகள் (உயர்வுதாழ்வு) முதலியவைகளை உண்டாக்கிவிட்டதனல் அவர்களைப்போல நம்மவரும் ஈரமில்லா நெஞ்சத்தவர்களாய், மிடுக்குந் திடுக்கும் மேம்பட்டவர்களாய்ப் போலிக்கொள்கைகளிற் புகுந்து பூசலிடப் புகுந்தனர். "பொய்யுடை யொருவன் சொல்வன்மையினுல் மெய்போலும்மே, மெய்போலும்மே" என்னும் முதுமொழிக்கு இலக்காக நம்மவர் பொலிவிழந்து நலிவெய்தினர். மால்கொள்ளும் தந்திரங்களோடு மந்திரங்களென்னும் அம்புகளையெய்து சிந்தை நொந்து சோர்ந்த மதியின்றித் துயருமாறு செய்த விந்தையைத் தற்காலம் பற்பலர் தெரிந்துகொண்டுவிட்டனர். தன்மதிப்பிலாசையும், வேற்றுமை உணர்ச்சியில் அச்சமும் நம்மவர்க்கு உள்ளத்தினுள்ளே உறுதியாயிருக்கவேண்டியது அவசியத்தினு மவசியம். ஆதலின் நன்முயற்சியோடு நம்மவர் அனைவரும் வெற்றி வீரர்களாய் விளங்குமாறு திருவருளை வேண்டுகிறேன்.

சைவ வைஷ்ணவ ஆசாரியர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகிய பெருஞ்சிறப்புடைய அன்பர்கள் ஜாதி வேற்றுமையைப் பாராட்டினரில்லை. ஒரு சிறிது சமயவேற்றுமை இருந்திருக்கலாம். அதினுலும் மாறுபாடாவது வேறுபாடாவது இருந்திருக்கவில்லை. சங்கடகாரியாய்ச் சங்கராசாரியர் சாதிவேற்றுமையைத் தலைசிறக்கச்செய்து, நம்மவர்க்கோர் உயர்வையும், ஊதியத்தையும் நிலைநாட்டிவிட்டனர். சொல் வன்மையுடைய வன்கண்ணராய பார்ப்பனர் சார்பினுல் நம்மவரிற் பலர் சங்கராசாரியரின் சங்கடத்துக்குள்ளாகி தம்முண்மை யறியாது தத்தளிக்கின்றனர். பெறும் பயன் ஒன்றுமேயில்லை "உண்பான், உடுப்பான் கோயிற் பார்ப்பான், குத்துக்கு நிற்பான் வீரமுஷ்டி." என்னும் பழமொழிக்கிலக்காகவன்றே நம்மவர் கதியிருக்கின்றது. தாசி மக்கள் வேசி மக்கள் இழிகுலத்தவர் முதலிய பழிமொழிகளை நம்மவர்மீது ஏற்றித் தூற்றுகின்றனர். உண்மையை யன்றி உணருமிடத்து அவ்வசை மொழிகள் அவர்க்கேசாரும் என்பது திண்ணம். உலகியல் முறையில் "இட்டார் பெரியோர், இடாதோர் இழிகுலத்தோர்" என்பது பொருட்செறிவுள்ள பொது முதுமொழி. கொடுக்க நம்மவர், வாங்கப் பார்ப்பார் என்பது முக்காலத்துக்கும் பொருந்தும். வஞ்சஞ் செறிந்த நெஞ்சினராய் நஞ்சுகு செஞ்சொல்லினராயுள்ளார் நலத்தின்கண் அன்புடையராதலரிது; அவரை விலக்கவும் எண்ணுவர். இத்தகைய குணங்கள் எவரிடத்து நிகழ்கின்றன? உற்று நோக்கின் தெற்றென விளங்கும் உண்மை. "நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக் குலத்தின்கண் ஐயப்படும்," என்னும் பொதுமறை முதுமொழிப்படி யார் தாழ்ந்தவரென்பதைத் தாராளமாக அறிந்துவிடலாம். பலபடப்பேசியென்ன!

"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற."

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்பு தோல் போர்த்த வுடம்பு"

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள், உள்ளுவரோ மநுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" என்னும் பிற்காலத்துப் பெரும் புலவரின் அரும் பொருளமைந்த திருமொழியைச் சிந்தித்துய்வதே நம்மவர் கடமை. ஏனோ தானோவென்று இன்னுமிருக்க வெண்ணின், பின்னும் பெரும்பிழை நம்மதேயாகும். இது நல்ல தருணம். தருணம் தப்பினுல் மரணம். மெய்வாழ்வு வாழ விருப்பமுடையவர் எத்துணையிடுக்கண்கள் இடையிலேவரினும் தடைபடா ஊக்கத்தோடு நடைமுறை இயல்புக் கிணங்க முன்னேறிச் செல்வதே முக்கிய கொள்கையாக உள்ளத்துப் பதித்தல்வேண்டும். உண்மைக்கு ஒருநாளும் அழிவில்லை; என்றும் நன்றே நின்று மிளிரும்; எடுப்பார் கைப்பிள்ளைகளாய் ஊதியங்கருதி முதலிழந்து, மக்கட்பண்பை இழந்து வெறியராய், வறியராய் வீணே வாடித்திரிந்த, திரிகின்ற, திரியும் மாக்களை மருவாதொழிமின். அவர்களைப் பொருட் படுத்தன்மின். "ஊக்கமது கைவிடேல்" என்னும் உறுதி மொழியை உயர்வுடன் உள்ளத்துக்கொள்க. மக்களின் உயிர் (ஆன்மா) சார்ந்ததன் வண்ணமாயிருக்குமென்பது முடிந்த முடிவாகிய சைவக்கொள்கை. பன்னெடுங்காலமாகப் பழகிவந்த வாசனையினுல் உண்மையுணர்வாகிய வியாபக அறிவு மழுங்கி, சமத்துவப் பிறப்புரிமையை மறந்து தமிழ்நாட்டு வைரிகளின் சார்பினுல் தவிக்கவேண்டியிருக்கின்றது. முட்டுண்டுங் குனியாவிடில் முழு மக்களென்றே மொழிவர் மூதறிவாளர். கடவுள், உயிர், உலகம் முதலியவற்றையும் அமயத்துக்கேற்றவாறு மாற்றியமைத்து வேற்றுணர்ச்சியை விரித்துவிடுகின்றனர். புதிது புதிதாகிய கொள்கைகளை மேற்கொண்டு செல்லுந்தோறும் மெய்யாகவே நன்மை பயவாத வெறும் வினைகள் மலியத் தொடங்குகின்றன. அதினுல் அறநூல் விதி இதுவென அறைகூவி நிறைமதியைக் குறையாக்கி விடுகின்றனர். (அ)தரும சாத்திரங்களென்றும், தவருது அநுஷ்டிக்கவேண்டிய விதிகளென்றும் மெய்போற் புகன்று, விரிந்த அறிவோடு செறிந்த அன்பைச் சிறுத்துவிட்டனர், ஆதலின் சம பிறப்புரிமையைச் சிறப்புறப் பேணுவதே முறை.

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும், சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"

# தமிழ்நாடு காங்கிரஸ் கூட்டம்.

## தமிழர் கடமை.

இவ்வாண்டுக் காங்கிரஸ் தேர்தல் முடிவு பொது மக்களைப் பெரிதும் ஏமாற்றமடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவரே தமிழ் நாட்டின் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார். இந்நாட்டின் தமிழர் தவப் புதல்வர்களுள் தலைபாயராய் மிளிர்ந்த மூவர் சென்ற ஆண்டே விலகிக்கொண்டு விட்டார் அகில இந்திய சுயராஜ்யக் கட்சியின் பிரதம கொறடாவாய உயர்திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் சென்ற ஆண்டு காரியதரிசி பதவியை பேரளவிலாதல் வகித்து வந்தார்கள். இன்னார் பெயரிருந்ததும் காங்கிரஸுக்கு அத்துணைப் பெருமையும் பரிசுத்தமுமாய் இல்லை என்றெண்ணி அவர் கழுவவிடப்பட்டார். தமிழ் நாட்டுக் காரியக் கூட்டத்திற்கும், அகில இந்திய காங்கிரஸ் பஞ்சாயத்திற்கும் பெரும்பான்மையோர் இரண்டிலும் ஸ்தானம் வகித்து வருகிறார்கள். இரண்டிலும் சட்டசபை ஆட்களே பெரிதும் செறிந்து நிகழ்கின்றார்கள். படித்த பணக்காரக் கூட்டத்தார் காங்கிரஸைத் தம் வயப்படுத்திக் கொண்டனர். உண்மையாக கிராமங்களில் நாட்டுக்குரிய தொண்டாற்றுவோர் எவராதல் உளரோ என்று தேர்தல் நிரலைத் துருவித் துருவிப் பார்த்தும் காணாது சலித்துப்போய் வைத்துவிட்டோம். இவற்றிலிருந்து அடுத்த ஆண்டுக் காங்கிரஸ் வேலை பிரசங்கத்திலும், சட்டசபை ஸ்தல ஸ்தாபன வேட்டையிலும் முடிந்துவிட்டதென்பது ஒருதலை. காரியக் கூட்டத்திற்கு ஆறு பார்ப்பனர்களும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு ஒன்பது பார்ப்பனர்களும் தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கிறார்கள். நிருவாகக் கூட்டத்தில் சென்னை ஆட்கள் பத்து பேர் இருக்கின்றனர் (பாதிக்குமேல்) அகில இந்திய காங்கிரஸிலும் சுமார் பாதிப்பேர் சென்னை வாசிகள். ஜில்லாவிற்கொருவர் விதம் பிரதிநிதித்துவம் வாய்ந்த காரியப் பஞ்சாயத்து தெரிந்தெடுக்க வேண்டும் என்ற காங்கிரஸ் விதி எங்குற்றதோ தெரியவில்லை. சென்னையிலே சென்ற ஆண்டு எல்லாக் கூட்டங்களும் கூட்டிக் கொள்ளப்பட்டன. இவ்வாண்டும் அங்கேயே கூட்டத்தைக் கூட்டிக் கொண்டு சர்வாதிகாரம் செய்யலாம். கள் குடிக்கலாம் என்று ஒரு பார்ப்பனர் சொன்னால் ததாஸ்து என்று எல்லோரும் கைதூக்கிவிடுவர். இனிமேல் தமிழ் நாட்டுக்குக் கூட்டமும் வேண்டியதில்லை; கூடி வாதித்து [illegible] கஷ்டப்பட வேண்டிய கவலையு[illegible]. திரு. சீனிவாசய்யங்கார் [illegible] பாத்திரமான் பரிசுத்தமான [illegible] தெரிந்தெடுத்தான் [illegible]

[illegible] அறிவே சக்தி, அறமே நெறி.

கிறதென்பதற்கு என்ன தடை! திருவாளர்கள் திருகூட சுந்தரம், பாவலர், அண்ணாமலை, குப்புசாமி, வீரப்பன், ஆகியவர்கள் முறியடிக்கப்பட்டதன் இரகசியம் விளங்கவில்லை.

ஆங்கிலேயர்கள் எப்படி சட்ட சபைக்கு எவ்வாற்றானும் பெரும்பான்மை சம்பாதித்தோ, அல்லது கலைத்தோ ஆட்சி நடாத்தி விடுகிறார்களோ அதைப் போன்றே பெருக்கு ஒன்றிரண்டு பார்ப்பன ரல்லாதாரை கூலிக்காதல் பிடித்து உடன் வைத்துக் கொண்டு, காங்கிரஸ் பெயரைச் சொல்லி இந்தியாவையே ஆண்டுவிடலாம் என்று பார்ப்பனர்கள் முடிவு செய்து விட்டார்கள். தெரிந்தோ, தெரியாமலோ திருவாளர்கள் நாயுடு, நாயக்கர், முதலியார் ஆகியோர் விலகியது தமிழ் நாட்டிற்கே, ஏன் காங்கிரஸிற்கே (தேசத்திற்கே) பெருத்த கேட்டை விளைவித்து விட்டதென்று கூறுவது பிழையாகாது. தமிழர் வீரர்தான்; திறமையுள்ளவர்களே, சுயமரியாதை அவர்கட்குண்டு; ஆரியர் அவர் எதிர் நிற்க இயலாது. ஆனால் இவற்றை உண்மைப்படுத்த பிணங்கிய தலைவர்கள் வல்லே பிரசாரத்திற்கு விழுந்துகொண்டு புறப்படுதல் வேண்டும். முதலில் பார்ப்பனரிடமிருந்து அரசியலியக்கத்தை நம் வயப்படுத்தல் மிக மிக அவசியமாகும். பின்னர் வெள்ளையரிடமிருந்து இந்தியாவை நம் வசப்படுத்துதல் எளிதாகும். இவற்றிற்கெல்லாம் ஒத்துழையாமையே உத்தம ஆயுதம் என்பதை எவரும் மறுத்தல் இயலாது. தமிழர் வீறுகொண்ட விழிப்புத் தழுச்சி எமது தவம் விளக்கும் திரு தண்டபாணி பிள்ளையவர்களைத் தாக்கியது உங்களை அறை கூவி அழைக்கவில்லையா? உண்மை இரத்தோட்டமுள்ள தமிழ் மக்களே! நீங்கள் இனிமேலும் உறங்குதல் நேரிதாகாது; அறிவுடைமையாகாது; எழுங்கள்; இன்னே விழித்தெழுந்து காரியம் கைகூடும்வரை சலியாது உழைப்புகள்! "தமிழன்"

---

## பகிரங்கக் கடிதங்கள்.

---

1. விவசாயக் கமிஷனரவர்கள் சென்னை.

ஐயா,

இந்தியநாட்டு மக்களின்மீதும், பயிர்த்தொழிலின்மீதும், இந்திய அரசாங்கத்தினரும் தாங்களும் கொண்டுள்ள கருணைக்கு நாம் மிக்க நன்றி பாராட்டுகிறோம். தங்களுடைய விசாரணையில் இதுவரையில் சாக்ஷியம் கொடுத்தவர்களெல்லாம் M. L. C. சிலரும், பட்டதாரிகள் சிலரும், பணக்காரர்கள் சிலரும், B. A. B. L. சிலரும் பயிர்த்தொழிலின் உண்மையை அறியாதவர்கள் சிலருமாகவே இருக்கின்றனர். இவர்களிற் பலர் தங்களுடைய படிப்பறிவைக் கொண்டும், கேள்வி அறிவைக்கொண்டுமே பெரும்பான்மையாகச் சாக்ஷியம் கூறியுள்ளார்கள். இவைகளும் ஒருவாறு ஒப்புக்கொள்ளக் கூடியதே. ஆனாலும், நெற் பயிரை நிலத்தில் [illegible] பயிரிட்டுப் பல ஆண்டுகளாகப் பயிர்த்தொழில் அனுபவம் பெற்றுள்ள கிராமாந்தரங்களில் வசிக்கும் ஏழைக் குடியானவர்களுடைய சாட்சியம் தங்களுக்கு அவசியமில்லையென்று நினைத்துவிட்டீர்களா? இல்லையாயின் இதுவரை எத்தனை விவசாய கிராம வாசிகளின் சாக்ஷியத்தைக் கேட்டிருக்கின்றீர்கள்? அல்லது இனியேனும் கேட்க முயற்சிப்பீர்களாவென்றறிய விரும்புகிறோம்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணிவாசகத் தமிழகம்,"
திருச்சிராப்பள்ளி.

---

மேன்மை தங்கிய கவர்னரவர்கள் சென்னை.

ஐயா,

இந்தியாவிலுள்ள 31½ கோடி ஜனங்களில் 100-க்கு 97 பேர் விகிதமுள்ள எல்லா வகுப்பு மக்களையும்விடத் தாங்களே உயர்ந்தவர்கள் என்று மமதையோடு கூறி பல ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வருகின்ற 3 விகிதமுள்ள பார்ப்பனர்களில் 7, 8 பார்ப்பனர்கள் தாளம்போடுவதற்காகச் சில பார்ப்பனரல்லாதாரையும் சேர்த்துக்கொண்டு சுயராஜ்யக் கட்சியென்று கூறி நாளையே சுயராஜ்யம் வாங்கி சமயுக்தியோடு உங்களுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று வாய்ப்பறை சாற்றித் தங்களுடைய பார்ப்பனப் பத்திரிகைகளின் பலத்தால் இந்தியாவை விண்புரளி பண்ணிவருவதைத் தாங்கள் அறிவீர்களா? இத்தகைய கட்சிக்குச் சென்னை சட்ட சபையில் 48 மக்கள் முட்டுக்கட்டை போடக் குவிந்துவிட்டார்கள் என்று பார்ப்பனப் பத்திரிகைகள் கண்ணும் முன்னும் தெரியாமல் கூத்தாடுவதைத் தாங்கள் அறிந்திருக்க முடியுமோ? அவ்விதமானால் அப்பத்திரிகைகள் கலம் போட்டு எழுதியிருக்கின்ற 48 பேர்களையும் தனித்தனியாக நீங்கள் எத்தனை வருஷ காலமாக அரசியலில் ஈடுபட்டிருக்கின்றீர்கள்? சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து எத்தனை வருடகாலமாயின? தாங்கள் காங்கிரசில் அல்லது சுயராஜ்யக் கட்சியினர் என்று கூறப்படுவது உண்மையா? எலெக்ஷனுக்கு முன்பு தாங்கள் எந்தக் கட்சியிலிருந்தீர்கள்? தேர்தல் காலத்தில் கலெக்டரிடம் எந்தக் கட்சியைச் சார்ந்தவர் என்று கூறினீர்கள்? இப்பொழுது எப்படி இருக்கின்றீர்கள்? என்று விசாரித்ததுண்டா? அல்லது அத்தகைய அவசியம் ஏற்படவில்லையா? விசாரித்ததுண்டானால் 48 பேர்களில் எத்தனை பிரிவு உண்டு? பிரிவு ஒவ்வொன்றிலும் எத்தனை பெயர்கள் உண்டென்பதை அறிவிக்க முடியுமா? தந்திரமும் சூழ்ச்சியுமுடைய பத்திரிகைகளை நாம் நம்பமுடியவில்லையாதலாலும் அப்பத்திரிகாசிரியர்களை இக்கேள்விகளைக் கேட்டும், மௌனத்தைத் தவிர வேறு விதமான பதில்களைப் பெறமுடியவில்லையாதலாலும் தங்கள் மூலமாகவேனும் அரசியல் முறையில் தற்கால ராஜீயக் கட்சிகளின் போக்கின் நிலைமையறிந்து கொள்ளப் பொதுஜனங்கள் மிக்க ஆவலுடன் காத்துக்கொண்டிருக்கின்றனர் என்பதை அறிவித்துக்கொள்ளுகிறோம்.

கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
"மணிவாசகத் தமிழகம்,"
திருச்சிராப்பள்ளி.

## ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

சீரிய அறிவாற் சிறக்குமெய்த்தலைவ! தமிழ்நாட்டுத் தவப்பெரும் புதல்வ!! தனக்கென வாழாத்தகைபெறுஞ் செல்வ!!! ஆஸ்திரேலியாவினின்றும் திரும்பிய தங்கள் வரவு நல்வரவாகுக. பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஓர் வெள்ளையரது நாட்டிலே, வெள்ளையரின் கூட்டத்திலே, தாய் நாட்டிற்கென, கல்லுங் கரையுமாறு, உருகிப் பேசிய தங்களது ஒவ்வொரு சொல்லும் எமது உள்ளத்தை ஈர்க்கின்றது. தாங்கள் கழறிய ஒவ்வொரு மொழிகளிலும் சுயமரியாதை அவாவும், சுதந்திர விடாயும் ததும்பிக் கிடப்பதைக் காண ஒவ்வொரு இந்தியரின் உள்ளமும் உருகுகின்றது. சுயேச்சையென்னும் மமதையில் மூழ்கிக்கிடக்கும் வெள்ளையரின் மத்தியில் தங்களை ஆதரிப்பதற்கு ஓரிந்தியர்கூட இல்லாத ஒரு சபையில், எல்லோரையும் தன் வழிக்குத் திருப்பும்படியாகப் பேசிய தங்களுடைய ஆற்றலைக்கண்டு அவ்வெள்ளையரே இறும்பூதெய்தினராயின் யாம் அதை யென்னென்று சொல்லுவது. காலையில் கிழக்கினின்றும் வீசுகின்ற கதிரவனது கிரணங்கள் பகலேற ஏற உலகெங்கும் பரவுவதுபோல் இன்று கீழ்த்திசையில் ஆஸ்திரேலியாவில் தோன்றிய தங்களது புகழொளி அதிவிரைவில் உலகெங்கும் பரவக் கடவது.

நிற்க. ஆஸ்திரேலியாவில் செய்த வேலையால் இந்திய மாதாவிற்குத் தாங்கள் ஆற்றிய தொண்டை இந்நாட்டு மக்கள் கட்சிபேதமின்றி எல்லோரும் புகழ்கின்றனர். ஆனால் தென்னாட்டிலுள்ள ஒருவகுப்பாருக்குமாத்திரம் தங்கள் அரிய தொண்டை அங்கீகாரம் செய்ய மனமில்லை. ஏன்? தங்கள் பிறவிதான் காரணம். அவ்வகுப்பு பத்திரிகைகளும் பிரமுகமாகவிருந்துவிட்டன. தம் சாதியில் பிறந்த ஒருவர் உங்களைப்போலவே சற்றேறக்குறைய அதே காலத்தில் அதேபோல் பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஒரு வெள்ளையரின் நாட்டில் அவர்கள் மத்தியில, தான் இந்தியரின் மனோபாவத்தை நன்குணர்ந்தவர்போல், இந்தியரின் சார்பாகப்பேச யாதொரு அருகதையுமில்லாதிருந்தும், இந்தியரின் சார்பாகப் பேசியது, "எங்கள் நாடு வெள்ளையரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொள்ளுகிறது. தன் விடுதலைக்கு ஊழிகாலம்வரையில் காத்திருக்கும். நாங்களெல்லோரும் உங்கள் நாகரீகத்தைக் கைக்கொள்ளுகிறோம். உதாரணமாக என் மகள் தலையைக் கத்தரித்துக்கொள்ளுகிறாள். தென்னமரங்கள் உள்ளவரையில் நாங்கள் குடித்தே தீருவோம்" எனும் புன்மொழிகளைப்பேசி தன்னை இந்திய ஆடவருக்கு ஓர் உதாரணமாகவும், தன் மகளை இந்திய மாதருக்கு ஓர் உதாரணமாகவும் எடுத்துக்காட்டி இந்தியாவிற்கு இழிவைத் தேடிவந்த ஒருவரைப்பற்றி அவர் இந்நாடுவிட்டுச் சென்றது முதல திரும்பி வந்ததுவரையில் அவரைப் பற்றிய எல்லாத் தகவல்களையும் பத்தி பத்தியாக எழுதி அவருக்கோர் புகழைத்தேட விழைந்தன அப்பத்திரிகைகள். ஆனால் சொந்த செலவில் சென்ற அதேபோல ஒரு வெள்ளையரின் கூட்டத்தில் தனிமையாக நின்று இந்தியரின் உயர்ந்த நாகரீகத்தை எடுத்துச் சொல்லி "உமக்கிடையில் சமமாக உயிர்வழங்க எமக்குரிமையுண்டேல், உம்முடன் சமமாக உயிர்வாழ எமக்குரிமைவேண்டும். கருப்பு நிறத்தவரான இயேசுநாதரை தொழும் நீங்கள் எங்களைமாத்திரம் நிறவித்தியாசம் பாராட்டக்கூடாது" என்ற பொன்மொழிகளைப்பேசி தங்களது வாதத்தை அவ்வெள்ளையரெல்லோரும் நியாயரீதியாக ஒப்புக்கொள்ளும்படிச்செய்த தங்களது போக்குவரவு தகவல்களை எவ்வளவு இழிமுறையில் பிரசுரிக்கலாமோ அவ்வளவு இழிமுறையில் பிரசுரித்தன அப்பத்திரிகைகள். இதற்குக் காரணம் உங்களுக்கு ஒரு புகழுண்டாக்கக் கூடாதென்னும் சாதி வித்தியாசமேயாகும். தாங்கள் புகழ்விரும்பவில்லையென்பதையும், ஒருவர் எவ்வளவு விரும்பாவிட்டாலும் கிழக்கில் தோன்றும் ஞாயிற்றின் ஒளிகாலப் போக்கில் பன்மடங்கதிகரித்துப் பிரகாசிக்கும். மேற்கில்தோன்றும் ஞாயிற்றின் ஒளியோ ஒருவர் எவ்வளவு விரும்பினாலும் சிறிது பொழுதில் மங்கி மடிந்துவிடுமென்பதையும் நாமறிவோம். பின்னர், இனியாவது தாங்கள் பார்ப்பனர் தம் மனப்பான்மையை யுணரவேண்டுமென்றே இதை எழுதினோம். இன்னும், தம் சாதியாரிலொருவர் ஒரு தூதுக் கூட்டத்தில் அங்கத்தவராகத் தெரிந்தெடுக்கப்பட்டமாத்திரத்தில் அச்சாதிப் பத்திரிகைகள், அவர் சாதிக்கும் காரியம் தெரியுமுன்னர், அவரை வானமளாவப் புகழ்ந்தன துதித்தன. தூதுக்கூட்டத்தின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்படவில்லையென்று ஒரு புடைசிற்றமடைந்தன. ஆனால் கைச்செலவில் இந்திய ஜனப்பிரதிநிதிகளின் பிரதிநிதியாய்ச் சென்று இந்தியாவிற்கு அழியாப் புகழைத்தேடி மீண்ட தங்களை வரவேற்பதற்கு அப்பத்திரிகைகளுக்கும் அக்கூட்டத்தலைவர்களுக்கும் மனமொப்பவில்லை. சில பார்ப்பனப் பத்திரிகைகள் வரவேற்றுபசரித்திருக்கின்றதே யென்றால் தாங்கள் இந்நாட்டிற்கு மீண்டுவிட்டதால் இனி தங்களை தம் வலைக்கு இழுக்கும் நோக்கத்தாலேயேயாகும். அதிலும் அவையெழுதியுள்ள வாசகம்கூர்ந்து நோக்கற்பாலது. உண்மையில் தங்கள் ஊழியத்தை அங்கீகரிக்க பார்ப்பனர்கள் விரும்பியிருப்பார்களேயாயின் தங்களை தமிழ்நாடு மாகாண மகாநாட்டிற்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருப்பர். ஆனால் தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியாக மீண்டும் தேர்ந்தெடுக்க அருகதையற்றவரெனக் கருதியதோடு முதல் நாள் மாகாணக் கமிட்டியாரால் அளிக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர் பதவியையும் மறுநாள் சீமான் சீனிவாசய்யங்கார் தம் எதேச்சாதிகாரத்தால் பறிமுதல் செய்துவிட்டார் (இவர்கள்தான் ஜனநாயக முறை (Democracy)க்குப் பாடுபவர்கள்.

இனி, இதுகாறும் கூறிப்போந்தவற்றை நன்கு சிந்தித்த பின்பே வருங்காலத்தில் தாங்கள் நடந்துகொள்ளவேண்டியமாதிரியைப்பற்றித் தீர்மானிக்கவேண்டும். தேர்தல் காலங்களில் தாங்கள் இவ்விடம் இருந்திருந்தால் அநேக விநோதங்களைக் கண்டிருக்கலாம். அவற்றை இங்குகூற இடமில்லை. நண்பர்களைக்கேட்டுணருங்கள். தென்னாட்டினின்றும் இந்தியா சட்டசபைக்குச் செல்லும் சுயராஜ்யக் கட்சியங்கத்தினர் பதினொருவர். இதில் மகமதிய கனவான் ஒருவர் நீங்க இந்துக்கள் 10 பேர். இதில் 8 பார்ப்பனர்களும் இரு பார்ப்பனரல்லாதார்களும் உளர். இவ்விரு பார்ப்பனரல்லாதாரும் ஆந்திர தேசத்திற்கு ஒருவரெனவும், தமிழ் நாட்டுக்கு ஒருவரெனவும் பாவித்து பார்ப்பனர்களால் உலகத்துக்குப் பயந்தோ பாவ புண்ணியத்திற்குப் பயந்தோ வழங்கப்பட்டுள்ளது. சென்னை சட்ட சபையிலோ சுயராஜ்யக் கட்சியின் சார்பாகத் தமக்கென 100-க்கு 35-வீதம் வைத்துக்கொண்டு மிகுந்தவற்றை பார்ப்பனரல்லாதாருக்குத் தாராளமாக வழங்கிவிட்டனர். நாம் தங்களுக்கு வகுப்புணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்று இதை யெழுதவில்லை. ஆனால் தாங்கள் இதிலிருந்து ஒரு விஷயத்தைத் தெளிய வேண்டுமென்பதே எமது கருத்து. அதாவது நூற்றுக்கு மூன்று வீதமுள்ள தம் ஜாதியினருக்குக் கிடைப்பதைவிட நூற்றுக்கு தொண்ணூற்றேழு வீதமுள்ள பார்ப்பனரல்லாதாருக்கு (இந்தியா சட்ட சபையில்) 4-ல் ஒரு பாகம் கிடைத்தால் போதுமென்பதும் (சென்னை சட்ட சபையில்) இருவருக்கும் சற்றேறக்குறைய சமமாக இருக்க வேண்டுமென்பதும் பார்ப்பன நியாயம். இதை தாங்கள் ஒப்புக் கொள்ளுகிறீர்களா? தாங்கள் கோயம்புத்தூர் சேலம் ஜில்லாக்களுக்குப் பிரதிநிதியாக தெரிந்தெடுக்கப்பட்டிருந்தபோதிலும் பார்ப்பனர்களின் ஒரு செய்கையால் தமிழ் நாடு பூராவுமுள்ள பார்ப்பனரல்லாதார் யாவருக்கும் தாங்களே பிரதிநிதியாய்விட்டீர்கள். ஆகையால் மேற்கண்ட த்வித நீதியைத் தாங்கள் ஒப்புக்கொள்ளச் சித்தமாகவிருந்த போதிலும் தமிழுலகம் அதை விரும்பவில்லையென்று உறுதியாகச் சொல்லுகிறோம். ஆகையால் தமிழ் நாட்டுக்கே ஓர் இழிவைத் தருகின்ற ஒரு கட்சியினின்றும் விலக வேண்டுமென்பதே தமிழ் நாட்டின் விருப்பம். அவ்விருப்பத்தைப் பூர்த்தி செய்து வைப்பது தங்கள் கடமை. அதுவே எமது விண்ணப்பமும்.

சுயராஜ்யக் கட்சியினின்றும் தாங்கள் விலகுவதால் தங்களுக்குத் தேசபக்தியில்லையென்று ஒருவரும் கூறமாட்டார்கள். தங்களுடைய தேசபக்தி சென்ற ஆறு வருஷத்தில் தாங்கள் சட்ட சபைகளில் செய்த வேலையினின்றும் சென்னாட்குமுன் ஆஸ்திரேலியாவில் நிகழ்த்திய சொற்பெருக்கினின்றும் நிரூபிக்கப்பட்டுவிட்டது. மேலும் சுயராஜ்யக கட்சியில் சேராதவர்கள் தான் பெருந்தேசபக்தர்கள் தியாகிகள் என்னும் பொது ஜன அபிப்பிராயத்தை இந்தியா சட்டசபை பொதுத் தேர்தல் முடிவு காண்பிக்கின்றது. இனி, சுயராஜ்யக் கட்சிக்குள்ளிருந்தால்தான் தங்களுக்கு வேலையுண்டென்று எண்ணுதீர்கள். ஸ்ரீமான்கள் லாலாலஜபதிராய் ஜயகாராதியோர் சட்டசபையில் வேலைசெய்

# புலர்ந்தது; புலர்ந்தது.

(பண்டிதர் அ. கிருஷ்ணசாமி நாயுடு எழுதுவது)

"பொழுது புலர்ந்தது யாம்செய்த
தவத்தால்
புன்மையிருட்கணம் போயின தெங்கும்"

எனப்பரந்த புன்மை படைத்த பாரதியார் பாடல் பரவும் பகலும் பார்ப்போமா? என்று எண்ணி ஏங்குவதற்கா பாரதியார் பாடினர். யாம்செய்த தவத்தால் ஓர்நாள் பொழுது புலரல் வேண்டாமா? எங்கும புன்மையிருட்கணம் போதல்வேண்டாமா? அது எப்பொழுது? எப்பொழுது? கைகட்டி வாய்பொத்தி வாளாமுகங் கவிழ்ந்து வீற்றிருப்பின் அந்நாள் "இன்று; இன்று" என எதிர்மறையில் எழுதி ஆண்மையின்மையைக் குறித்து அழிந்துபோவோமோ? "இன்று இன்று" என்பதை "இன்றைக்கு இன்றைக்கு என்னும் காலப் பொருளில் குறித்து வீறுபெற்று நிற்றல் வேண்டாமா? அங்ஙனம் நின்று நோக்கின் பொழுது புலர்ந்தது புலனுதும் அப்பொழுது கட்புலனுள்ளார்க்குப் புலனுகின்றது! ஆகின்றது.

இதுகாறும் நம்மை மூடிக்கொண்டிருந்த புன்மையிருட்கணம் எத்தகையது? அதனை ஒவ்வொருவரும் ஒவ்வோர்வகை உரைப்பர். அவற்றைத் திரட்டிக் கூறுமிடத்து ஒன்று அன்னியர் ஆட்சிக்கு அடிமையாருத்தல்; ஒன்று அன்னியர் கொள்கைக்கு அடிமையாயிருத்தல்; இவ்விரண்டும் நம்மினின்றும் நாசமாதல் வேண்டுவதே! எனினும், ஆட்சி அடிமையினும் வழக்கங்களுக்கு அடிமையானமை கொடுமை! கொடுமை!! இக்கொடிய கூரிருளைத் தொலைப்பதற்கு "குடி அரசு" என்னும் கொழுமிய சூரியன் குணக்குன்று (ஈ. வெ. ரா.) வாயினின்றும் தோன்றியுளன். அக்கதிரவன் காய்தலால் வழக்கமூட இருள் மாண்டுவிடும். பொதுவாகப் பாரதநாடு முற்றும் அடிமைப்பட்டுக கிடப்பினும் மூட வழக்கங்களுக்கு வடநாடு அத்துணை அடிமைப்படவில்லை. அம்மூட வழக்கங்களுக்கு ஆளாயினது தென்னுடே; தமிழ்நாடே.

தமிழ்நாட்டில் சாஸ்திரம் என்னும் பெயர் வைத்து எத்துணை கீழான நிலைக்குக்கொண்டுவரப்பட்டிருக்கின்ரும் உயர் திருவாளர் ஈ. வெ. ரா. அவர்கள் எழுதியாங்கு புராணப் பொய்களையும் சாஸ்திரக் கட்டைகளையும் வீழ்த்து எறிதல்வேண்டும். இதுகாறும் "குடி அரசு" என்னும் சூரியவாள் வேறு துறையில் வேலைசெய்துகொண்டிருந்தது. பாழாய்ப்போன தேர்தல் நேற்றுடன் முடிவடைந்து விட்டது. இன்று தொடங்கி நாட்டில் பிராமணியத்தை வேருடன் களைவதற்குக்கால் கொள்ளல் வேண்டும். பிராமணீயம் என்ற உடனே சில அன்பர் சீறிவிழுகின்றனர். பிராமணீயம் என்பது பிரமத்தை அறியும் தன்மை அதை ஒழிப்பது பிரம்மத்தை ஒழிப்பதற்கு ஒப்பாகும் என்பர். பிரம்ம ஞானத்தை நம்மவரினின்றும் அழிக்கவேண்டுமென்னும் அவா யாவர்க்குமின்று; பிரம்மஞானத்தை நாடெங்கும் நாம் பெறச் செய்தல்வேண்டும். பிரம்மஞானத்தை அடைவதற்கு ஒரு கூட்டமே தொன்றுதொட்டு உரிமையுள்ளதென்னும் மூடக்கொள்கையை அறவே களைதல் வேண்டும்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்று
எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான"

என்னும் தமிழ்மறையின் பொருளைத் தமிழ் நாடெங்கும் முழக்குவித்தல் வேண்டும். இதுகாலை நமக்கு இரண்டு இடையூறுகள் இருக்கின்றன. ஒன்று நம்மினும் இன்னொருவர் பிறப்பால் உயர்வு என்று உணர்ந்திருத்தல்; ஒன்று மற்றொருவர் தாழ்ந்தவரென்று மதித்திருத்தல். இம்மூடக்கொள்கைகள் இரண்டும் இறத்தல் வேண்டும். நம்மினும் உயர்ந்தவரும் இலர்; தாழ்ந்தவரும் இலர். அனைவரும் அறிவால் வேற்றுமையுற்றவர்; உடம்பால் ஒற்றுமையுற்றவர்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்
[பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்"

என்னும் திருக்குறளை ஒவ்வோர் தமிழ் மகனும், மகளும நித்தியபாராயணமாக வைத்துக் கொள்ளல் வேண்டும். இல்லங்களின் ஒவ்வோர் இடங்களினும் அத்திருக்குறளை அழகுபெற எழுதிவித்தல் வேண்டும், செதுக்குவித்தல் வேண்டும்.

உலகத்து பிறப்பனைத்தும உடம்பால் ஒற்றுமையுற்றவர் என்னும உயரிய ஞானம் கைவரப்பெறற்கு, நம்நாட்டுள்ள உயர்வு தாழ்வு தாழ்வு என்னும் இரண்டையும் இறப்பித்தல் வேண்டும். ஒன்று உரைப்பது நமக்கும் எளிது; யாவர்க்கும் எளிது. என்னை? நம்மினும் பிறப்பால் பார்ப்பனர் எங்ஙனம் உயர்ந்தவர் அல்லர் என்று எண்ணுகின்ரேமோ அங்ஙனமே பஞ்சமர் தாழ்ந்தவர் அல்லர் என்றும் கொள்ளல் வேண்டும். நம்மைப் பார்ப்பனன் இழிவாகக் கருதுகின்ருன்; நாம் பஞ்சமனை இழிவாகக் கருதுகின்ரேம். அனைவரையும் ஒழுங்குகூட்டி ஆங்கிலேயன் இழிவாகக் கருதுகின்ருன்; அடியின்கீழ் அமிழ்த்துகின்ருன். இவ்வடிமை ஆங்கிலேய அடிமை நம்மினின்றும் அகலல் வேண்டுமானுல் நாம் இன்னொருவரை அடிமையாக்கியுள்ளதை அகற்றல் வேண்டும். "தன் வினை தன்னைச்சுடும்" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. அப்பழமொழி நம்மை நாகபாசமாக வன்ரே கட்டிப் பிணித்துள்ளது. தமிழர்க்கு, தனித்தமிழர்க்கு, பிறப்பினுல் உயர்வு தாழ்வு என்ற எண்ணமோ முன்னர் இல்லை; இல்லை. பின்னர் இடைக் காலத்தில் ஆரியர் தமிழ் நாட்டிற்குள் ஆண்டிகளாய்ப் பிழைக்கவந்து குடியேறிய பின்னரே இவ்வேற்றுமைகள் விளையலாயின. ஆரியர் நம்மினும் உயர்ந்தவர் என்னும் எண்ணத்தை நம்மிடம் நிலைபெறச் செய்வதற்காக, நம்மினும் இன்னொருவர் தாழ்ந்தவர் என்னும் எண்ணமும் நம்நாட்டு நிலைபெறச் செய்செய்தல் அவசியமாயிற்று.

இத்தந்திரத்தை மந்திரமாகக் கொண்டு நமது எலும்பினும் தோலினும் குருதியினும் இவ்வேற்றுமையைப் பாய்ச்சி விட்டனர். இக்கடிய வேற்றுமை விஷத்தை நம் நாட்டினின்றும் களைதல் வேண்டும். அவ்வேற்றுமைகளால் விளைந்த இன்னல்கள் ஒன்றன்று; இரண்டன்று. அம்ம! அம்ம!! அக்கொடுமை சொல்லத் தரமோ? அடியில் வரும் திட்டத்தை தமிழ் மக்கள் கூர்ந்து கவனித்தல் வேண்டும்.

1. சிறப்பினுல் ஜாதியே யன்றிப் பிறப்பினுல் ஜாதியில்லை என்பதைத் தமிழ் நாடெங்கும் நிலை பெறுத்தல் வேண்டும்.

2 ஒரு கூட்டத்தாரே குருக்களாவதற்கு உரியர் என்பதனை மறுத்து அவ்வக்கூட்டத்தவர் தத்தமக்கு நேர்ந்த பெரியோரைக் குருவாகக் கொள்ளல் வேண்டும்.

3 எந்தெந்த ஜாதியினர் கோவில் கட்டுவிக்கின்றனரோ அந்தந்த ஜாதியினரே தங்களுக்குள் அர்ச்சகரை நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

4. கோவில்களில் ஆராதனைக்காக வடமொழியில் அர்த்தமற்ற சுலோகங்களைக் குருட்டுருவாகச் சொல்லுவதை விடுத்து திவ்யப் பிரபந்தம், தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ் மறைகளிலிருந்து பாடல் வேண்டும்.

5. மக்கள் மனத்தன்மைக்கு மாறுபட்டுப் பொருத்தமற்ற பொருளற்ற திருவிழாக்களைத் தடுத்தல் வேண்டும்.

(15-ம் பக்கம் பார்க்க.)

யப்போகின்றனரா? இல்லையா? தாங்கள் சுயராஜ்பக் கட்சியினின்றும் விலகுவதால் தங்கள் தொகுதியை எமாற்றியதாகவும் ஆகாது. எப்படியெனில் தாங்கள் போட்டியின்றியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். சுராஜ்யக் கட்சியார் தங்கள் பெயரைச் சேர்த்துக் கொண்டது தவிர வேறொரு வேலையும் தங்களுக்காகச் செய்துவிடவில்லை. தங்கள் தொகுதி (சேலம் கோயம்புத்தூர் ஜில்லாக்கள்) பொதுவாக சுயராஜ்யக் கட்சியை விரும்பவில்லை யென்பதும் சென்னை சபைத் தேர்தல் மூலமாக நன்கு விளங்குகிறது

ஆகையால் முடிவாக யாம் வேண்டுவது தாங்கள் பிராமணக் கட்சியாகிய சுயராஜ்யக் கட்சியின் சம்பந்தத்தை ரத்து செய்வதுடன் தமிழ் நாட்டுப் பார்ப்பன ரல்லாதாருக்காக உழைத்து அடுத்த தேர்தலுக்குள் தமிழ்நாட்டின் பெருமையை தேசத்தாருக்கும உலகுக்கும் காட்டமுற்பட வேண்டும். நியாயக் கட்சியில் சேர்ந்து அதற்காம் வேலைகளை இப்பொழுது முதலே செய்ய முயலுங்கள். தங்களுடைய சேர்க்கையால் நியாயக் கட்சியில் தேசீய மணம் பன்மடங்கதிகம் வீச வேண்டு மென்பதும், தாங்கள் பார்ப்பனரிடையில் அவர் தம் கையாளாக நில்லாது பார்ப்பன ரல்லாதாரிடையில் ஒரு பெருந்தலைவராக விளங்க வேண்டு மென்பதும், தங்களுடைய தியாகத்தின் பலனை பார்ப்பன ரல்லாத மக்கள் அனுபவிக்கச் செய்ய வேண்டுமென்பதும், தமிழ் நாட்டு மூவருடன் (திரு. நாயக்கர், நாயுடு, முதலியார்) சேர்ந்து நால்வரெனும் புகழ் நிலவ வேண்டு மென்பதும தமிழ் நாட்டின் பெரு விருப்பமும் கோரிக்கையுமாகும். இதைப் பூர்த்தி செய்வதைவிட தங்களுக்கு வேறு கடமையில்லை. அவ்விதம் செய்ய ஆற்றலும் துணிவும் தங்களுக்கு நல்குமாறு இறைவனை வேண்டுகின்றேன் என்று ஒரு இராமசாமி எழுதுகிறார்.

## சுயமரியாதைச் சங்க ஸ்தாபனம்.

ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சுயமரியாதைச் சங்கம் ஸ்தாபிப்பதை முன்னிட்டு நவம்பர் 28-ந் தேதிமுதல் டிசம்பர் 3-ந் தேதிவரை தென்னாட்டில் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, மதுரை முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்த காலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவுகளின் சுருக்கம்.

சகோதரர்களே!

இந்த எனது சுற்றுப்பிரயாணத்தின் நோக்கம் இன்னது என்பதை "குடி அரசு" பத்திரிகையின் மூலம் ஏறக்குறைய ஒரு வருஷகாலமாக தெரியப்படுத்திக்கொண்டு வந்திருக்கிறேன். சென்ற வருஷம் காஞ்சிபுரத்தில் நடந்த தமிழ்நாடு அரசியல் மகாநாட்டிலிருந்தே நமது சுயமரியாதையைக் காப்பாற்ற நமக்கு ஒரு தனி இயக்கம்வேண்டும் என்பதாக பலமுறை பேசியும் எழுதியும் வந்திருக்கிறேன். அவற்றை நீங்கள் எல்லோரும் ஏகமனதாய் ஒப்புக்கொண்டதாலும், வரவேற்பதாய் தெரிவித்துக்கொண்டதாலும் என்னுடைய அபிப்பிராயம் முன்னிலும் அதிகமாக பலப்பட்டது. அதை உத்தேசித்தேதான் உங்கள் விருப்பத்திற்கிணங்கி வந்திருக்கிறேன். இச்சங்கத்தின் நோக்கங்களையும் கொள்கைகளையும் இதற்கு முன் இரண்டொரு சமயங்களில் இவ்விடம் வந்தகாலத்திலும் சுருக்கமாக எடுத்துச் சொல்லி இருக்கிறேன். இந்த தேசத்தில் 22 கோடி மக்களுக்கு மேலாக இருக்கும் நாம் வெகு சொற்பமான எண்ணிக்கையுள்ளவர்களால் நாம் எவ்விதத்திலும் பொறுப்பாளிகளாயில்லாத பிறவி காரணமாய் எவ்வளவு இழிவாயும் தாழ்மையாயும் கருதப்பட்டு விலங்கு, பூச்சி, புழுகளிலும் கேவலமாய் நடத்தப்படுகிறோம் என்பதை ஒவ்வொருவரும் அறிந்தே இருக்கிறோம். இதைப் போக்கிக்கொள்வதற்காக நமது முன்னோர்கள் ஆயிரக்கணக்கான வருஷங்களாக எவ்வளவோ முயற்சித்துவந்திருக்கிறார்கள். நமது இழிவையும் தாழ்மையையும் நீக்கி நமக்கு சுயமரியாதையும் சமத்துவமும் அளிப்பதற்கென்றே கபிலர், புத்தர், ராமானுஜர் போன்ற எவ்வளவோ பெரியார்கள் அவதாரமும் செய்து இதற்காகவே உயிரையும்விட்டார்கள். எவ்வளவு செய்தும் நமது இழிவிலும் தாழ்மையிலும் சுயமரியாதையில் லட்சியமின்மையிலுமே வாழவேண்டிய இயற்கை நிலை படைத்த நமது எதிரிகள் (பார்ப்பனர்கள்) அவ்வப்போது அதற்குத் தகுந்த சூழ்ச்சிகள் செய்து நம்மில் சிலரையே தங்கள் ஆயுதமாகக்கொண்டு அம்முயற்சிகளையெல்லாம் அழித்துக்கொண்டேவந்திருக்கிறார்கள். எவ்வளவு அழித்தாலும் எவ்வளவு சூழ்ச்சி செய்தாலும் எவ்வளவு தோல்வி ஏற்பட்டாலும் மேலும் மேலும் இவ்விழிந்த தன்மைகளான கொடுமையிலிருந்து நீங்க வேண்டும் என்கிற ஆவல்மாத்திரம் நமக்கு நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே வருகிறதேயல்லாமல் குறையவேஇல்லை. அதோடு பொதுஜன அபிப்பிராயமும் ஒன்றுபோலவே இருந்துவருகிறது. ஆதலால் இவ்விழிவுகளை நீக்கி நமது சுயமரியாதையைப் பெறுவதற்கும் காப்பதற்கும் இதுவே தக்க சமயம். இவ்விஷயத்தில் நாம் எல்லோரும் ஒற்றுமையுடன் கூடி ஒரே அபிப்பிராயமாக இருந்து தீவிர முயற்சி எடுத்து உழைக்க வேண்டும். நமது முயற்சிக்கும் உழைப்புக்கும் பலவித எதிர்ப்புகளும் பழிப்புகளும் பொய்க் கற்பனைகளும் பழிகளும் நமது சுயமரியாதையின் எதிரிகளால் (பார்ப்பனர்களாலும் அவர்களது கூலிகளாலும்) ஏற்படும். அதாவது நம்மிலேயே பலர் அவர்களோடு சேர்ந்துகொண்டு தங்களது வாழ்விற்கும் வயிற்றுப் பிழைப்பிற்குமாக தேசாபிமானம் என்னும் போர்வையைப் போர்த்துக்கொண்டு நமது இயக்கத்திற்கு கேடு சூழ எதிரிகளுக்கு அநுகூலமாயிருப்பார்கள். இவைகளையெல்லாம் நாம் பொருள்படுத்தக்கூடாது. நாம் யாருக்காவது கெடுதி செய்ய நினைக்கிறோமா? யாருடைய கிரமமான உரிமைகளையாவது பறிக்கிறோமா? நமது சுயமரியாதைக்குப் பாடுபடுகிறோமே அல்லாமல் மற்றவர்கள் சுயமரியாதைக்கு நாம் விரோதிகளாயிருக்கிறோமா? நமது வீட்டிற்பொருள்கள் கொள்ளை போகாமல் நமது வீட்டுக் கதவை தாழிட்டு பந்தோபஸ்து செய்தால், நமது பொருளைக் கொள்ளை கொண்டே பிழைக்க நினைத்திருக்கும் திருடர்களுக்கு நாம் கெடுதி செய்தவர்களாவோமா? அவர்களைப் பட்டினி போட்ட பாவத்திற்காளாவோமா? இதனால் மற்றொருவனை மோசம்செய்து உயர்வாழ்வது வாழ்வல்லவென்றும் திருடிப் பிழைப்பது ஒரு பிழைப்பல்லவென்றும் திருடனுக்குத் தோன்றும்படிசெய்து அவனை கண்ணியமான தனது உழைப்பினால் வாழும்படி தூண்டுவதாகாதா? இதற்காக திருடன் நம்மேல் கோபித்துக்கொண்டால் அதற்கு நாம் என்ன செய்வது? நாம் சுயமரியாதை அடையவேண்டுமா வேண்டாமா? நமது இழிவுகளும் தாழ்வுகளும் ஒழியவேண்டுமா வேண்டாமா? என்பவைகளைத்தான் நாம் கவனிக்கவேண்டுமே ஒழிய அவர் என்ன சொல்லுகிறார் இவர் என்ன எண்ணுகிறார் என்பதைப் பற்றி நாம் அதிக கவனம் செலுத்தக்கூடாது. இப்போது சர்க்கார் சட்ட மெம்பராயிருப்பவரும் தனது சரீரத்தின் ஒவ்வொரு அணுவும் ஒவ்வொரு மூச்சும் பார்ப்பனமயமாயிருப்பவருமான சர். சி. பி. ராமசாமி அய்யர் என்கிற ஒரு பார்ப்பனரே சென்றவருஷ நாடார் மகாநாட்டில் அக்கிராசனம் வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டிருப்பதாவது.

"ராஜீகத்திலும் வியாபார விவகாரங்களிலும் ஐரோப்பியர்கள் நமக்கு மேலானவர்கள்போல நடக்கவிடக்கூடாது என்றும் சமத்துவமாகவே நடக்கச்செய்யவேண்டும் என்றும் இந்தியர்களாகிய நாம் கூறிவருகின்றோம். காங்கிரசும் முஸ்லீம் லீக்கும் ஆரம்ப முதற்கொண்டே இந்த லட்சியத்தை பல வழிகளிலும் எடுத்துரைத்து அமுலுக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றன. அப்படி இருக்கும்பொழுது அது போலவே தற்செயலாகவோ துர் அதிர்ஷ்டவசமாகவோ சமூகத்தில் தாழ்ந்தவர்களாக நம்மால் கருதப்பட்டவர்கள் உயர்ந்த வகுப்பார்களுடன் போராடி தாங்களும் அவர்களுக்கு சமமானவர்கள் என்பதை நிலைநாட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர். இந்தப் போராட்டம் கட்டாயம் நடக்கவேண்டியதுதான். இது மிகவும் அவசியமானதாகும். ஆரம்பதசையில் ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தின்மீது குரோதம் கொண்டு அதனைத் தாக்கவும் வேண்டிவரும். வழக்கம் என்னும் பேரால் இருந்துவரும் இம்மாதிரி அனுஷ்டானங்களை மாற்றி தங்கள் தங்கள் உரிமைகளை ஸ்தாபித்துக்கொள்ள முயலும்போது ஒருவருக்கொருவர் மனஸ்தாபங்களும் சச்சரவுகளும் ஏற்படுவது சகஜமே. சமூக சமத்துவங்களுக்கு இந்நிலை இன்றியமையாதது என்பதை தீர்க்க திருஷ்டி உள்ளவர்கள் உணர்ந்தே இருப்பார்கள்."

என்று பேசியிருக்கிறார். அல்லாமலும் உலகத்திலுள்ள ஒவ்வொரு தேசத்தாரும் ஒவ்வொரு மதத்தாரும் ஒவ்வொரு சமூகத்தாரும் ஒவ்வொரு வகுப்பாரும் தங்கள் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ளவும் முன்னேற்றமடையவும் தங்கள் தங்கள் தேசத்தின் பெயராலோ மதத்தின் பெயராலோ சமூகத்தின் பெயராலோ வகுப்பின் பெயராலோ ஒவ்வொரு இயக்கங்களை ஏற்பாடு செய்துகொண்டு நேர்முகமாகவோ மறைமுகமாகவோ முன்னேற்ற ஆதிக்கம்பெற முயற்சித்து வருவதை நாம் பார்த்துவருகிறோம்.

உதாரணமாக ஆசியா, ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான் முதலிய தேசத்தார் தங்கள் தங்கள் நாட்டின் பேரால் பல இயக்கங்களும் மகம்மது, கிறிஸ்து, புத்தர் முதலிய மதஸ்தர்கள் தங்கள் தங்கள் மதத்தின் பேராலும் அதாவது முஸ்லீம்கள், "முஸ்லீம் லீக்," "மஜ்லிஸ் உலாமா," "ஜெமேயதுல் உலாமா" முதலிய சங்கங்களும், எல்லா இந்திய கிறிஸ்தவசங்கம் புரொட்டெஸ்டாண்டு லீக் முதலிய சங்கங்களும் இருப்பதைப் பார்த்து வருகிறோம். அதுபோலவே நமது நாட்டில் அரசாங்கத்தாரால் மகமதியரல்லாதார் என்றழைக்கப்படும் வகுப்பாராகிய பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்று சொல்லிக்கொள்ளும் வகுப்பார்களுக்குள்ளும் பொதுவில் இந்து மகா சபை என்றும், பார்ப்பனர்களால் பிராமண மகாசபை என்றும் ஆரிய தர்மபரிபாலனசபை என்றும் வருணாசிரம தர்மபரிபாலன சபை என்றும் பல ஸ்தாபனங்களும் ஸ்தாபித்து மகாநாடுகளும் நடத்தப்பட்டு வருவதையும் அதில் தங்களது உயர்வுகளையும் ஆதிக்கத்தையும் நிலைநிறுத்தக்கொள்ளவேண்டியவைகளையும் திட்டங்களையும் தீர்மானித்து 'பிராமணன்' முதலிய பல பத்திரிகைகள் மூலம் பிரசாரத்துடன் அமுலில் நடத்திவருவதையும் பார்த்துவருகிறோம், அவர்களுக்குள் உள்வகுப்பில் ஸ்மார்த்த பிராமணர், வைணவப் பிராமணர், மாத்துவப் பிராமணர், மகாராஷ்டிர பிராமணர், சௌராஷ்டிர பிராமணர், விஸ்வப் பிராமணர் என சங்கங்களும் ஏற்படுத்தி பிரசாரங்கள் செய்து வருவதையும் பார்த்துவருகிறோம். அதுபோலவே பார்ப்பனரல்லாதார் (திராவிடர், தமிழர்)களுக்குள்ளும் பொதுவில் தென் இந்திய நலவுரிமைச் சங்கம் என்றும் பார்ப்பனரல்லாதார் சங்கம் என்றும் ஸ்தாபனங்களை ஸ்தாபித்து மகாநாடுகள் கூட்டி அதற்கேற்ற கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து பிரசங்கங்கள் மூலமாகவும் "ஜஸ்டிஸ்", "திராவிடன்" முத

லிய பத்திரிகைகள் மூலமாகவும் பிரசாரங்கள் செய்து வருவதையும் சைவ சமயச்சங்கம், வைணவ சமயச்சங்கம் என்றும் மற்றும் உள் வகுப்புகள் பேரால் ஆதித்திராவிட சங்கமென்றும், சோழிய வேளாள சங்கமென்றும், தொண்டைமண்டல வேளாள சங்கமென்றும், கொங்கு வேளாளச் சங்கமென்றும், வன்னியகுல க்ஷத்திரிய சங்கமென்றும், பலிஜவாரு சங்கமென்றும், கம்மவாரு சங்கமென்றும், பார்க்கவகுல சங்கமென்றும், முக்குலத்திய சங்கமென்றும், சேனைத்தலைவர் சங்கமென்றும், அருந்ததியர் சங்கமென்றும், மருத்துவர் சங்கமென்றும், குலாலர் சங்கமென்றும், இந்திரகுலாதிபர் சங்கமென்றும், ரசபுத்திரர் சங்கமென்றும், தனவைசிய சங்கமென்றும், ஆரிய வைசிய சங்கமென்றும், காசுக்கார செட்டியார்கள் சங்கமென்றும், பன்னிரண்டாம் செட்டியார்கள் சங்கமென்றும், ஐந்நூற்றுச் செட்டியார் சங்கமென்றும், அறுபத்திநாலுமனை செட்டியார் சங்கமென்றும், இருபத்திநாலு குலச் செட்டியார் சங்கமென்றும், விஸ்வகர்ம சங்கமென்றும், சிவாச்சார்கள் சங்கமென்றும், இன்னும் இதுபோன்ற எத்தனையோ வகுப்பார்கள் சங்கங்களை ஸ்தாபித்துக்கொண்டு தங்களது குறைகளைப் போக்கிக்கொள்ளவும் அன்னியர்களால் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் இருந்து தப்பிக்கொள்ளவும் தங்களது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் தடையாயிருக்கும் சாதனங்களை விலக்கவும் முயற்சிக்கு வருவதையும் பார்த்துவருகிறோம். இப்படிச் செய்துவருகிற சிலசமயங்களில் மற்றொரு சமூகத்தாருக்கு அதிருப்தியைக் கொடுக்கக்கூடியதாகவிருந்தாலும் இருக்கலாம். அதற்காக மற்றவர்கள்மேல் குற்றம் சொல்வதில் பொருளில்லை. உதாரணமாக ஆரியர்களாகிய பார்ப்பனர்கள் ஆரியதர்ம பரிபாலன சபை மூலமாயும் வருணாசிரம தர்மபரிபாலன சபை மூலமாயும் என்ன கோருகிறார்கள்? வருணாசிரம தர்மம் நிலைக்க வேண்டுமென்றும், தாங்கள் உயர்ந்த ஜாதியார்கள் என்றும், மற்றவர்கள் சூத்திரர்கள் (தங்களது வைப்பாட்டி, வேசி மக்கள்) என்றும், பஞ்சமர்கள் (சண்டாளர்கள்) என்றும உள்ள தர்மம் நிலைத்திருக்க வேண்டுமென்றும், இச்சூத்திரர்களும் பஞ்சமர்களும வருணாசிரம தர்மத்துக்கு விரோதமாய் சுயமரியாதை அடைய விரும்புவதும், சமத்துவமும் சுதந்திரமும் அடைய விரும்புவதும் தங்களது ஆரியதர்மத்திற்கு கெடுதி என்றும் வருணாசிரம தர்மமும் ஆரிய தர்மமும் காப்பாற்றப்படவேண்டுமென்றும், சூத்திரத் தன்மையையும் பஞ்சமத் தன்மையையும் மறையவிடக்கூடாது என்றும் அதை மறைக்கச்செய்ய ஏற்படுத்தப்படும் இயக்கங்களுக்கும் முயற்சிகளுக்கும் விரோதமாயிருந்து பலவித சூழ்ச்சிகளாலும் தந்திரங்களாலும் அவ்வியக்கங்களையும் முயற்சிகளையும் அழிக்கவேண்டும் என்றும் பேசி அதற்கு வேண்டிய தீர்மானங்கள் செய்வார்களே ஒழிய தங்களது வர்ண ஆச்சிரம தர்மங்களை கெட ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள். அதுபோலவே மற்ற வகுப்பார்களும் முன்னேறி தங்களது பிறப்புரிமையான சுயமரியாதையையும் சமத்துவத்தையும் வேண்டுமானால் அதற்கெதிராயுள்ள ஆரியதர்மமும் வருணாசிரம தர்மமும் தங்கள் தோளில் ஏறுமலும் அதனால் தங்களுக்கு கெடுதி ஏற்படாமலும் எவ்வளவு தூரம் தடுக்கவேண்டுமோ அவ்வளவு தூரம் தடுக்கவேண்டியதுதான். ஆரிய தர்மக்கொள்கைகளும் வருணாசிரம தர்மக்கொள்கைகளும் நமது சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும் எவ்வளவு தூரம் கொடுமை இழைக்கின்றன என்பதை வெளியிலெடுத்து சொல்லவேண்டியதுதான். இதனால் ஒருவரையொருவர் துவேஷமென்றோ துரோகமென்றோ சொல்லிக்கொள்வது கொஞ்சமும் பொருந்தாது. ஆனால் செல்வாக்கில்லாதவர்களின் சுயமரியாதைக் கொள்கை செல்வாக்குள்ளவர்களின் சுயநலக்கொள்கைக்கு விரோதமாயிருக்குமானால் அச்செல்வாக்கின்மூலம் செல்வாக்கில்லாதவர்களுக்குப் பல கெடுதிகளும் இடையூறுகளும் ஏற்படுவது சகஜம்தான். உண்மையாக சுயமரியாதைக்கும் சமத்துவத்திற்கும உழைப்பவர்கள் இவைகளுக்குப்பின் வாங்கக்கூடாது வருவது வரட்டுமென்று தைரியமாய் தலை கொடுக்கவேண்டும். உதாரணமாக நமது சுய மரியாதைக்கும், சமத்துவத்திற்கும் என்று கவலை எடுத்து அதில உள்ள கஷ்டங்களை நாம் வெளியிலெடுத்துச்சொல்ல ஆரம்பித்தவுடன், பார்ப்பனர்களால் பிராமணத் துவேஷிகள் என்றும், வகுப்புவாதக்காரர்கள் என்றும், தேசத்துரோகிகள் என்றும், நாஸ்திகர்கள் என்றும் குற்றம் சொல்லப் பட்டுவிட்டோம். இதையும நமது பாமர ஜனங்கள் நம்பும்படியாகவும் ஆகிவிடுகிறது. காரணம என்னவென்றால் தற்கால அரசியலிலும வைதிகத்திலும் பார்ப்பனர்களுக்கு செல்வாக்கும் ஆதிக்கமும் இருப்பதுதானே ஒழிய வேறில்லை.

அச்செல்வாக்கும் ஆதிக்கமுமே நமக்கு இவ்வளவு கொடுமைகள் இழைக்க இடம் கொடுக்கிறது. முதலாவது வகுப்பு வாதமும் வகுப்பு துவேஷமும் நம்மிடம் எங்கே இருக்கிறது. பிராமணர் பிராமணரல்லாதார் என்கிற பிரிவினையாரிடமிருந்து உண்டாயிற்று.

கோவில்களிலும் தீர்த்தங்களிலும் நதிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் வாசம் செய்யும தெருக்களிலும் ஓட்டல்களிலும் காபிக்கடைகளிலும் பிராமணர் சூத்திரர் என்கிற பிரிவும் முறையே உயர்வு தாழ்வு என்கிற பாகுபாடுகளும் பார்ப்பனரல்லாதாராகிய நம்மால் ஏற்பட்டதா அல்லது பார்ப்பனர்களால் ஏற்பட்டதா என்று யோசித்தால் நம்மை யாராவது வகுப்பு துவேஷி என்றோ வகுப்பு வாதக்காரர் என்றோ சொல்ல முடியுமா?

பார்ப்பனர்கள் தங்கள் உயர்வையும் ஆதிக்கத்தையும் உண்டாக்கிக் கொள்வதும நம்மை தாழ்ந்த நிலையிலும் இழி தன்மையிலும இருக்கும்படி செய்வதும் கொஞ்சமாவது குற்றமென்று அவர்கள் நினைப்பதில்லை. ஆனால் நாம் அவர்களால் தாழ்மையாயும் இழிவாயும் கருதப்படாமல் சமத்துவமாய் சுயமரியாதையுடன் நடத்தப்பட வேண்டுமென்று நினைப்பது மாத்திரம் குற்றமாய் விடுகிறது,

எப்படியெனில் ஆரிய தர்ம பரிபாலனம் வருணாசிரம தர்ம பரிபாலனம் இதனால் தீண்டாமை சூத்திரன் இவைகள் நிலைத்திருப்பது ஆகியவைகள் தெய்வீக இயக்கம் ஆஸ்திக இயக்கம் என்கிறார்கள். சூத்திரன் தீண்டாமை ஆகியவைகள் ஒழிக்கும் இயக்கம் நாஸ்திக இயக்கம் பிராமணத் துவேஷ இயக்கம் என்று சொல்லுகிறார்கள்.

2. நம்முடன் அவர்கள் பேசுவதும் நம்மை அவர்கள் பார்ப்பதும் அவர்களுக்கு பாவம் தோஷம் என்கிறார்கள். ஆனால் நாம் அவர்கள் காலில் விழுவதும் சுவாமி என்று கும்பிடுவதும் நமக்கு புண்ணியம் என்கிறார்கள்.

3 நாம் தொட்டதையோ பார்த்ததையோ நமக்கு கொடுத்த பிறகு அவர்களுக்கு கொடுப்பதையோ தோஷம் என்கிறார்கள். அவர்கள் எச்சிலையோ கால் கழுவின தண்ணீரையோ நாம் சாப்பிடுவது மோக்ஷம் என்கிறார்கள்.

4 நம்மோடு அவர்கள் பேசும் போது அவர்களது பூணூலை காதில் சுற்றிக் கொள்வார்கள். (ஏனென்றால் பார்ப்பனர்கள் மலஜலம் கழிக்கும்போது அவர்களது சரீரம் அசுத்தமாய் விடுகிறபடியால் அசுத்தப்பட்ட சரீரத்தில் பூணூல் தரித்திருப்பது தோஷம். ஆதலால் காதில் சுற்றிக்கொண்டு இருந்து தேக பரிசுத்தமான பின்பு தோளில் போட்டுக் கொள்வார்கள். அதுபோலவே சூத்திரனுகிய நம்முடன் பேசும் போதும் அவர்களது தேகம் அசுத்தப்பட்டுப் போகிறதாம்.)

நாம் அவர்களுடன் பேசும்போது வாய் பொத்திக் கொள்ள வேண்டும், (ஏனென்றால் வாயிலிருந்து வரும் காற்று அவர்கள் மீது பட்டுவிடுமாம்.)

இம்மாதிரி ஆயிரக் கணக்கான உதாரணங்களைக் காணலாம், இந்நிலையில் நமது முன்னேற்றத்தின் எதிரிகள் நம்மை வகுப்பு துவேஷக்காரர்கள் என்றோ நாஸ்திகர்கள் என்றோ சொல்லுவார்களே என பயந்து நமது ஜீவாதாரமான உரிமைகளை அடையச்செய்ய வேண்டிய கடமைகளில் இருந்து கொஞ்சமும் பின்வாங்கிக்கொள்ளக்கூடாது. அரசியல் விஷயங்களில் நமது தற்கால யோக்கியதை என்ன என்பதை கவனித்துப்பாருங்கள். பார்ப்பனர்கள் உத்தியோகம் சம்பாதிப்பதற்காக ஏற்படுத்திக்கொண்ட இயக்கத்தை அவர்கள் தேசீய இயக்கம் என்பதாக பெயரை வைத்துக்கொண்டு நம் பேராலே நமது நாட்டுக்கும நமது வகுப்புக்கும் கேடான காரியங்களைச் செய்து அரசாங்கத்தாருக்கு அநுகூலம் செய்து கொடுத்து 1000, 2000, 5000, 7000 ரூபாய்கள் சம்பளமுள்ள உத்தியோகங்களையும் சம்பாதித்துக்கொண்டும், கோர்ட்டுகள் என்றும் பள்ளிக்கூடங்கள் என்றும் அரசாங்கத்திற்கும் தங்களுக்கும் அநுகூலமான ஸ்தானங்களையும் அரசாங்கத்திற்குள் உள்வாயிருந்து ஏற்பாடு செய்துகொண்டு அதின் மூலமாய் பிழைத்துவருகிறார்கள். நாம் ஏதாவது இதுகளில் ஆசைப்பட்டால் நமக்கு யோக்கியதை இல்லையென்று சொல்லிவிடுகிறார்கள். யோக்கியதை உண்டாக்கிக் கொள்ளலாம் என்று பிரயத்தனப்பட்டால் தேசத்துரோகி வகுப்புத்துவேஷி என்று

(13-ம் பக்கம் பார்க்க.)

# பார்ப்பனீய சம்பாஷணை

(சித்திர புத்திரன் எழுதியது)

மணி:—என்னடா சேஷா! நம்ம தலைவர்களான ஸ்ரீமான்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், சீனிவாச சாஸ்திரி, சிவசாமி அய்யர், C. P. அய்யர் மற்றுமுள்ள பிராமணோத்தமர்கள் எல்லாம் இந்த எலக்ஷனில் எவ்வளவோ பாடுபட்டு, மடாதிபதிகள், மகந்துகள் பணத்தை லட்சக்கணக்காக செலவு செய்து, ஜெயித்துவிட்டோம் ஜெயித்துவிட்டோம் என்று தப்பட்டை அடித்தார்களே கடைசியில் பார்க்கிறபோது பழையபடி மூன்று சூத்திரர்கள் தானே மந்திரிகளாய்விட்டார்கள் இதில் என்ன நமக்கு லாபம். ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி அய்யங்கார், M. K. ஆச்சாரியார், வெங்கிட்டரமணய்யங்கார் இவர்களெல்லாம் மந்திரிகளாய் வருவார்கள் என்றல்லவா நாமெல்லோரும் எவ்வளவோ பாடுபட்டோம. கணக்கு, மணியகாரர் காப்பிக்கடை, பஞ்சாங்கம், புரோகிதம், வக்கீல் குமாஸ்தா, வக்கீல், முனிசிபு, ஜட்ஜ், நிர்வாக சபை எல்லாம் பாடுபட்டும் பழையபடி சூத்திர ராஜாங்கம்தானே ஆகிவிட்டது.

சேஷன்:—மணி! நீ என்ன பெரியமுட்டாளாயிருக்கிறாயே நமக்கு எவ்வளவு பெரிய வெற்றி தெரியுமா? இந்தப் பனகால் ராசாவை ஒழித்ததே அது ஒன்றே போதுமே.

மணி:—பனகால் என்ன அவ்வளவு மோசமான ஆசாமியா?

சேஷன்:—அடபாவி! தெய்வமே! நம்மகூட்டத்திற்கே இந்த ஆள் பெரிய எமனல்லவா 6 வருஷமாய் வந்து உட்கார்ந்துகொண்டு பிராமணாள் வாயில் நிரந்தரமாய் மண்ணைப் போடத்தக்க மாதிரி எவ்வளவோ வேலை செய்து சூத்திரர்களையெல்லாம் கைதூக்கிவிட்டார். நீயே நன்றாய் கவனித்துப்பார் பனகால், மந்திரியான பிறகு, சூத்திரன்களில் எவனாவது பிராமணனைக் கண்டால் சுவாமி என்கிறானா? கும்பிடுகிறானா? பிராமணன் என்கிற மரியாதைவைத்துப் பேசுகிறானா? இதை நினைத்தால் வயிறு எரிகிறதே.

மணி:—நீ சொல்வது தப்பு இன்னமும் கிராமாந்திரங்களில் எவ்வளவு பெரிய மிராசுதாரானாலும் ஒரு சின்ன பிராமணப் பையனைக் கண்டால் எழுந்து நிற்கிறான். வாங்க வாங்க சாமி என்று குனிந்து கும்பிடுகிறான். இந்தப் பையன், அடே போடா வாடா என்று பேசினாலும் அவர்கள் அதை இழிவாய் கருதுவதில்லை கிராமாந்திரங்களில் தாசிகள் பிராமணாளிடத்தில் பணமே வாங்குவதில்லை. பிராமணன் என்றால் இன்னமும் எவ்வளவோ காரியங்கள் நடக்கிறது. சும்மா பனகால் மீதில் வீண் பழி சுமத்துகிறாயே.

சேஷன்:—அடமண்டுவே நீ பட்டிக்காட்டான் ஆனதினால் கிராமத்து சங்கதியை கட்டிக்கொண்டு அழுகிறாய்; பட்டணவாசல்களில் நடக்கும் அநியாயம் உனக்கு என்ன தெரியும்; காப்பிக்கடையில் போய்ப் பார் முன்னெல்லாம் சுவாமிசுவாமி ஒரு இட்டலி கொண்டுவாருங்கள் என்று வணக்கமாய் கேட்பார்கள். இப்போது ஓய் அய்யரே இட்டிலி கொண்டுவா என்று அதிகாரம் பண்ணுகிறான். வக்கீல்களைக் கண்டால் நடுங்குகிறவர்கள் இப்போது குடியானவன்கூட வாய்யா போய்யா என்கிறான். தாசி வீட்டிற்குப்போனால் பிச்சை எடுக்கிற பார்ப்பானுக்கு தேவடியா ஒரு கேடா என்கிறாள். பெரிய பெரிய அதிகாரமுள்ள உத்தியோகத்தில் எல்லாம் சூத்திரன்களே வந்துவிட்டார்கள். தாலூகா, ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி இதுகளில் சூத்திரன்களே நிறைந்துவிட்டார்கள். ஒரு பிராமணன் அந்தஸ்துக்கு வரவேண்டுமானால் எவ்வளவோ திருப்தி செய்யவேண்டியதாயிருக்கிறது. பனகாலினால் பிராமணாளுக்கு எவ்வளவு கஷ்டம் தெரியுமோ பட்டிக்காட்டான் நீ என்ன கண்டாய்!

மணி:—நீ சொல்லுகிறபடி எனக்கு தோன்றவில்லையே. எங்கு பார்த்தாலும் முனிசிபுகள், ஜட்ஜுகள், அங்குள்ள குமாஸ்தாக்கள் எல்லாம் நம்ம பிராமணாளாகத்தானே இருக்கிறார்கள் நீ நன்றாய் கவனித்து பாரு.

சேஷன்:—சரி! சரி!! அது ஒன்றுதான் நமது தலைவர்கள். எவ்வளவோ கஷ்டப்பட்டு சூத்திரன்கள் கைக்குப்போகாமல வைத்திருக்கிறார்கள். அதுதான் உன் கண்ணுக்கு தெரிகிறதாக்கும். இதில் பனகாலுக்கு ஒரு அதிகாரமும் இல்லை தெரியுமா? அல்லாமலும் அந்த இலாக்கா சட்ட மெம்பர் என்கிறபோதால் நமது பிரம்மஸ்ரீ கிருஷ்ணசாமி அய்யர்வாளண்டையில் இருக்கிறது. அல்லாமலும் அந்த அதிகாரமுள்ள ஐகோர்ட் ஜட்ஜுகளுக்கு எவ்வளவோ நல்ல பிள்ளைகளாய் நம்மவர்கள் நடந்துகொண்டு இருப்பதால் அதில் நம்மிடமே ரொம்ப இருக்கிறார்கள் இல்லாவிட்டால் எத்தனை சாயபு முனிசிபாய்விடுவார். எத்தனை கிறிஸ்தவர் முனிசிபாயவிடுவார். எத்தனை கவுண்டர் நாயுடு, முதலி, செட்டி, பிள்ளை முதலிய ஆள்கள் முனிசிபு, ஜட்ஜிகளாகவந்துவிடுவார்கள் தெரியுமா? ஒருமலையாளி ஐகோர்ட்டுக்கு வந்ததில் எத்தனை ஜட்ஜி, முனிசிபுகள் மலையாளிகளாக வந்துவிட்டார்கள் பார். என்னமோ நம்முடைய நல்லவேளை சுயமரியாதை உள்ள சூத்திரன்கள் ஐகோர்ட்டில் சரியானபடி இல்லாததால் நம்மபாடு இவ்வளவிலாவது இருக்கிறது.

மணி:—மற்ற இலாக்காக்களில் நம்மிடவாள் இல்லையென்று சொல்லுகிறாய்.

சேஷன்:—இருந்தென்ன பிரயோஜனம். நாமே ஏகபோகமாய் அனுபவித்தது வந்தது போய் இப்போது அவர்களும் நமக்கு கிட்டக் கிட்ட, சரி சரியாய் வந்துவிடுவார்களே. மெடிகல் இலாகா என்கிற வைத்திய இலாகாவில் இந்த பனகால், வெள்ளைக்காரன்கள் தலையிலும் கையை வைத்து எல்லாம் சூத்திரன்களாகவே கொண்டுவந்தாய்விட்டது. அதனால்தான் வெள்ளைக்காரர்களுக்கும் பனகாலைக் கண்டால் பிடிக்கிறதில்லை.

மணி-வெள்ளைக்காரனை ஒழித்தது நல்லதுதானே!

சேஷன்:—நீ சுத்த அசடாயிருக்கிறாயே! நீ பிராமண வித்தே அல்லபோல் இருக்கிறது. வெள்ளைக்காரன் இல்லாவிட்டால நம்மபாடு ஆபத்துதானே அது தெரியுமா? வெள்ளைக்காரனை எப்படியாவது சரிப்படுத்திக்கொண்டு நாம் சுகமாக காலம் கழிக்கலாம். சூத்திரன்கள் வந்துவிட்டால் நம்ம கதி அதோகதிதான். அவன் சூத்திரன்களையேதான் தேடித் தேடி உத்தியோகத்திற்கு நியமிப்பான். வெள்ளைக்காரனைச் சரிப்படுத்த நமக்குத் தெரிந்த தந்திரமும் நமக்குள்ள சவுகரியமும் சூத்திரன்களுக்கு கிடையாது. இருந்தாலும் செய்யமாட்டார்கள். பிராமணாதிக்கம் வேண்டுமானால் வெள்ளைக்கார உத்தியோகமும் ஆதிக்கமும் இருப்பதே மேல்.


மணி:—அப்படியானால் நம்ம பிராமணாள்தானே சுயராஜ்யம்வேணும், சுயராஜ்யம்வேணும் என்றும் இரட்டை ஆட்சிஒழியவேண்டும் என்றும் பூரா சுயராஜ்யம் அதாவது வெள்ளைக்கார ஆதிக்கமே கூடாது என்றும் சத்தம் போடுகிறார்கள். அப்படி இருக்க நீ வெள்ளைக்கார ஆதிக்கம்தான் பிராமணாளுக்கு நல்லது என்கிறாயே. அதின் இரகசியமென்ன?

சேஷன்:-அட கோனமே! அதெல்லாம் சும்மா, சும்மா வெள்ளைக்காரருக்கும் நமக்கும் இரகசிய ஒப்பந்தம் "நான் நோகாமல் அடிக்கிறேன் நீ ஓயாமல் அழு" என்கிறமாதிரி சூத்திரன்களை ஏமாற்ற நம்மிட பெரியவாள் ஏற்பாடு செய்துவைத்த தந்திரம் உண்மையான சுயராஜ்யம் வந்தால் பிராமணாள் சங்கதி பெரிய ஆபத்தாயல்லவா முடியும். இவ்வளவு உத்தியோகமும், பணமும், அதிகாரமும், பதவியும்பிராமணாளுக்குகிடைத்துவிடுமா? எல்லாவற்றையும் சூத்திரன்கள் பிடுங்கிக்கொள்ளுவார்கள். ஒரு சப்பட்டை மந்திரி உத்தியோகப் பனகாலால் எத்தனை சூத்திரன்களுக்கு உத்தியோகம் வந்துவிட்டது. இரட்டை ஆட்சியை ஒழிப்பது என்பதன் ரகசியம் உனக்கு தெரியாதா? எல்லா உத்தியோகமும், அதிகாரமும் வெள்ளைக்காரன் கையிலேயே இருக்கவேண்டும் எங்களுக்கு கொடுத்தது தப்பு. அது சூத்திரன்களுக்கு அனுகூலமாய் போய்விட்டது. இப்படி ஆகுமென்று தெரியாமல் கேட்டுவிட்டோம். ஆதலால் திரும்பவும் நீயே எடுத்துக்கொண்டு ஒத்தை ஆட்சி ஆக்கிக்கொள் என்பதுதான் அதன் தத்துவம்.

மணி:--அதுசரி பூரா சுதந்திரம் என்பது என்ன?

சேஷன்.---அது ரொம்ப ரகசியம்விளையாட்டுக்காவது அப்படிச்சொன்னால்தான பாமரஜனங்கள் நம்முடன் சேருவார்கள் கதர், தீண்டாமை, மதுவிலக்கு இதெல்லாம் பனகால் எடுத்துக்கொண்டு வேலை செய்யப்போவதாக கேள்விப்பட்டதால் அதற்கும் மேலாக மிகவும் தீவிரமான கொள்கை நம்மிடம் இருப்பதாக ஜனங்கள் நினைக்கும்படி காட்டிக்கொள்ளவேண்டாமா? அதற்காகத்தான் இந்த தோது செய்தார்கள். தவிரவும் இப்படிச்சொன்னால்தான் வெள்ளைக்காரரும் நம்மையே நம்புவார்கள். ஏனென்றால் ஒரு சமயம் அம்மாதிரி கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டால் என்ன செய்கிறது என்று பயந்து நம்மிடவாள் இடமே அல்லா பெரிய உத்தியோகத்தையும் நம்மிடமே கொடுத்து வைப்பான். சூத்திரன் இடம் கொடுத்தால் ஒரு சமயம் தங்களை எதிர்த்தாலும் எதிர்த்துவிடு

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

# குடி அரசு.

அக்ஷய-ஸூ மார்கழி-மீ 4-உ

## மதுரை மகாநாடு சனி ஞாயிறு

**மாணவர்களே!**

**வாருங்கள்! வாருங்கள்!!**

**ஆயிரக்கணக்காக வாருங்கள்!**

சுயமரியாதையிலும் முன்னேற்றத்திலும் கவலையுள்ள உண்மைத் தமிழ் மக்கள் எல்லோரும் மதுரைக்கு வாருங்கள்.

வீண் ஞானோபதேசத்தால் ஒருபயனும் உண்டாகாது
மகாநாடு நடந்தபிறகு கோளாறு சொல்லாதீர்கள்

## மதுரையில் பார்ப்பனரல்லாதார் மகாநாடு.

நாளைய டிசம்பர்-மீ 25, 26-ந் தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மதுரையமா நகரில் பார்ப்பனரல்லாத மக்களின் மகாநாடு கூடப்போகும் விபரம் சென்ற வாரத்திதழிலேயே தெரிவித்திருக்கிறோம். இம்மகாநாடு பார்ப்பனரல்லாதார்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். பெரும்பாலும் நமது மக்களின் பிற்கால நிலைமை இதன் மூலமாகவே நிச்சயம் நிர்ணயமாகவேண்டியிருக்கிறது. பார்ப்பனரல்லாதாரிடம் கவலை உள்ளவர்கள் என்றும் பார்ப்பனரல்லாதாருக்கு உழைப்பவர்கள் என்றும் பறையடித்துக்கொள்பவர்கள் அவசியம் தவறாமல் இம்மகாநாட்டிற்கு வந்துகலந்து தங்களது அபிப்பிராயத்தையும் சொல்லி ஒப்பச் செய்து மேலால் நடந்துகொள்ளவேண்டிய விபரத்திற்கு ஒரு திட்டம் ஏற்பாடுசெய்ய உதவிபுரியவேண்டும். மகாநாடு எவ்வித அபிப்பிராய பேதமுள்ள பார்ப்பனரல்லாதாருக்கும் பொதுவானதென்றே சொல்லுவோம். பொறுப்பற்றாலோ துவேஷ புத்தியினாலோ மகாநாட்டிற்கு வாராமலிருந்துவிட்டு பின்னால் "அது தப்பு இது தப்பு இது யாரோ சிலர் கூடிக்கொண்டு நடத்திய மகாநாடு ஆதலால் என்னைக் கட்டுப்படுத்தாது இதில் [illegible] அநேகர் இருக்கிறார்கள்" என்று கோளுறவட்டம் பேசுவதில் ஒரு பயனும் ஏற்படாது. இவ்வித செய்கை சமூகத்துரோகமும் [illegible] வயிற்றுப் பிழைப்புமாகும். "நீர் மகாநாட்டின் தீர்மானங்களை [illegible] ஏற்றுக்கொள்ள [illegible] ஆதலால் நாம் போகவேண்டிய அவசியமில்லை" என்பதாக [illegible] பேசாமல் வேறு விதமான [illegible] சந்தர்ப்பம் ஏற்பட்டாலன்றி [illegible] வகையில் எல்லா முக்கிய கனவான்களுமே ஆஜராக வேண்டுமென்றே வேண்டுகிறோம். நமது மக்கள் தங்கள் வாழ்நாட்களில் எவ்வளவோ பணமும் எவ்வளவோ காலமும் வீணாய் விரயம் செய்துவருகிறார்கள் என்பதை யாரும் மறுக்கமுடியாது. அப்படி இருக்க இவ்வுதவமமானதும் சுயமதிப்புள்ள ஒவ்வொரு மனிதனின் கடமையானதுமான இந்த முக்கியமான கூட்டத்திற்குப்போவதை ஒரு செலவாகவோ காலப்போக்காகவோ கருதக் கூடாது என்றும் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆனால் சிலர் அதாவது பார்ப்பனர் புன்சிரிப்புக்கு ஆசைப்பட்டவர்களும் பார்ப்பனர்களின் மனக்கோணலுக்கு பயப்பட்டவர்களும் தனக்கென ஒரு கொள்கையில்லாமல் வலுத்த கையோடு சேர்ந்துகொண்டு ஞானோபதேசம்செய்து தங்களது மனிதத்தன்மையைக்காப்பாற்றிப்பிழைப்பவர்களும் சுலபத்தில் வர தைரியம் கொள்ளமாட்டார்கள் என்பதையும் நாம் நன்றாய் உணருவோம். அப்பேர்ப்பட்டவர்களைப்பற்றி நாம் குற்றம் கூறாமல் உண்மையிலேயே பரிதாபப்படுவதோடு மாறுதலும் அவர்களால் நேரிடும் கெடுதலை இனிச் சகிக்கமுடியாதென்பதையும் வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம் நிற்க இம்மகாநாடு பார்ப்பனர்களின் கான்பரன்சு மகாநாடுகளைப்போல் 12 ஜில்லாவிலுள்ள $2\frac{1}{2}$ கோடி மக்களுக்கும் பிரதிநிதித்துவம் பொருந்திய அரசியல் சபை என்று வேஷம் போட்டுக்கொண்டு தங்கள் சொற்படி ஆடும் சோம்பேறிகளாக 100 அல்லது 150 பெயர்களை தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் என்று வைத்துக்கொண்டு தங்கள் அபிப்பிராயத்துக்கு மாறுபட்டவர்கள் உள்ளே வரமுடியாதபடி தந்திரங்கள் செய்து மீறி யாராவது வந்துவிட்டால் அவர்களை அடித்துத் துரத்தி தங்கள் இஷ்டம்போல் தங்களுக்கு அனுகூலமானபடி தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பார்ப்பன சூழ்ச்சி மகாநாடுகள்போல் அல்லாமல், ஆயிரக்கணக்கான உண்மைச் சுதந்திரப் பிரதிநிதிகள் வந்து கூடவேண்டும் என்பதாகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். ராஜாக்கள், ஜமீன்தாரர்கள் மிராசுதாரர்கள் குடியானவர்கள் தொழிலாளர்கள் கூலிக்காரர்கள் வியாபாரிகள் உத்தியோகஸ்தர்கள் பெண்மக்கள் ஆகிய எல்லாவகையாருமதவறாமல் விஜயம்செய்து மகாநாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றவேண்டியது தமிழ் மக்களின் கடமையாகும். ஒவ்வொரு ஜில்லா தாலூகா கிராமங்களிலுமுள்ள பார்ப்பனரல்லாதார் உணர்ச்சியுள்ள ஒவ்வொரு குலாபிமானிகளும் தங்களால் கூடுமானவரை பிரதிநிதிகளைச்சேர்த்து அழைத்துக்கொண்டு வரவேண்டுமென்றும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். வெறும் உத்தியோகமும் பட்டமும், முனிசிபல், தாலூகா, ஜில்லா போர்டு மெம்பர் பதவியும் பெறுபவரை தன்னை பார்ப்பனரல்லாதார் உணர்ச்சிக்காரர் என்று சொல்லிக்கொண்டு தங்கள் காரியம் ஆனவுடனே அல்லது இனி இவர்களால் நமக்கு ஆகவேண்டியதொன்றுமில்லை. இனிமேல் இம்மாதிரி காரியங்களுக்கு பார்ப்பனர்கள் தயவுதான் வேண்டும் என்பதாக நினைத்து வரவில்லை என்று அன்னியர் மனதில் நினைக்கவோ அல்லது வெளியில் சொல்லவோ இடம் வைக்காமல் இந்நிலையில் உள்ள கனவான்களும் அவசியம் விஜயம் செய்ய வேண்டுமாய் வேண்டுகிறோம்

இவ்வளவுதூரம் நாம் ஏன் எழுதுகிறோமென்றால் கோடிக்கணக்கான நமது சமூகத்தின்பேரால் உள்ள ஸ்தாபனமும் மகாநாடும் நமது எதிரிகளாலும் அவர்களது கூலிகளாலும் குற்றம் சொல்லுவதற்கிடமில்லாமலும் இவ்வளவு நாள் இருந்ததுபோல் பொது மக்கள் பாராமுகமாய் இல்லாமல் அதனிடம் பக்தி செலுத்தத்தக்க தன்மையுடையதாகவும், தக்க பயனளிக்கக்கூடியதாகவும் இருக்கவேண்டுமென்கிற ஒரே ஆசையேயல்லாமல் வேறல்ல. தென்னாட்டிலுள்ள சுயமரியாதைச் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும் பிரமுகர்களும் அவசியம் தக்க பிரதிநிதிகளோடு வரவேண்டுமென்றும் பிரத்தியேகமாய் வேண்டுகிறோம்.

---

## பாராட்டுதலும் ஆமோதிப்பதும்.

இந்து தேவஸ்தான மசோதாவை நிறைவேற்றிவைத்த ஸ்ரீமான்கள் பனகால் ராஜா, P. T. ராஜன் முதலிய கனவான்களைப் பாராட்டுவதாகவும் அம்மசோதாவை முழு மனதுடன் ஒப்புக்கொண்டு ஆமோதிப்பதாகவும் வைசிராய் பிரபு பார்ப்பனர்களின் மாய்மாலத்தை நம்பாமல் அம்மசோதாவுக்கு சம்மதம் கொடுத்து சீக்கிரம் தாராளமாய் அமுலுக்குவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் கோரி பல தீர்மானங்களும், வைசிராய் பிரபுக்கு தந்தி கொடுத்திருப்பதாகவும் பல தகவல்களும் நிருபங்களும் வந்திருக்கின்றன. இடமில்லாததால் தனித்தனியாய் போட முடியாததற்காக மன்னிக்கவேண்டுகிறோம்.

# புது ஆண்டு பரிசு.

## 1927-ஆம் ஜனவரி-மீ த்தில் "குடி அரசு"ப் பிரதியின் எண்ணிக்கை 5000த்தையாவது தாண்டிவிட வேண்டாமா?

அப்படியானால் ஒவ்வொருவரும் மும்மூன்று புது சந்தாதாரர்களை சேர்த்துக் கொடுங்கள் :—

அப்படிக்கில்லாமல் குடி அரசே! குணக்குன்றே! அஞ்சா வீரமே! உண்மை அவதாரமே! சுயமரியாதைச் சூரியனே!

…………என்று கவிபாடுவதில் ஒரு பலனுமில்லை காரியத்தில் காட்டுங்கள்.

### மகாத்மாகாந்தி காங்கிரஸிற்கு போகும் ரகசியமும், காங்கிரசின் பிரதிநிதித்துவதன்மையும்

சென்ற-ஆம் கான்பூர் காங்கிரசின் போது மகாத்மா காந்தி காங்கிரஸ் காரியங்களில் இருந்து விலகிக் கொண்டதுமுதல் இது வரையில் எவ்வித காரியங்களிலாவது நிர்வாகத்திலாவது கொஞ்சமும் கலந்து கொள்ளாமல் இருப்பது எல்லோரும் அறிந்ததே.

ஆனால் இவ்வருஷம், பரிசுத்தமாய் பார்ப்பனர்களினுடையவும் படித்தவர்களினுடையவும் காங்கிரஸாய்ப் போய் விட்டதால் பொது ஜனங்களும் மகாத்மாவைப் போலவே காங்கிரஸ் காரியங்களிலிருந்து பெரும்பான்மையாய் விலகி வருகிறார்கள் என்பதை நமது பார்ப்பனர்கள் உணர்ந்து, பொது ஜனங்களை ஏமாற்றுவதற்காக பண்டித மோதிலால் நேரு என்கிற பார்ப்பனரை விட்டு மகாத்மா காந்தியை காங்கிரசில் கொண்டுவந்து காட்டி ஏமாற்றுவதற்கு சூழ்ச்சி செய்து வெற்றிபெற்றுவிட்டார்கள் ஆனால் மகாத்மா இந்த தந்திரத்தை அறிந்தே "நான் காங்கிரஸுக்கு வேடிக்கை பார்க்கப் போகிறேனே அல்லாமல் காங்கிரஸ் காரியத்தில் கலந்து கொள்ளப் போவதில்லை" என்று பொது ஜனங்களுக்கு அறிவித்துவிட்டார். ஏனென்றால், மகாத்மா பெயரையும் மற்றும் ஜெயிலுக்குப் போன தேச பக்தர்கள் பெயரையும் சொல்லிப் பொது ஜனங்களை ஏமாற்றி சட்ட சபைக்கும் முனிசிபாலிட்டி தாலூகா போர்டுக்கும் நமது பார்ப்பனர் போனது அவருக்கு நன்றாய் தெரியுமாதலால், இனியும் பொது ஜனங்கள் ஏமாறாதிருக்க வெளிப்படுத்திவிட்டார். ஸ்ரீமான் ராஜகோபாலாச்சாரியார் இம்மாத ஆரம்பத்தில் மகாத்மாவைப்பார்க்கப்போயிருந்த இரகசியமும் இதுவேதான். எப்படியாவது மகாத்மாவை கைபிடித்து சாமியை அழைத்துச் செய்வது போல் கட்டாயப்படுத்தி காங்கிரஸுக்குப் போகச் செய்து பார்ப்பனக் காங்கிரஸ் அல்ல, மகாத்மா காங்கிரஸ்தான் என்று சொல்லி பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஆதாரம் தேடவே அவர் கஷ்டப்பட்டிருக்கிறார்.

ஆது மாத்திரமல்லாமல் காங்கிரஸுக்கு தமிழ் நாட்டிலிருந்து பார்ப்பன ரல்லாதார்களும் வந்திருந்தார்கள் என்று பேர் பண்ணுவதற்காகச்சில பார்ப்பனரல்லாத கூலிகளுக்கும் ரயில் சார்ஜும் டிலிகேட் கட்டணமும், சோறு, காப்பி, உப்புமா முதலியதுகளும் கொடுத்து கூட்டிக்கொண்டு போகப் போகிறார்கள். அதற்கு வயிற்றுச்சோற்று "தேசபக்தர்"களாகவே பலர் விண்ணப்பம் போட்டிருப்பதாகவே தெரிகிறது. ஆனால் அய்யங்கார் பூரண நம்பிக்கைக்கு பாத்திரமான கூலிகள் மாத்திரம்தான் இதில் தெரிந்தெடுக்கப்படுவார்கள். 33 கோடி ஜனங்களுக்கு பிரதிநிதித்துவம் என்று பார்ப்பனர்களால் பறையடிக்கும் காங்கிரசின் யோக்கியதை என்ன என்பதும் அதை நடத்துகிறவர்கள் யார் என்பதும், இதைப் பார்த்து ஏமாறுகிறவர்கள் யார் என்பதும் இதனால் பலன் அடைகிறவர்கள் யார் என்பதும் கடுகளவு சுயமரியாதையோடு யோசித்தால் களிமண் மூளைக்காரருக்கும் விளங்காமல்போகாது. அதாவது எல்லா இந்திய காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீனிவாசய்யங்கார் மாஜிதலைவர் சரோஜனிதேவி. பார்ப்பனத்தியார். காரியதரிசி ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார். உதவி காரியதரிசி ஸ்ரீமான் ராஜாராவ். காங்கிரசில் பிரதான ஆதிக்கம் பெற்ற எல்லா இந்திய சுயராஜ்யக் கட்சித்தலைவர் பண்டித மோதிலால்நேரு. ஒரு காரியதரிசி ஸ்ரீமான் சத்திய மூர்த்தி சாஸ்திரி. தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டி தலைவர் ஸ்ரீனிவாசய்யங்கார். மாஜி தலைவர் ஸ்ரீனிவாசய்யங்கார். காரியதரிசி சத்திய மூர்த்தி சாஸ்திரி. கும்பஸ்தாக்கள் மானேஜர்கள் பார்ப்பனர்கள். (ஆர். கே. ஷண்முகம் செட்டியாரை தேவஸ்தான ஆக்டை ஆதரித்ததற்காக கமிட்டியில் இருந்து நீக்கியாய்விட்டது.) தமிழ் மாகாண சுயராஜ்யகக்ஷி தலைவர் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார். காரியதரிசி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி. சென்னை சட்ட சபையில் சுயராஜ்யகட்சி தலைவர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி. ஆந்திரா மாகாண மகா நாட்டுத் தலைவர் ஸ்ரீமான் டி. பிரகாசம் பிராமணர். தமிழ் மாகாண கான்பரென்ஸ் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி அய்யங்கார். உபசரணைத் தலைவர் ஸ்ரீமான் ஏ. ரங்கசாமி அய்யங்கார். (ஆனால் "குடி அரசு"க்கு பயந்துகொண்டு ஏ. ரங்கசாமி அய்யங்கார் மூலவராயிருந்து பார்ப்பனரல்லாதாரில் ஒரு உர்ச்சவரைப்பிடித்து தன் இஷ்டப்படி காரியத்தைநடத்திபொதுஜனங்களைஏமாற்றினர்) தமிழ் மாகாணக் மகாநாட்டியிலோ இரண்டு தலைவர்களும் தங்கள் பிரசங்கங்களை படித்ததும் ஆங்கிலத்தில். மகாநாட்டுக்கு 12 ஜில்லாக்களுக்கும் 2½ கோடி ஜனங்களுக்கும் பிரதிநிதிகளாக போயிருந்த டெலிகேட்டுகள் 200க்குள் அதிலும் பார்ப்பனர்கள் 100-க்கு 75 சென்னை மாகாணத்தில் நடைபெறும் "தேசியப் பத்திரிகை"களோநான்கு "இந்து" ஐயங்கார் எடிடர், "மித்திரன்" அய்யங்கார் எடிடர், "சுயராஜ்ய" பந்தலு எடிடர், "தமிழ் சுயராஜ்ய" அய்யர் எடிடர், "காங்கிரஸ் விளம்பர சபை" சத்தியமூர்த்தி அய்யர் எடிட்டர், ஆங்காங்கு நிருபர்கள் அய்யர் அய்யங்கார், சர்மா ராவ், சாஸ்திரி. பார்ப்பனரல்லாத கனவான்களும் கலந்திருக்கிறார்கள் என்பதற்கு ஆதாரமோ ஸ்ரீமான் அமீத்தான் சாயபு ஷாபி மகம்மது சாயபு பாவலர் குப்புசாமி முதலியார் அண்ணாமலைபிள்ளை வெங்கிடுகிருஷ்ணபிள்ளை குழந்தைஜயவேலு இவர்களே முக்கியமாய் காரியத்தில் கலந்து கொள்ளும் சகல வகுப்பு பிரதிநிதித்துவமும் பொருந்திய பார்ப்பனல்லாதார்களாயிருக்கிறார்கள். பெயர் கடன் கொடுப்பதற்கோ ஸ்ரீமான்கள் மருதவாணம் பிள்ளை. எழுதிக் கொடுத்ததை வாசிப்பதற்கோ ஸ்ரீமான்கள் கோவிந்தராஜமுதலியார் முத்துரங்கமுதலியார் சமயத்தில் முத்தாசை செய்வதற்கோ "தமிழ் நாட்டுத்தலைவர்கள்" ஆகவே தமிழ் நாட்டின் பிரதிநிதித்துவம் இதற்குள் அடக்கிவிட்டது ஆகலால் சுயராஜ்ஜியத்திற்கும் சுயமரியாதைக்கும் வகுப்பு உரிமைக்கும் என்ன குறை என்பதை வாசகர்களே உணர்ந்துகொள்ள வேண்டியதுதான்.

### ஸ்ரீமான நாயக்கர்.

இவ்வாரம் 13உ திங்கள்கிழமை இரவு ஸ்ரீமான் நாயக்கர் தென்னாட்டில் சுயமரியாதைச் சங்கம் நிருவ சோளவந்தான் அம்மைய நாயக்கனூர் வத்தல் குண்டு பெரியகுளம் உத்தமபாளையம் கம்பம் கூடலூர் முதலிய இடங்களுக்குச் சென்று ஆங்காங்கு சங்கங்களை நிருவியும் மதுரை மகா நாட்டுக்கு ஏராளமான ஜனங்களை வரும்படி வேண்டியும் அதுகளின் அவசியத்தைக் குறித்து பல உபந்யாசங்கள் புரிந்தும் 17 தேதி இரவு ஈரோடு வந்து சேர்ந்தார். 22உ அல்லது 23உ மறுபடியும் மதுரைக்குப் புறப்படுவார்.

### கண்டன நிருபங்களும் தீர்மானங்களும்

சென்னை கோகலெ ஹாலில் நமது பார்ப்பனர்கள் கூட்டிய "தமிழ் மாகாண அரசியல் மகா நாட்டில்" ஸ்ரீமான் தண்டபாணி பிள்ளை அவர்களிடம் பார்ப்பனர்கள் நடந்துகொண்ட கொடுமையைக் குறித்து கண்டித்து எழுதியும் ஆங்காங்கு மீட்டிங்கு கூட்டி கண்டனத் தீர்மானம் செய்தும் பல நிருபங்களும் தீர்மானங்களும் வந்திருக்கிறது வந்துகொண்டுமிருக்கிறது. இடமில்லாமையாலும் சிலது அதிக கடின பதப்பிரயோகமயிருப்பதாலும் பிரசுரிக்க முடியாததற்கு மன்னிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(9-ம் பக்கம் தொடர்ச்சி.)

வார்கள் என்கிற பயம் எப்போதும் வெள்ளைக்காரருக்கு உண்டு.

உண்மையான முழு சுதந்திரம் கேட்பவர்கள் நடந்து கொள்வதைப் பார்த்தே நீ தெரிந்து கொள்ளக் கூடாதா? விடிந்தெழுந்தால் வெள்ளைக்காரர்களிடம் கச்சேரிக்குப் போய் அவர்களைக் கெஞ்சி மீ 10, 20, ஆயிரம் வக்கீலிலும் ஜட்ஜிலும் முன்சிப்பிலும் கலக்ட்டர் முதலிய பல உத்தியோகத்திலும் சம்பாதிப்பவர்கள் வெள்ளைக்காரர்களை ஓட்டுவதாகச் சொல்ல முடியுமா?

மணி:—சரி அப்படியானால் பணகால் போனது பிராமணனுக்கு நல்லதாச்சுது. சில சூத்திரர்களும் பணகால் போகணும் போகணும் என்று என்று கத்தினார்களே அதென்ன?

சேஷன்:—அதெல்லாம் நம் ஸ்ரீனிவாசய்யங்கார் மடாதிபதிகளிடம வாங்கின பணத்தைக் கொண்டு சில சூத்திரர்களுக்கு கூலி கொடுத்துக் கத்தச் சொன்னதுதானே! நிஜமாலுமா அவர்கள் கத்தினார்கள்?

மணி:—அது சரி! மறுபடி வந்திருக்கும் சூத்திர மந்திரிகள் பணகால் மாதிரி ஆகமாட்டார்களா?

சேஷன்:— நிருக்காலும் ஆகமாட்டார்கள்.

மணி:—அதென்ன அவ்வளவு தைரியம்?

சேஷன்.- இந்த மந்திரிகள் மூன்று பேரும் நம் தலைவர்களால் சாணியில் பிடித்த பிள்ளையார்கள் போல்தானே? நாம் சொல்லுகிறபடி கேட்டுக் கொண்டிருக்கிற வரையில் அவர்கள் பிள்ளையார்கள் (மந்திரிகள்) தான் கொஞ்சம தவறினால் உடனே சாணிப் பிள்ளையாரை எருவா முட்டை (நம்பிக்கை இல்லாத தீர்மானம்) தட்டிவிட மாட்டார்களா? அந்த பயம் அவர்களுக்கும் உண்டு. இவ்வளவு பாடுபட்ட நம்மவர்களுக்கு இது தெரியாமல் இருக்குமென்று நினைக்காய். தன் ஜாதி சூத்திரர்களைக் கொண்டே சூத்திரர்கள் கண்ணைக் குத்துவது நல்லதே ஒழிய நாம் பிரவேசிக்கால் பார்ப்பான் செய்துவிட்டான் என்று கூப்பாடு போடுவார்கள். உதாரணமாக காஞ்சிபுர மகா நாட்டில் ஒருவன் வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானம் கொண்டு வருவதற்கு ஒரு சூத்திரன் பிரசிடெண்டாயிருந்ததினால்தான் நமது தலைவர்கள் வெகு சுலபத்தில் அத்தீர்மானத்தை மீட்டிங்குக்குகூட கொண்டு வராமல் தள்ளச் செய்ய சவுகரியமாயிருந்தது. பாமர ஜனங்களும் நம்பினார்கள். அப்படிக்கில்லாமல் ஒரு பிராமணன் அந்த ஸ்தானத்தில் இருந்திருந்தால் கட்டாயம் அத்தீர்மானம் நிறைவேறிப் போயிருக்கும். அல்லாமலும் அத்தீர்மானத்தை ஒரு பிராமணன் தள்ளி இருந்தால் பெரிய கூப்பாடு போட்டிருப்பார்கள். ஆதலால் இப்படி இருப்பதுதான் நல்லது.

மணி:— சரி! சரி!! எனக்கு இப்பொழுதுதான் புரிந்தது நானும் இனிமேல் இந்த முறைகளை கைக்கொள்ளுகிறேன்.

---

## ஈரோடு முனிசிபாலிட்டியில் குழப்பம்.

### இழிமொழிப் பரிமாற்றம்.

17-12-26ல மாலையில் ஈரோடு முனிசிபாலிட்டியில் ஒரு காரியக்கூட்டம் நடந்தது. சேர்மென் ஸ்ரீமான் டி. சீனிவாசமுதலியார் பலமாதகாலங்களாய் கௌன்சிலர்களால் அனுப்பிவரப்படும் கேள்விகளுக்கு பதில் சொல்லாமல் அஜெண்டாவிலுள்ள முதல் விஷயத்தை ஆரம்பித்தார். கௌன்சிலர் மகா-ா-ஸ்ரீ கே. என். கிருஷ்ணசாமி செட்டியார் எழுந்து நாங்கள் அனுப்பியிருக்கும் இண்டர்பிளேஷன் கேள்விகளுக்கு பதில் தயவுசெய்து சொல்லவேண்டுமென்று சேர்மனைக்கேட்டார். அதற்கு சேர்மன் இது விசேஷ மீட்டிங்கு ஆனகால் சாதாரண மீட்டிங்கில் பதில் சொல்லப்படுமென்றும் சொல்லிக்கொண்டே அஜெண்டா தீர்மானத்தை எழுத ஆரம்பித்தார். மறுபடியும் ஸ்ரீமான் செட்டியார் பலவருஷங்களாக பல கௌன்சிலர்களின் இண்டர்பிளேஷன்களுக்கு பதில் சொல்லாமலேயே ஏமாற்றிக்கொண்டு வருவதால் இப்பொழுதாவது போதுமான கால அவகாசம் குறித்துக்கொண்டாவது பதில் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்டார், வைஸ்சேர்மென் ஜனாப் கெ. காதர் சாயபு பகதூரும் ஸ்ரீமான் சுந்தரமய்யரும் ஸ்பெஷல் மீட்டிங்கு ஆனாலும் ஆர்டினரி மீட்டிங்கானாலும் இண்டர்பிளேஷன்களுக்கு பதில் சொல்லித்தான் காரியத்தை ஆரம்பிக்கவேண்டியது கிரமமென்றும் அந்தப்படிகவர்ன்மெண்ட் ஆர்டரும் கவுன்சில் ரூலும் இருப்பதாகவும் எடுத்துக்காட்டினார்கள். உடனே சேர்மன் அவர்கள் பதில் சொல்வகை தெரியாமல் விழிக்கவும் ஒரு பாதிரி கௌன்சிலரான ரெவரெண்ட் A. W பிரப் என்னும் கௌன்சிலருக்கு சொல்லிக்கொடுத்து, இந்த மீட்டிங்கில் இண்டர்பிளேஷன்களுக்கு பதில் சொல்லவேண்டியதில்லை என்று ஒரு தீர்மானம் கொண்டுவரச்செய்தார் அதை உடனே சேர்மனின் கூட்டாளியான ஸ்ரீமான் ஸ்ரீகண்டய்யர் என்கிற ஒரு பார்ப்பன வக்கீலைக் கொண்டு ஆமோதிக்கச் சொல்லி நிறைவேறி விட்டதாக மினிட் புஸ்தகத்தில் அதிவேகமாக சேர்மன் எழுத ஆரம்பித்தார். ஸ்ரீமான் கிருஷ்ணசாமி செட்டியார் எழுந்து இண்டர்பிளேஷன்களுக்குபதில் சொல்லாமல் இன்று மீட்டிங்கு நடத்தக்கூடாதென்று ஒருதீர்மானம் பிரேரேபித்தார். ஜனாப் வைஸ் சேர்மன் அதை ஆமோதித்தார். இந்த சமயத்தில் சேர்மனால் சுயநல அனுகூலம் பெறும் சில கவுன்சிலர்கள் சேர்மனுக்கு அனுகூலமாகவும் மற்ற கவுன்சிலர்கள் செட்டியாருக்கு அனுகூலமாகவும் ஒரே சப்தமாய் பேச ஆரம்பித்தார்கள். நிலைமை சமாளிக்க சேர்மனுக்கு யோக்கியதையில்லாமற் போனதால் போலீஸ் பந்தோபஸ்து வேண்டுமென்று ஒரு சீட்டு அனுப்பிவிட்டு போலீஸ்காரர்கள் வரப்போகிறார்கள் என்கிற தைரியத்தில் சேர்மனவர்கள் ஸ்ரீமான் கிருஷ்ணசாமி செட்டியாரைப்பார்த்து "யூ டாமிட்" நான் சொல்வதைக் கேள் என்று சொன்னார். இவ்வார்த்தையானது செட்டியாருக்கு கோப மூட்டவே செட்டியார் எழுந்து சேர்மனைப் பார்த்து [illegible] பூல், அயோக்கியன் திருடன் [illegible] ஜரி செய்கிறவன் [illegible] கொடுத்தவன் முனிசிபல் சொத்தை கொள்ளை அடிக்கிறவன், லஞ்சம் வாங்குகிறவன் ஆகிய நீயா என்னைடாமிட்என்று சொல்லுகிறாய் ஜாக்கிரதையாகப் பேசு என்று சொன்னார். சேர்மனின் பங்காளியாகிய மற்றொரு கவுன்சிலர் ஸ்ரீமான் டேவிட் அவர்கள் எழுந்து செட்டியாரைப் பார்த்து அடே முட்டாள் என்ன சொன்னாயென்று கேட்க செட்டியாருக்கு முன்னிலும் அதிகமாய் கோபம்வந்து டேவிட்டை [illegible] நீயா என்னை முட்டாள் என்கிறாய் சேர்மன் வாங்கும் லஞ்சத்திலும் முனிசிபாலிட்டியில் திருடுகிற சொத்திலும் அவருக்கு 0—10—0 அணா உனக்கு 0-6-0 பங்கல்லவா அதற்காக நீ சிபார்சுக்கு வந்துவிட்டாயா என்று பதிலளித்தார். இருதரப்பிலும் இன்னும் இழிவான வார்த்தைகள் பரிமாற்றிக் கொள்ளப்பட்டன. இதன்மத்தியில் சேர்மனின் கூட்டாளியான ஸ்ரீமான் ஸ்ரீகண்டய்யர் அவர்கள் எழுந்து ஸ்ரீமான் செட்டியாருக்கு சட்டம் கற்பிக்க ஆரம்பித்தார். ஸ்ரீமான் செட்டியார் உம்முடைய சட்டம்எல்லாம் கோர்ட்டில் போய் காட்டும் இங்கு என்னிடம் நடக்காது என்றும் உமக்கும் ஸ்ரீமான்கள் சேர்மனுக்கும் டேவிட்டுக்கும் உள்ள சம்பந்தங்கள் எனக்குத் தெரியும் என்றும் என்னுடைய தீர்மானம் என்ன ஆச்சுது என்று தெரியாமல் மேலே காரியம் நடக்க சம்மதிக்கமாட்டேன் என்றும் சொன்னார். அதற்குள் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டேபிள்களும் வந்துவிட்டார்கள். இந்த சமயத்தில் ஸ்ரீமான் பாலசுப்பராயலு நாயுடு அவர்கள் அடுத்த மீட்டிங்கிலாவது கண்டிப்பாய் சேர்மன் அவர்கள் கவுன்சிலர்களின் இண்டர்பிளேஷன்களுக்கு பதில் சொல்லவேண்டும் என்பதாக ஒரு ராஜி. தீர்மானத்தை பிரேரேபிக்க ஏகமனதாக நிறைவேறச்செய்து மேலால் மீட்டிங்கு நடந்தது. பல கவுன்சிலர்கள் கோபத்தோடிருந்ததினால் சேர்மன் அவர்களின் இஷ்டப்படி எல்லாத் தீர்மானங்களும நிறைவேற்றிக்கொள்ளப்பட்டன. மீட்டிங்கில் சேர்மனுக்கும் கவுன்சிலர்களுக்கும் இழிவான வார்த்தை பரிமாற்றங்கள் நடந்தபோதிலும் மீட்டிங்கில் பாசான தீர்மானங்களால் சேர்மனுக்கு கல்லெடைபுனை.

கேழ்கண்ட ஒரு வரி செலுத்துவோன்.

---

## திருச்செங்கோட்டில் முதன் மந்திரியாருக்கு வரவேற்பு.

முதன் மந்திரி கனம் டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் நாளது ஞாயிற்றுக்கிழமை 19—12—26ல் திருச்செங்கோட்டுக்கு விஜயம் செய்வதை முன்னிட்டு சிறந்த வரவேற்பு, விருந்து உபசாரனை முதலிய வைபவங்கள் நடை பெறுமெனவும் உபசாரனை சங்கத்துக்குத் தலைவர் டி. ஆர். கந்தப்ப முதலியார் எனவும் காரியதரிசிகளாகிய ஸ்ரீமான்கள் டி. வி. நடேச முதலியார் வி. டி. ராமசாமி ஐயர் அறிவிக்கிறார்கள்.

# ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாருக்கு

## முனிசிபாலிட்டிகளின் வரவேற்புகள்

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கு கோயமுத்தூர் டவுன் முனிசிபாலிட்டியார் வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுத்ததும் தோட்டவிருந்து நடத்தியதும் சென்ற வாரத்தில் குறிப்பிட்டிருந்தோம்.

இவ்வாரம் ஞாயிற்றுக் கிழமை பகல் ஸ்ரீமான்கள் திருப்பூர் மாஜி சேர்மென் கே. எஸ். ராமசாமி கவுண்டர், சிக்கண செட்டியார், சேர்மென் துரைசாமி கவுண்டர் ஆகிய கனவான்கள் ஸ்ரீமான் ராமசாமிக் கவுண்டர் அவர்கள் மங்கள விலாசக் கட்டடத்தில் ஒரு பெரிய விருந்து நடத்தினதோடு மாலை 6-மணிக்கு முனிசிபல் ஆபிசில் புகைப்படம் எடுக்கப்பட்டு ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்கள் ஸ்ரீமான் சிக்கண செட்டியார் அவர்கள் கட்டடத்திலிருந்து பாண்டு வாத்தியங்களுடன் மோட்டார் வண்டியில் ஊர்வலமாக மங்கள விலாசத்திற்கு அழைத்து வரப்பட்டார். கூட்டத்திற்கு ஸ்ரீமான்கள் கோயமுத்தூர் சாத்தப்ப செட்டியார் பிமய்ய செட்டியார் நஞ்சுண்ட கவுண்டர் முதலியவரும், உடுமலைப்பேட்டை சேர்மென் செல்லமுத்து கவுண்டர் பொள்ளாச்சி ரத்தினசபாபதிக் கவுண்டர் ஈரோடு ஈ. வெ. ராமசாமி நாயக்கர். எஸ். ராமநாதன் மற்றும் பல வெளி ஊர்களிலிருந்தும் அநேக கனவான்களும் பக்கத்தியசுற்றுப்பக்கங்களிலிருந்தும் தக்க பெரிய மனிதர்கள் உள்பட சுமார் 1000 பேருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். கூட்டம் ஆரம்பமானவுடன் திருப்பூர் சேர்மென் ஸ்ரீ துரைசாமிகவுண்டர் அவர்களாலும் என் கோபாலராவ் அவர்களாலும் தமிழிலும் இங்கிலீஷிலும் பெருத்த கரகோஷத்தினிடையே வரவேற்புபத்திரம் வாசிக்கப்பட்டது. அது முடிந்தவுடன் ஸ்ரீ ஷண்முகம் செட்டியார் பெருத்த ஆரவாரத்தினிடையே எழுந்து உபசாரப் பத்திரத்திற்கு பதில் அளிக்கும் முகத்தான் ஒரு பெரிய உபந்யாசம் செய்தார். அதன் சாராம்சமாவது ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்கும் 7, 8-நாள் பிரயாணமுள்ள தூரமே இருந்தாலும் ஒருவருக்கொருவர் ஒன்றுமே தெரியாத நிலைமையில இருக்கிறோமென்றும், இந்தியாவைப் போல் 20 பங்கு விஸ்தீரணம் கொண்ட பூமியில் 60லக்ஷம் ஜனங்களே வசிக்கிறார்கள் என்றும் 100-க்கு ஒரு ஏக்கரா விதமுள்ள பூமிதான் பயிரிடப்படுகிறதென்றும் அவற்றில் உண்டாகும் விளைபொருள் நம்முடைய 10 ஏக்கராவில் விளையத்தகுந்ததை ஒரு ஏகராவில் உற்பத்தி செய்கிறார்கள் என்றும் ஏர் 1-க்கு 9 பெரிய பெரிய ஆஸ்திரேலிய குதிரைகளைப் பூட்டிய ஏர்களைக்கொண்டு உழுகிறார்கள் என்றும், கூலி ஆள்களுக்கு குறைந்தது வாரம் ஒன்றுக்கு 60 ரூபாய்க்கு குறையாமல் கூலி கிடைக்கிறதென்றும் 100-க்கு 75 பேருக்கு சொந்த வீடு இருக்கிறதென்றும், 100-க்கு 90 பேர் சேவிங்ஸ் பாங்கியில் பணம் மீத்து வைத்திருக்கிறார்கள் என்றும், இவ்விஷயங்களையெல்லாம் அரசாங்கத்தார் கவனித்து வருகிறார்கள் என்றும், உலகத்தில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ஆஸ்திரேலியாதான் செல்வமுள்ள பூமி என்றும், ஏழைகளும் தரித்திரர்களும் அங்கு கிடையாதென்றும், குறிப்பிட்ட கூலிக்கு குறைந்து கூலிக்காரர்கள் வேலையை ஒப்புக்கொண்டாலும் எஜமானர்கள் வேலை வாங்கினாலும் தண்டிக்கப்படுவார்கள் என்றும், இவ்விதத்திலும் ஜனங்களுடைய வாழ்க்கைக்கு கஷ்டமில்லாத மாதிரியில் ராஜ்ஜியபாரம் நடக்கிறதென்றும், பூமிகளில் வெள்ளாமைகள் செய்வது போலவே ஆடுமாடுகள் வளர்ப்பதுவும் ஒரு விவசாயத்தைப்போல் நிறைந்த லாபம் சம்பாதிக்கிறார்கள் என்றும், நல்ல குட்டிகள் பிறக்கச்செய்யும்படியான ஆண் ஆடுகளுக்கு 70 ஆயிர ரூபாய் வரையில் கிரையமிருக்கிறதென்றும் சொல்லி பிறகு ராஜிய விஷயமாய் பேசும்போது, ஆஸ்திரேலியா இந்தியாவைப்பற்றி மிகவும் கேவலமாய் நினைத்துக்கொண்டிருந்தார்கள் என்றும், இந்தியாவில் ஒருவரை ஒருவர் தொடக்கூடாது என்பது வாஸ்தவமா? என்று கேட்டதாகவும் ஒருவர் கடையில் ஒருவர் வியாபாரம் செய்யக்கூடாதா என்றும், ஒரு ஜாதியார் வீதியில் மற்றொரு ஜாதியார் குடி இருக்கக் கூடாது என்றும் இம்மாதிரி பல கேள்விகள் தன்னை கேட்டதாகவும் இந்தியா சுதந்திரமடைய யோக்கியதையில்லையாமாமே அது வாஸ்தவமா என்றும், உங்கள் அராஜகக்கார காந்தி அடங்கிவிட்டாரா என்றும் கேட்டதாகவும் நாம் அவற்றிற்கெல்லாம் தக்க பதில் அளித்து இந்தியாவைப்பற்றியும் மகாத்மாவைப்பற்றியும் சரியாக நினைக்கும்படியாகவும இந்தியா விடுதலை பெறும் விஷயத்தில் மிக்க அனுதாபமுள்ளவர்களாகவும் செய்துவிட்டு வந்ததாகவும் இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் அதிகம் இருப்பதாகவும், தன்னுடன் கூட வந்த ஐரோப்பிய கனவான் ஸ்ரீமான் டா சேலென்ஸ் என்பவர் அதிக உதவி செய்தார் என்றும கேட்போர் ஆச்சரியப்படும்படியும் பிரமிப்புப்படும்படியும் பேசினார்.

பிறகு ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரைப் பேசும்படி முனிசிபல் அக்கிராசனர் அவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் ஸ்ரீமான் நாயக்கர் பெருத்த கரகோஷ ஆரவாரத்தினிடையே எழுந்து ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்கள் ஆஸ்திரேலியாவுக்குப்போய் வந்ததற்காக நாம் இவ்வளவு ஆர்பாட்டம் செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும் இவர் பிரயாணத்தால் நமக்கு பிரமாதமான நன்மைகள் ஒன்றும் விளைந்துவிடப் போவதில்லை என்றும் நம்முடைய விடுதலைக்கு நம்முடைய அரசாங்கத்தாரை நாம் எதிர்பார்ப்பதே நமது சுயமரியாதைக்கு அழகல்ல என்று நினைக்கும்போது நமது விடுதலைக்கு வெளி நாட்டார்களின் உதவியை எதிர் பார்ப்பதும் அவர்களிடம் நமது குறைகளைச் சொல்லிக் கொள்வதும் நமக்கு அவமானமென்றும், ஆனாலும் நமது செட்டியார் அவர்கள் விஷயத்தில் அவரது ஆஸ்திரேலியா பிரயாணத்தைப்பற்றிக் கொண்டாடுவதற்கு இரண்டு காரணங்கள் மாத்திரம் உண்டென்றும், அதாவது முதல் காரணம் நமது செட்டியாரவர்கள் வெளிநாடு போய் வரும்படியான யோக்கியதை அடைந்ததைக் கண்டு பொறாமைப்பட்ட நமது எதிரிகளான ஒரு கூட்டத்தார் அவரது நடவடிக்கைகளையும் அவரது சாமர்த்தியத்தையும் அவருக்கு ஜனங்கள் செய்த உபசாரங்களையும் மரியாதைகளையும் தங்களது பத்திரிகைகளில் எடுத்துச் சொன்னால் அவருக்கு யோக்கியதை உண்டாகிவிடும் என்கிற அற்ப புத்தியால் எவ்வளவோ மறைத்தும் மூடி வைத்தும் அது தானாகவே வெளியாகும்படியான மாதிரி ஏற்பட்டு எதிரிகள் தோல்வி அடைந்து செட்டியார் அவர்களின் கீர்த்தியும் சாமர்த்தியமும் வெற்றி பெற்றுவிட்டதற்கு ஆகவும், இரண்டாவது வெளி நாடுகளுக்கு இதுவரை இந்தியாவிலிருந்து நமது பணச் செலவில் போனவர்கள் பெரும்பாலும் அடிமைப் புத்தியுடனும் சுயமரியாதையற்ற தன்மையுடனும் பேசியும் எழுதியும் வந்திருக்க அதாவது இங்கிருந்து போனவர்கள் தங்கள் நாட்டையும் நாட்டாரையும் தாழ்த்தி "எங்களுக்கு வெள்ளைக்கார அரசாங்கம் ஏற்பட்டதே கடவுள் கொடுத்த பாக்கியம் எங்கள் நாட்டார் உங்களை தெய்வங்கள் போல் கருதுகிறார்கள். உங்களைப் போல் உடை உடுத்திக்கொள்ள ஆசைப்படுகிறார்கள்; உங்களைப்போல் எங்கள்பெண்கள் மயிர் கத்தரித்துக் கொள்ளுகிறார்கள்; என்கிற உணர்ச்சி அற்றதான வார்த்தைகளைப் பேசாமல் வீரமும் ஆண்மையும் சுயமரியாதையும் நிரம்பிய வார்த்தைகளாக உங்களுக்கு ஆபத்து வந்த காலத்தில் நாங்கள் காக்கவில்லையா? உங்களுக்காக நாங்கள் உயிர்விடவில்லையா? உங்கள் கடவுள் ஏசுநாதர் எங்கள் நிறத்தவரல்லவா? நீங்கள் கோவணங்கட்டத் தெரியாத காலத்தில் இருந்தே நாங்கள் உலகத்திற்கு வழி காட்டினோமல்லவா? என்கிற கம்பீரமான வார்த்தை பேசி தமது ஆண்மையைக் காட்டினதல்லாமல் மற்றவர்களைப் போல் வெள்ளைக்கார தொப்பி போட்டு அவர்கள் கேவலமாய் நினைப்பதற்கில்லாமல் நமது உருப்பாகிய உருமாலையுடன் இருந்தாரென்பதற்கும் நாம் அவரை பாராட்ட கடமைப்பட்டிருக்கிறோம் என்று பேசி பிறகு ஆஸ்திரேலியாவைப்போல் நமது நாடு வளம் அற்று கிடப்பதற்கு நமது நாட்டு மக்களின் குறையே தவிர வேறு அல்லவென்றும் நாம்வளம்பெற முடியாமல் நமது நாட்டிலிருக்கும் மக்களே நம்மை கெடுக்கிறார்கள் என்றும, நமது நாட்டிலுள்ள மக்களில் சிலர் நமது சர்க்கார் ஆட்களாக இருந்து நம்மை காட்டிக் கொடுத்து வாழ்கிறார்கள் என்றும், அக்கூட்டம் ஒழிந்தாலல்லது நமக்கு விடுதலையில்லை என்றும் இதை கவனியாமல் மற்ற பல வெளி நாடுகளுக்கு போய் வருவதால் ஒன்றுமாய்விடாது என்றும் போன இடங்களில் எங்களுக்குள் வித்தியாசமில்லை

சொல்லிவிடுகிறார்கள். ஆதலால் இவ்வித கஷ்டங்களில் இருந்துவரும் நமது சமூகத்திற்கும் நாட்டிற்கும்; சுயமரியாதையும் விடுதலையும் ஏற்படவும் நமக்கென்று ஒரு தனி இயக்கம் இருந்துதான் ஆகவேண்டும். அவ்வியக்கத்தில நாம் எல்லோரும ஈடுபட்டு ஒற்றுமையாய் உழைக்கவேண்டும்.

## பார்ப்பனரல்லாதார் சங்கம், மதுரை

1926ம் வருஷம் டிசம்பர் மீ 10தேதி 8மணிக்கு மதுரை பார்ப்பனரல்லாதார் சங்கத்தின் பொதுக்கூட்டம் மகா-ா-ா-ஸ்ரீ M. T. சுப்பிரமணிய முதலியாரவர்கள் தலைமையின் கீழ் கூடி கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:—

தீர்மானங்கள்

1. நாளது வருஷம் டிசம்பர் மீ 25 & 26உ (சனி, ஞாயிற்றுக்கிழமை)களில் பத்தாவது சென்னை மாகாணப் பார்ப்பனரல்லார் மகாநாட்டை மதுரையில் கூட்டுவதாக தீர்மானித்திருக்கிறது. 2. இக்கூட்டம் மகா-ா-ஸ்ரீ திவான்பகதூர் P. கேசவ பிள்ளை அவர்களை சென்னை மாகாணப் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டுக்கு தலைமை வகிக்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறது. 3. இந்த மகாநாட்டுக்கு உபசரணைக்கமிட்டி அங்கத்தினராக கீழ் கண்டவர்களைத் தேர்ந்தெடுப்பதுடன் இன்னும் போதுமான அங்கத்தினர்களை தேர்ந்தெடுக்கும்படிக்கும் அதிகாரம்கொடுத்திருக்கிறது.

1, ஸ்ரீமான்கள் M. T. சுப்பிரமணியமுதலியார் அவர்கள் மிராஸ்தார். 2, R. S. நாயுடு காரு அவர்கள் சேர்மென். 3, P. T. ராஜன் அவர்கள் M.L.C. 4, M. T. சோமசுந்தர முதலியார் அவர்கள் மிராஸ்தார். 5, W. P. A. சௌந்திரபாண்டிய நாடார் அவர்கள் M.L.C. 6, K. M. அலாவுதீன் ராவுத்தர் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர். 7, P. ரெங்கசாமிநாயுடு அவர்கள் B.A.B.L ஐகோர்ட் வக்கீல். 8, ஞானஒளிவு அவர்கள் B.A.B.L. வக்கீல். 9. முத்துக்காமாட்சி முதலியார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் 10, S. கபில முதலியார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர். 11, D. அப்பாவு பிள்ளை அவர்கள். 12, சையட் மகமட் பக்ருதீன் இப்ராகிம் சாயபு அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் 13, P. M. ஷண்முகம் செட்டியார் அவர்கள். 14, P. பிச்சைக்கோனார் அவர்கள் புரோப்ரைட்டர் அமிர்தம் & கோ. 15, சுபேதார் சுப்பாநாயுடு அவர்கள். 16, ஷண்முகம் பிள்ளை அவர்கள். 17. அப்பாசாமி அவர்கள் முனிசிபல் கவுன்சிலர். 18, காமாட்சி அவர்கள் முனிசிபல் கவுன்சிலர். 19, T. கொண்டைய நாயுடுகாரு அவர்கள் மிராஸ்தார். 20, S. கூடலிங்கம் பிள்ளை அவர்கள் புக்ஷாப் 21, திருமகிழ்மாறன் பிள்ளை அவர்கள் மிராஸ்தார். 22, ஆறுமுக நாடார் அவர்கள். 23, புன்னையப்ப நாடார் அவர்கள் முனிசிபல் கவுன்சிலர். 24, திரவியம் பிள்ளை அவர்கள் முனிசிபல் கவுன்சிலர். 25, பாப்பு செட்டியார் அவர்கள். 26, இராமாநுஜ நாயுடுகாரு அவர்கள் முனிசிபல் கவுன்சிலர் 27, T. நாராயண பிள்ளை அவர்கள் B.A.B.L. வக்கீல் 28, இராமக் கோனார் அவர்கள்.

4 இக்கூட்டம் உபசரணைச் சபை அங்கத்தினர்களுக்கு 5 ரூபாயும் பிரதிநிதிகளுக்கு 1 ரூபாயும் விசிட்டர்களுக்கு 8 அணாவும் ஸ்திரீகளுக்கு பிரவேசக் கட்டணமின்றியும் அநுமதிக்கத் தீர்மானித்திருக்கிறது.

5 இந்த கூட்டம் கீழ்கண்டவர்களை கீழ் வருமாறு மகாநாட்டு (ஆபீஸ் பேரர்களாக) உத்தியோகம் வகிக்க தீர்மானித்திருக்கிறது

மகா-ா-ா-ஸ்ரீ எம். டி. சுப்பிரமணிய முதலியார், உபசரணைச் சபைத் தலைவர்.

1 கே. எம் அலாவுதீன் ராவுத்தர், முனிசிபல் கவுன்சிலர், 2 முத்துக்காமாக்ஷி முதலியார், முனிசிபல் கவுன்சிலர், 3 திரவியம் பிள்ளை அவர்கள் முனிசிபல் கவுன்சிலர், 4 ஷண்முகம் செட்டியாரவர்கள், வைஸ்-சேர்மென். ஆகிய இவர்கள் உபசரணைச் சபை உபதலைவர்கள்.

1 பி. ரெங்கசாமி நாயுடு பி. ஏ. பி. எல்., 2 பாப்பு செட்டியார், 3 ஞானவொளிவு பி. ஏ. பி. எல்., 4 இராமக் கோனார் அவர்கள் 5 ஆறுமுக நாடார் அவர்கள் 6 புன்னையப்ப நாடாரவர்கள் 7 சண்முகம் பிள்ளையவர்கள் முனிசிபல் கவுன்சிலர். ஆகிய இவர்கள் செக்ரட்டரிகள்.

1 மகா-ா-ா-ஸ்ரீ எஸ். கே. திருமகிழ்மாறன் பிள்ளை, 2 டி. கொண்டைய நாயுடு ஆகிய இவர்கள் பொக்கிஷதார்.

1 சுபேதார் சுப்பா நாயுடுகாரு, 2 டி நாராயண பிள்ளையவர்கள் பி. ஏ., பி. எல்., 3 நம்மாழ்வார் நாயுடு, 4 சையத்மகமத்பகருத்தின் இப்ராகிம் சாஹிபு, முனிசிபல் கவுன்சிலர் ஆகிய இவர்கள் தொண்டர் படைத் தலைவர்கள்.

S. K. Thirumakilmaran,
Secretary.

Non-Brahmin Association,
14—11—26. Madura.

---

என்று பொய்பேசுவதில் பயனில்லை என்றும், ஆதலால் நமது செட்டியார் அவர்கள் அதற்கு வேண்டியது செய்ய வேண்டும் என்றும் பேசி முடித்தார். பிறகு ஸ்ரீமான் கே.எஸ். ராமசாமி கவுண்டர் அவர்கள் செட்டியாருக்கு வந்தனம் அளிக்கும்போது செட்டியார் மிகவும் விசேஷ ஞானம் பொருந்தியவரென்றும், அவர் அவதார புருஷரென்றும், அவர் மேல் இங்கிலாந்துக்கு போய் வந்தபோதே அவர் ஒரு மேதாவி ஆவார் என்று எண்ணியதாகவும், அவரால் நமது நாடு எவ்வளவோ பயனடையப் போகிறதென்றும் பேசி வெளி இடங்களிலிருந்து வந்த கனவான்களுக்கும் வந்தனம் கூறினார். பிறகு ஸ்ரீமான் மா. வெ. கருப்பண்ண செட்டியார் ஸ்ரீமான் கே, எஸ். ராமசாமி கவுண்டர் இடம் கொடுத்ததற்கும் அக்கிராசனருக்கும் வந்தனம் அளிக்கையில் செட்டியாரின் வேலையையும் அவரது சமர்த்தியத்தையும் பார்ப்பனப் பத்திரிகைகள் மூடிவிட்டன என்றும் இன்னும் மறைத்து அவர் மேல் ... தூக்க முயற்சிகள் செய்கின்றன என்றும் "குடி அரசு" பத்திரிகை இல்லாதிருந்தால் செட்டியார் ஒருவர் இருந்ததும் ... கூட தெரியாது என்றும் ஆதலால் நமது பார்ப்பன ரல்லாதார் ... ஒன்றுகூடி நமது முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் உழைக்க வேண்டும் என்றும் அதற்காக ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டும் என்றும் பேசினார். பிறகு சந்தோஷ ஆரவாரத்திடையே ...ம் கலைந்தது.

---

## ஈரோடு
## முனிசிபல் சேர்மென் அவர்களுக்கு கேள்விகள்.

சேர்மென் அவர்கள் கவுன்சில் தீர்மானப்படி மாதம் இருமுறை மீட்டிங்கு ஏன் கூட்டுகிறதில்லையென்றும், இதனால் அநேக வேலைகள் குந்தகப்படுவதற்கும் நிறைவேற்ற வேண்டிய விஷயங்கள் நிறைவேற்றப்படாமலிருப்பதற்கும் சேர்மென் அவர்கள் காரணம் கூறுவாரா? என்றும், கவுன்சிலில் நிறைவேற்றிய தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவராமல், சேர்மென் அவர்கள் ...கணக்காக நிறுத்திவைத்திருப்பதற்குச் சரியான காரணம் காட்டுவாரா? என்றும் அக்கிரார வார்டு, ரயில்வே வார்டுகளிலுள்ள முனிசிபல் சத்திரங்களில் ஜனங்கள் முறையே சாவடி போட்டு வசித்தும் குடியிருந்தும் வருதல் குறித்து சேர்மென் அவர்கள் என்ன தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை? என்றும், பார்க்கில் வேலை பார்க்கும் முனிசிபல் சிப்பந்திகளும் வாட்டர் வொர்க்ஸ் ஆட்களும் சேர்மென் அவர்களுடைய ஆடு, மாடு, எருமை முதலியவைகளை சுமார் 10 உருப்படிகளை பார்க்கில் மேய்த்துவரல் உண்மையா? என்றும், பார்க் சூபரவைசர் கறவை மாடு 3 பார்க்கில் வைத்துக்கொண்டு அவரின் கீழ்வேலை செய்யும் முனிசிபல் சிப்பந்திகளைக்கொண்டு பார்க்கிலேயே மாடுகளை மேய்க்கச் செய்வது தினசரி அங்கு செல்லும் சேர்மென் அவர்கள் கவனித்திருக்கிறாரா? இல்லையா? என்றும் பார்க்கில் வேலை பார்க்கும் ஆட்களில் கவுன்சில் சாங்க்ஷன் பேரில் வைக்கப்பட்டவர்கள் எத்தனைபேர்? சேர்மென் அவர்களே வைத்திருக்கும் ஆட்கள் எத்தனைபேர்? என்றும், ஈரோடு முனிசிபல் கவுன்சிலர் ஜனாப் H. பாட்சா சாஹிபு கேட்டு விட்டிருக்கிறார்.

---

## ஸ்ரீமான் ஆர் வீரய்யன்.

ஸ்ரீமான் ஆர் வீரய்யன் மறுபடியும் சட்டசபைக்கு நியமனம் செய்யக்கூடாதென்பதற்காக அநேக ஆக்ரகாரப் பார்ப்பனர்களும் உபாத்தியாயர்களும் வெகு பாடுபட்டு கடைசியாக வெற்றியும் பெற்றுவிட்டார்கள். தமிழ் நாட்டில் தீண்டாத வகுப்பு என்று சொல்லப்படுபவர்களுக்காக ஸ்ரீமான் ஆர். வீரய்யனைப்போல் வேறு யாரும் வேலை செய்ததில்லை என்றே சொல்லுவோம். உண்மையாக வேலை செய்பவர்களுக்கு எதிரிகள் இருந்துகொண்டேதான் இருப்பார்கள். ஸ்ரீமான் வீரய்யன் சட்டசபையில் இல்லை என்கிற குறையை ஸ்ரீமான் எம். சி. ராஜா நிவர்த்தி செய்துவிடுவார்கள் என்றே பூரணமாய் நம்பி இருக்கிறோம். சுவாமி சகஜாநந்தா அவர்கள் முன்னேற்றத்தில் ஆசையுள்ளவர் ஆனாலும் சமஸ்கிருதம், தமிழ் முதலியவற்றில் பண்டிதர் ஆனாலும் பார்ப்பனர் தயவினால் சட்டசபை ஸ்தானம் பெற்றவரானதால் பார்ப்பனர் தாக்ஷண்யத்திற்கு பயப்படுவாரோ என்று நாம் பயப்படாமலிருக்க முடியவில்லை.

---

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பார்ப்பனர் கொடுமைக்கு பதிலென்? பார்ப்பனரல்லாதாரே! பகருமின்!

எம் பார்ப்பனரல்லாத பெரியார்களே! வாலிப இளஞ் சோதரர்களே! கடந்த ஓரேழு நாட்கட்கு முன்பு திருவல்லிக்கேணி கடற்கரையில் கூடிய சுயராஜ்ய வேஷம் பூண்டாடிய அரக்கப் பார்ப்பனக் குழுவினர், நம் பார்ப்பனரல்லாத வீரர் பக்கிரிசாமி என்பாரின் இன்னுயிர்க் கூலி வைக்க கங்கணங் கட்டி அப்பெரியாரின் கண் கலங்கக் கடனாற்றிய கயவர்களின் கடுமையினுங் கடுமையாங் கொடுமையை யுன்னி உளங் கொதித்துக் கொண்டிருந்த நிலையில், எரியுங்கொள்ளிக் கெண்ணெய் வார்த்தாப்போல் இரண்டோர் தினங்கட்கு முன்பு சென்னைச் சேரியில் கோகலே மண்டபத்தில் குழுமிய தமிழ் மாகாண மகா நாடென்னுங் கூட்டத்தில், மாயாவிகளன்ன பார்ப்பனரும் அவர் தம் அடிவருடும் ஓர்சில அரக்கர்களும், தொண்டரெனும் எமதூதர்களும் ஒருங்கே சேர்ந்து கொண்டு நந்தண்டமிழ் நாட்டுத் தலைவர் பெருமானும் நந்தாய் நாட்டின் நலங்கோரி ஓராண்டிறந்த மேல் சிறைச்சாலையில் தவங்கிடந்த பெருந்தகையாம திருவாளர், தண்டபாணியாரைத் தூக்கி அப்பெரியாரின் பொன்னுடல் தாங்கிய, இன்னுயிரை எமனூரோட்டவும் கருதி, கபவக் கருமம் ஆற்றிய கல்லினுங் கடின சித்தமுடைய மாக்களின் சதி யாலோசனையைப் பத்திரிகை வாயிலாய் படித்தறிந்ததும் யான் கொண்ட துயருக் கோரெல்லையின்று. அம்மம்மா! பட்டப் பகலிலே வெட்ட வெளிச்சத்திலே, பார்ப்பனப் பயங்கராட்சி சென்னைச் சேரியில் தலைகால் தெரியாது தாண்டவமாடும் மாண்பை யுன்னுமொவ்வொரு விநாடியும் ஆயிரக் கணக்கான அம்புகள் ஏககாலத்தில் மார்பைப் பிளக்குந் தன்மையாய் தத்தளிக்கின்றேன். அந்தோ தலைவர்கள் கதியே இவ்வாறாயின் ஏழைத் தமிழர் கதி யாதாய் முடியுமோ ஈசனுக்கே வெளிச்சம். சென்னையில் தாண்டவமாடும் தலைகால் தெரியாத பார்ப்பனராட்சியை சிந்திக்கையில். ஹா! ஹா!! எனது நெஞ்சங் குழைகின்றது. நாக்குளறுகிறது, கரங்கள் நடுக்குறுகின்றன, கண்கள் அருவி எனக் கண்ணீர் கொட்டுகின்றன; எதெழுதித் தொலைப்ப தென்பதற்கென் ஊற்றுப்பேனா மேற் சென்றபாடில்லை.

ஹே! தமிழர் தலைவர்களே! அந்நாளில் நந்தமிழரசர் பெருமக்களனைவரும் பார்ப்பனரை நம்பி தம் நாடிழந்து, நகரிழந்து, அன்னியர்க் கடிமைப்பட்டு அவதியுறலை தொருபுறம் இருக்க, இற்றையும் நங்கோட்டாரிக் காம்புகளில் ஒரு சிலர், பார்ப்பனரை நம்பி "தேசம்" "காங்கிரஸ்" "சுயராஜ்யம்" எனக் கத்தி பார்ப்பனப் பயங்காட்சிக்கு, நந்திராவிட மக்களை அடிமைப்படுத்தி வருகின்றனர். இன்னுஞ் சிறிதுநாள் இவ்வாறே நடைபெறுமெனின், தமிழர் கதியைப்பற்றி ஜோதிடங் கூறத் தேவை இல்லை என்பது மிகையாகாது? இன்னும் "தேசம்" "காங்கிரஸ்" எனக்கத்தும் ஒரு சில பார்ப்பனரல்லாத தலைவர்களின் கதியும் ஸ்ரீமான்கள் தண்டபாணியார், பக்கிரிசாமி போன்றாரின் பரிதாபக் கதியாய்த்தான் முடியுமென்பதை மறப்பதற்கில்லை. கேவலம் வேசியிடம் தூது வேலைபுரியும் பார்ப்பான் முதல் அரசியல் பார்ப்பான் ஈறாக நந்தமிழர்களை யழிக்க மாயச் சூழ்ச்சிகள் பலபுரிந்து வருவதோடின்றி மக்களின் உயிர் நிலைக்கே உலை வைக்க மிருகப்பலம் ஏற்றெழுந்திருள்ளியிருப்பதைக் கண்கூடாய் கண்டுங் கேட்டு மின்னும் சுயமரியாதை நிலையுமின்றி அப்பாவிகளின் சொக்குப் பொடியில் சொக்குண்டு, காங்கிரஸ் தேசமெனக் கத்துவதைக் காணும் உண்மைத் தமிழர் எவர்தான் கண்ணீர் சொட்டாதிருக்க இயலும்? கல்வியரசு கல்யாண சுந்தரரே, தென்னாட்டுத் தலைவர், வரதராஜரே, பார்ப்பனப் பயங்கராட்சிக் கென்ன பதில் பகரப் போகின்றீர்கள்? என நுங்களிருவரையுந் தமிழ் நாடு எங்கணும் யாசித்து நிற்கின்றது. தாங்களிறையும் பதிலின் மாண்பைக் கண்டு போற்றவோ, தூற்றவோ, எம்போன்றார்க் குரிமையுண்டென்பதையும் இங்கு மறைப்பதற்கில்லை. வரவாக் காணுவோம் நுங்களின் சுயமரியாதையை. ஏனைய தமிழ் நாட்டுத் தலைவர்களே, மாஜனங்களே, என்னிளஞ் சோதரர்களே, இனியுங் கும்பகர்ணனி னுறவு கொள்ளின் நம் மக்கள் அதோ கதி என்பதை மனதிலிறுத்தி, பார்ப்பனீயத்தையும் அப்பார்ப்பனீயத்தால் தாண்டவமாடும் பார்ப்பன பயங்கராட்சியையும் வீழ்த்தி மக்களின் சுயமரியாதையை ஸ்தாபிக்க அல்லும் பகலும் ஓய்வுறக்கமின்றி கடனாற்றிவரும் கருணைவள்ளலாம் வைக்கம் வீரர், உயர் திருவாளர் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்களுக்கு நுங்களின் முழுப் பலத்தோடு கூடிய ஆக்கந் தந்து "சுயமரியாதை" எனும் சீரிய சாம்ராஜ்யத்தை நந்தமிழ் நாட்டில் ஸ்தாபித்து, மக்களின் துயருக்காஸ்பதமாயுள்ள பார்ப்பனீயப் பசாசை வெட்டிப்புதைக்க வீறுகொண்டெழும்படி என் சிரந்தாழ்த்தி நுங்களடி பணிகின்றேன். வாளாக்கிடப்பின் ஏழைச் சோதரர் சாபம் தப்பாது நுங்கள் தலைமேல் விழும். எச்சரிக்கை! எச்சரிக்கை!! பார்ப்பனீயத்தின் படு கொடுமை எச்சரிக்கை! எல்லாம் வல்ல நந்தமிழன்னையார் சுயமதிப்பெனும் சூத்திரத்தை தந்தருள்வாளாக சுபம்.

ரா. க. பெருமாள்,
தூத்துக்குடி.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

6. ஆகமத்தின் பெயரைச் சொல்லிக் கோவில்களில் செய்யும் அநியாயங்களை அடியுடன் அழித்தல் வேண்டும்

7. கோவில்களில் எச்சாதியினரும் வேற்றுமையின்றிச் செல்லல் வேண்டும்,

8. திருமணக் காலங்களில் பொருளின்றிச் சொல்லப்பெறும் வடமொழி வார்த்தைக்குப் பதிலாக தென்மொழியில் பொருளுள்ள வாக்கியங்களைச் சொல்லல் வேண்டும்.

9. திருமணத்திற்கும் பிறவற்றிற்கும் பரம்பரையாயுள்ள புரோகிதர் என்னும் கூட்டத்தை ஒழித்துத் தமிழர்க்குள் ஆன்றோரை ஆக்குவித்தல் வேண்டும்.

10. ஈமக்கடன் முதலியவற்றை அறவே ஒழித்து அவ்வக்காலத்தில் தகுந்த அறங்களைச் செய்தல் வேண்டும்.

இன்னும் இவை போன்ற பல திட்டங்கள் உள. அவையனைத்தையும் நேர்ந்துழி நேர்ந்துழி ஒன்றொன்றாக உரைப்போம். நமது சமூகத்தை மூடவழக்க இருளினின்றும் வெளிவரச் செய்வதற்காக சுயமரியாதைச் சூரியன் தோன்றியுள்ளான். அச்சூரியன் பரம்பரை மூடவழக்க மூடுபனியால் மூடப்படா வண்ணம் "குடியரசு" க் கதிரவானால் மாய்த்தல் வேண்டும்! வேண்டும்!!

அரசியச் நீங்க அறக்கட்டளை

---

## செங்குந்தர் மகாஜன சங்கம்

மஞ்சக்கொல்லை, நாகை, 26—11—26 மாலை 5-மணிக்கு ஷை சங்க மாளிகையில் செங்குந்தர் வகுப்புப் பிரமுகர்கள் ஒருவர் தவறாமல் கூட்டத்திற்கு விஜயம் செய்து இருந்தார்கள். ஷை மகாநாட்டிற்கு ஸ்ரீமான் ராம ச. ராமசாமி முதலியாரவர்கள் அக்கிராசனம் வகித்து முகவுரையாகச்செய்த பிரசங்கத்தின் சாராம்சம் என்ற தொடர்ச்சியை 30-11-26-க்கு சரியான அக்ஷய-வருஷம் கார்த்திகை-மீ 15வ வெளிவந்த "சுயராஜ்யா" செவ்வாய்க்கிழமை பேப்பரில் பார்க்க. சமூக முன்னேற்றம், ஒற்றுமை முதலிய காரியங்களுக்கு மேற்கண்ட மகாநாடு எவ்வித பலனும் தாதக்கதல்லவென நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. நம்மரபினர்கள் இந்த நாஸ்தீகமாகிய தேவஸ்தான மசோதாவைத் தொலைக்க கங்கணம் கட்டிக்கொள்ள வேண்டுமென்றும் ஞானசம்பந்தரைப் போலவே காங்கிரஸ், சுயராஜ்யக் கட்சியை கடவுள் நமக்களித்திருக்கிறாரென்றும் ஷை நாஸ்தீக கொள்கையை பரப்புவதற்கு சில பத்திரிகைகளைவிட தலைசிறந்து விளங்குவது "குடி அரசு" பத்திரிகை என்றும் அதை தலை எடுக்காமல் செய்ய வேண்டுமென்றால் நம்மரபினர்களில் பிரபுக்கள் ஒன்றுகூடி "இந்து மத" மென்ற தினசரிப் பத்திரிகையை ஏற்படுத்துவதென்றும் "குடி அரசு" என்ற பத்திரிகையை நம்மரபினர்கள் கையினால் தொடுதலே பெரிய பாதகத்தைச் செய்தவர்கள் ஆவார்களென்றும் தலைவர் பேசினதாக எழுதியிருப்பதும் தவிர, தீர்மானங்கள் (1) "பனகால் அரசர் வெற்றியும் நிகிலும் சுயராஜ்யக் கட்சியும் மகா நாட்டின் நன்றியும்" (2) "தேவஸ்தான பரிபாலன சட்டமும் சுயராஜ்யக் கட்சியும் சுயேச்சைக் கட்சியும் சட்டத்தை உடைத்தெறியும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளும் தீர்மானமும்" (3) "இந்துமதம், கோவில், குளம் இன்னும் கொஞ்ச நாளில் அழியாமலிருக்க வேண்டுமானால் "குடி அரசு" என்ற பத்திரிகையை ஒழிக்க வேண்டும்." அதற்காக "இந்து மத" மென்ற ஒரு தினசரிப் பத்திரிகையை ஏற்படுத்தி அதை லிமிடெட் கம்பெனியாகச் செய்ய தீர்மானித்து இந்த மகாநாடு ஏற்படுத்துகிறது என்ற மகாநாட்டின் தீர்மானங்களைப் பார்க்க சிக்கல் பொருள் வைதீக சேரி செங்குந்த மகாஜன சபையோர்களாகிய எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டு பண்ணுகிறது.

செங்குந்த மகாஜன சபைக்கும் மஞ்சக் கொல்லைக்கும் சுமார் ¼ பர்லாங்குக்கு உள்

# சமரசம்.

(ஓர் வைஷ்ணவன்)

சமரசம் என்பது ஏற்றத்தாழ்வற்ற நடுநிலைச் சுவையாம். இது பொதுவாக இன்பம், துன்பம், சந்தோஷம், வ்யசனம், பிறப்பாலும் பணத்தாலும் படிப்பாலும் பதவியாலும் தக்கவே உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் வேறுபாடில்லாமல் சமமாக விருப்பு வெறுப்பற்றுக் கலந்து வாழ்தல் என்னும் நிலையில் ஒவ்வொரு மனிதனும் பழகி வாழும் வாழ்க்கைக்குத்தான் சமரச வாழ்க்கை என்பர் பெரியோர். அத்தகையதில்லாத காரணத்தைக் கொண்டே நமது நாடு இன்னும் துன்புறுகின்றதென்பதை யாவரும் மறுக்கார்கள் என நம்புகிறேன். அவ்வித சமரசமுண்டானால்தான் நமது நாட்டில் ராஜீய விஷயத்திலோ ஜாதி விஷயத்திலோ இதர விஷயத்திலோ மற்றேனைய விஷயங்களிலோ ராகத்வேஷாதிகள் உண்டாகாமலும் பூசல்களும், மற்றுமுண்டாகும் கலகங்களுள்ளாய இழிவுகளும் நேராதென்பதும் யாமெல்லோருமறிந்த விஷயம். இவ்வித சமரச பான்மைக்குண்டாகும் வழிகளும் அதனாலுண்டாகும் பலன்களையும் தெரிந்தும், துன்புறுதலின் காரணம் என்னவென்பதன் தத்துவம் மனித கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் முக்கியமாக கவனிக்கவேண்டிய அவசியமேயாகும். அதைச் சற்று ஆராய்வோம்.

முதலில் சமரச பான்மையைக் குறித்தவைகளில் இன்பமென்பதைப்பற்றி எடுத்துக்கொண்டால் அது இருவகையாக விருக்கிறது. ஒன்று பேரின்பமென்றும், மற்றொன்று சிற்றின்பமென்றும் சொல்லப்படும். பேரின்பமென்பது பெரியதாகிய இன்பம். அதைத்தான் எம்பெருமான் விஷயத்தில் இடைவிடாது எப்போதும் அனுபவிக்கும் இன்பமென்று சொல்லுவார்கள், மற்றதாகிய சிற்றின்பமென்பது சிறியதாகிய இன்பத்தைச் சொல்லுகிறது. இதை ஜீவன் தனக்காக இவ்வுலகில் ஏற்படுத்திகளால் விட்டுவிட்டு கொஞ்ச காலம் அனுபவித்தலென்பார்கள். பெரும்பாலும் நமது நாட்டில் தற்காலமுண்டாகியிருக்கும் கலகங்களுக்கு இதுவேதான் காரணமாகவிருக்கிறது.

இரண்டாவதாகிய துன்பத்துக்குமிந்த லக்ஷணத்தையே சற்றேறக்குறைய சொல்லலாம்.

அடுத்தது சந்தோஷம், இது அவ்வித இன்பங்கள் உண்டாகுகிற காலங்களிலுண்டாகும் உணர்ச்சிக்குச் சொல்லுவது. வ்யசனம் துன்பத்தை அனுபவிக்கும்பொழுதுண்டாகும் உணர்ச்சியைச் சொல்லுவதாகும். மூன்றாவதாக பிறப்புமுதலியவைகளால் தன்னை உயர்ந்தவனென்றெண்ணி மற்றையோர்களை தாழ மதிப்பது; அவர்களுயர்ந்திக்குத்தான் துக்கிப்பது பொறுமைப்படுவது அவ்வித உயர்ந்தவர்களுக்கு தன்னாலியன்ற தடங்கலைச் செய்வது; அப்படிச் செய்தும் அவர்களுயர்ந்து யதிகரித்தாலத்தால் துக்கிப்பது; இதற்கென் செய்து அதை தடுப்பதென்னும் உள்ளக் கிளர்ச்சியினுலுண்டாகும் ஆராய்ச்சியு மதன்பயனாக தேர்ந்த தேர்ச்சியும் முதலியவைகளால் உண்டாகும் தளர்ச்சி முதலியவைகளால் இவனுக்குக் கிடைத்த அருமையான காலம், ஜென்மம், அறிவு, திரவியம் முதலியவைகளைச் செலவிட்டுத் துன்பத்துக்கு ஆளாகுவது; இதுபோலவேதான் தாழ்ந்தவர்களும் உயர்ந்தோர் மாட்டும் துன்புறுவதும்; ஆக இத்தகைமைகளால் கிடைத்த பிறப்பும் மற்றுமுண்டான அவயவகாரணாதிகள், அறிவு, திரவியம் முதலியவைகளும் வீணே கழிகின்றன.

ஆகையால் மனிதப்பிறவி கிடைத்த இக்காலத்திலேயே சேதனங்களான நாம் ஒவ்வொருவரும் முக்கரணங்களால் செய்யவேண்டுவன என்னவென்பதை யோசித்தல் அவஸ்யமன்றோ? அப்படி யோசிக்குங்கால் ஒவ்வொரு பெரியாரும் நூல்களும் நூலுணர் வல்லோரும் என்ன சொல்கிறார்களென்றால் மனிதனது உன்னத நிலைக்கு உதவி செய்வது சமரசம் என்பதே எல்லா மதத்தினரின் சம்மதமாகக் காண்கிறது. அப்படி சமரசம் வரவேண்டுமானால் முதலில் யாவரிடத்தும் அன்பு செலுத்தவேண்டும். அவர்கள் குறியாக அவர்கள் சுகதுக்கங்களில் தானும் பங்கெடுத்துக்கொள்ளவேண்டும். இவ்விஷயத்தில் தன்னை அழிய மாறியாகிலும் உதவிதரவேண்டும். இதற்கு உதாரணமாக தற்சமயம் நமது காந்தியடிகளையும் சரித்திரபூர்வமாக இதற்கிசைந்தாப்போல் நடத்திக்காட்டிய நமது ராமாநுஜரையும் பார்க்கலாம். காந்தியடிகளைப்பற்றி நேரிலறியாதாரில்லையாகையால் இவ்விடம் ராமாநுஜரைப்பற்றிசில கூறுவோம். நமது தற்கால வாழ்க்கைகளுக்கும் உதவும்படியான சிலவற்றை மட்டில் அவரது சரித்திரத்திலிருப்பதைப் பார்த்தால் முதலாவது நமக்கு அதிப்பிரயாசையோடு கிடைக்கப்பெற்ற பேற்றை யாவரும் அவ்வகைப் பிரயாசையில்லாமலும் எவ்வழிகளாலும் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றெண்ணமலும் எல்லோருக்கும் சரி உரிமையுண்டாகிவாழவேண்டுமென்றும்எண்ணி பேதமற யாவர்க்கு முதவியருளினமை புலனும். அதாவது தாம்குருவிடம் உய்யவேண்டியவிதமானவழிகளை கற்றுக்கொள்ளச் சென்றிருந்தபோது குருவானவர் மறுமுறை வரும்படி கட்டளையிட்டார். இப்படியே இவர் திருக்கோட்டியூருக்கும் திருவரங்கத்திற்கும் 18 முறை குருவின் கட்டளைகளால் நடந்து, கடைசியாக யாவருக்கும் சொல்லாதே கொள்ளுமென உபதேசித்தவைகளைத் தாம் பெற்றவுடன் தம்மனதினுள் யோசிக்கலுற்றார். இப்படி யார் கஷ்டப்பட்டு இவ்விருள்தருமாஞலத்தின்கண் குரு சிஷ்ய பாவம் கொண்டாடி உய்யப்போகிறார்கள். ஆகையால் நாமே இவ்வுபதேச மொழிகளை மானிடர்பால் பேதமற உபகரித்துவிடுவோம். அப்படிச் செய்வதில் எல்லோரும் உய்ந்துவிடுவார்கள். நாம் ஒருவன் வேண்டுமானால் குருவின் கட்டளையை மீறியதற்கு துன்பறுவோம் இத்தனைபேரும் இன்புறட்டும் என நினைத்து எல்லோருக்கும் பேதமற அவ்வுபதேச மொழிகளை உபகரித்தருளினர். அது கேட்ட இப்பெரியாரின் ஆசான் இவரை யழைப்பித்து நடந்ததை வினவ, இவ்வெண்ணிச் செய்ததை யார்முன் அறிவிக்க அவர் இவரைத்தழுவிக்கொண்டு தம்மினும் பெரியார் என்னும் பொருள் கொண்ட திருநாமமான "எம்பெருமானர்" என்ற பெயரிட்டுக் கொண்டாடினர் எனின் இதைப் படிக்கக் கடமைப்பட்ட ஒவ்வொருவரும் தங்களை என்னவென்று நினைத்து ஒழுகவேண்டுமென்பதும் சுலபமாக அறியலாம்.

மற்றும் அவர் சரித்திரத்தில் தீண்டாதவர்கள் என்று தற்கால் அகம்பாவிகளால் நினைக்கப்படுபவர்களிடத்தில் அவர் நடந்துகொண்டிருப்பதை ஆராய்ச்சி செய்தால் இவர்களின் காரியங்கள் மிகவும் அக்கிரமங்களென்றே தோணச் செய்யும். அதாவது அவர் ஸ்நானார்த்தமாக திருக்காவேரிக்கு எழுந்தருளும்போது மூக்குறும்பும் புறங்கொடுக்க முனிந்தசெல்வரான கூரத்தாழ்வானும் முதலியாண்டானுமாகிற இருவர் கைகளிலும் பட்டுமடியிட்டு அதன்பேரில் தமதிரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு செல்வர்; சென்ற பிறகு தீர்த்தமாடி அநுட்டானம் முடித்து மடத்துக் கெழுந்தருளும்போது வேடஜாதியிற் பிறந்த வில்லிதாசரென்பவர் ராஜ சமூகத்தில் தமக்கேற்பட்டுள்ள சேவகங்களை முடித்துக்கொண்டு எம்பெருமானாராகிற இராமாநுஜாசாரியரைத் தரிசிக்க வேகமாக காவேரிக்கு வருவர்; இப்படி வருகிறவிவரை எம்பெருமானர் கண்டதும் அதிகுதூகலத்தோடு இவரைத் தழுவிக்கொண்டு இவ்வில்லிதாசரின் கையைப் பிடித்துக்கொண்டு வெகு பிரியமாக வார்த்தைகளாடிக்கொண்டு மடத்துக்கு வருவார்; இப்படி வருகின்ற இராமாநுஜர் தம் மனதில் இவ்வில்லி தாசரின் கையைப் பிடித்துக்கொண்டால் தமது திருமேனிக்கு இவ்வில்லிதாசரின் திருமேனி ஸ்பரிசமானது ஸ்பரிசவேதி என்று நினைத்தே அவ்விதம் செய்து வந்தாராம். ஸ்பர்சவேதியென்றால் ரசவாதிகளிற் சிறந்த சித்தர்கள், தாழ்ந்த உலோகத்தை உயர்த்தும்பொருட்டு ரசாயன சாத்திர விதிப்படி செய்துகொள்ளும் ஒரு உத்தமமான மருந்து சேர்க்கைக்குப் பெயர். இதில் உடையவர் தமது திருமேனி தாழ்ந்ததென்று மிதையுயர்த்த வில்லிதாசர் திருமேனிதான் தகுந்த மருந்தென்றும் கருதியுள்ளாரென்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை. இதற்குச் சான்றாக வில்லிதாசர் துதியாகிற தனியனில் பார்க்கக் காணலாம். அதுவுங் கூட தாத்காலிக "நித்யாநு சந்தான" கிரந்தங்களிலிருந்தெடுக்கப்பட்டுப் போய்விட்டாலும் சுமார் 20, 25 வருஷங்களுக்குமுன் அச்சியற்றிய புத்தகங்களிலிருந்து எடுக்கமுடியாமல் கிடக்கிறதென்பது யாவரும் ஒப்புக்கொள்வார்கள். (தொடரும்)

---

...ளாகவே இருக்கும் இப்படியிருந்தும் அச் சபையார்களுக்கு அறிவிக்காமல் இம்மகாநாடு நடந்திருப்பதைப் பார்க்க எவ்வளவு உண்மையாயிருக்குமென்பதை நம்புவதற் கேதுவில்லை. அப்படியிருந்து இம் மகாநாடு நடந்திருப்பது உண்மையாயிருக்கும் பக்ஷத்தில் இச்சிக்கல் பொருள் வைத்தசேரி செங்குந்தர் மகாஜன சபையார் இதை ஆட்சேபிக்காமலிருக்க முடியாதென மஞ்சக்கொல்லை செங்குந்த முதலியார் சபைக்கு வருந்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். என சோ. ச. கந்தசாமி முதலியார் அறிவிக்கிறார்.

---

வடாற்காடு ஜில்லா எட்டாவது கூட்டுறவு பெருங்கழகம் அடுத்த 1927-ம் வருஷம் ஜனவரி மீ 2, 3-தேதிகளில் (ஞாயிறு, திங்கள்கிழமைகளில்) அரக்கோணத்தில் நடைபெறும்.

வரவேற்புச் சபை அங்கத்தினர் கட்டணம் ரூ. 3 எனவும், சங்கப்பிரதிநிதி கட்டணம் ரூ. 2 எனவும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவினர்கள் அனைவரும் விஜயம் செய்து கழகத்தைச் செவ்வனே நடைபெறச் செய்ய வேண்டப்படுகிறார்கள். எனத் தலைவர் வி. முருகேச முதலியார் அறிவிக்கிறார்.

## மேலூர் யூனியன் சேர்மன் காலஞ் சென்றார்

மேலூர் தாலுகா போர்ட்மெம்பரும் யூனியன் சேர்மனும் கருத்தப்புலியன்பட்டி கிராமமுனிசீபும் பொதுஜனங்களால் நன்கு மதிக்கப்பட்டுவரும் பரோபகாரசிந்தையுள்ளவருமான சேர்மன் வீ. அம்பலகாரர் அவர்கள் நாளது கார்த்திகை-மீ 25-வ வெள்ளிக்கிழமை பகல் 1½-மணிக்கு இறைவன் திருவடி சேர்ந்தார் என்று வி. முத்துசாமி நாயுடு அறிவிக்கிறார்.

# தொண்டரின் மாண்பு.

"தொண்டர் தம் பெருமை சொல்லவுந் தரமோ" என்ற ஆன்றோருரைப்படி தொண்டரென்றால் எல்லா ஜீவன்களிடத்தும் "கருணை, ஜீவகாருண்யம்" முதலிய சகல நற்கருமங்களிலும் தவறாமல் ஒழுகுகின்றவர்களையே பக்தர், தாசர், அடிகள், தொண்டர், ஞானியென பல நாமதேயங்களால் அழைக்கப்படுகின்றனர்.

தற்காலத்தில் பலர் உண்மைத் தொண்டர்கள் போல் நடித்து தம் கரங்களால் கொல்லாமலிருத்தலே தான் சிறந்த கொல்லா விரதமென்றும், மற்றபடி மொட்டை, கொட்டை (ருத்திராக்கம்) முதலிய சிலபல சிவ சின்னங்கள் கணுக்கள் தோறும் அணிந்து

"மழித்தலும் நீட்டலும் வேண்டாம் உலகம்
பழித்த தொழித்துவிடின்" (திருக்குறள்)

என்ற மேற்கோளையும் நோக்காது இமாந்து ஏமாந்துறையும் சம்பிரதாய சுவாமிகளின் அறியாமை என்னென்றுரைப்பது. இத்தகையோர்களால் உலகினுக்கு யாது பயன் விளையப் போகின்றது? இன்னோர் தொண்டரின் பெருமைக்கு அருகர்களாவாரா? சங்கரா சம்போ சிவசங்கரா என்ற வார்த்தைகளின் ஒலியே சொர்க்கம் சேர்க்கும் என்பதுவே இவர்களின் மூடக் கொள்கைகளாகும்.

அந்தோ! இன்னவர்களின் மடமைக்கு என் செய்வது. அன்பே சிவமயம். "இன்சொலா லன்றி இருநீர் வியனுலகம் வன்சொல்லா லென்றும் மகிழாதே." எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதல் வேண்டுமென்று பிரமாணமிருக்கவின் எல்லா உயிர்களிடத்தும் சிவமயம் பிரகாசிக்கின்றதன்றோ? சகல ஜீவன்களிடத்தும் ஜீவகாருண்யம் இலங்குதலன்றோ உண்மை ஜீவகாருண்யம்? அவ்வாறின்றி கொன்றால், தின்றால், பாவம் என்ற கொள்கை வைத்துத் தீங்கிழைப்பது அஹிம்சா தர்மமா?

அறிவுபடைத்த தம் இனமாகிய மனித வர்க்கத்தினிடம் பார்த்தால், தொட்டால், சென்றால் தோஷம் தீட்டு என்னும் கொடிய முறையைக் கைக்கொண்டு மனிதரினத்தை மனிதர் வெறுத்தல் ஜீவகாருண்யமாம்.

நம் தமிழ் மக்களின் குச்சுப்பாலையைப் போக்கியும் மானிடர்க்கு அத்தியாவசியமானதுமாகிய (உடையின் புனருத்தாரணை) நூல் நூற்றல், கதரணிதல், எத்தனை யை ஜீவகாருண்யம், பரோபகாரம், நாட்டின் க்ஷேமம் என்பதுணராத நம் ஜீவகாருண்ய உபாசக சிலர்கள் யாதொரு மெய்யடிகளின் சரித்திரத்தை நெட்டுருவாகப் பாராயணம் செய்து உபந்யாசமாரி பொழிந்து [illegible] வீண் நாளாக்குகின்றனர். [illegible] மக்களிடத்து ஜீவகாருண்யம் [illegible] போலும்.

[illegible] நல்ல நாடா பக்தருக்கு [illegible] முற்றும் துறந்த ஞானி [illegible] மரவுரி தரித்து கானகமே [illegible] அன்றோ? அவ்வாறின்றி நாட்டி[illegible] நன்றால் தேசத்தின் க்ஷேமத்தை [illegible] கருதுதல் வேண்டும்.

"நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணாரில்." (திருக்குறள்)

திருவள்ளுவரின் அமுதவாக்கையும் நோக்காது பாமர ஜனங்களை ஏய்த்து ஊன் வளர்த்து உளம்களித்து ஊருயிர்ப்பிரேதமென வாழ்தல் எத்தகைய சண்டாளத்தனமென்பதை சற்று ஊன்றிப் பார்த்தல் வேண்டும்.

நமது சாஸ்திர புராண இதிகாசங்கள் கூறும்வண்ணம் துஷ்டர்களை அடக்கி சிஷ்ட பரிபாலனத்தை நிலைநாட்டுதற்கு சாட்சாத் பரபிரம்மமே அவதாரப் புருஷர்களாகத் தோன்றி ஜகம் புகழும் இராஜரீகத்தை விளங்கச் செய்தனரென்பதை நமது இந்து மறையோர்ந்துணர்ந்த ஆச்சார சீலர்கள் மறக்கொணாததன்றோ?

ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்ல பராபரனே தேசிய விஷயத்தில் ஈடுபட்டனரென்றால் கேவலம் மனிதரில் மனிதனை நரன் ஞானிக்கு வேந்தன் துரும்பு எனபதும் விரிக்க [illegible] மக்களின் நலனை நாடாத ஸ்ரீ ஸ்ரீ மடாதிபதி மகந்து ஜகத்குரு என்ற இன்னோரன்ன பல வானளாவிய சிறப்பு நாமதேயங்களைச் சூட்டிக்கொண்டு வாளாவிருப்போர் இறைவன் இன்னருளுக்குப் பாத்திரமாவாரா?

தற்காலத்தில் உலகம் மதிக்கும் M. A. B. A. பாரிஸ்டர் முதலிய பட்டங்களையும் துறந்து இயற்கை இல்லற சுகத்தையும் நீத்து மெய்வருத்தம் நோக்கார்.....கருமமே கண்ணாயினர் என்பதற்கிணங்க சதா நாட்டின் க்ஷேமத்தை தமது நலமெனக் கருதி ஒழுகும் உண்மைத் தேசியத் தொண்டர்களின் மாண்பையும் ஜீவகாருண்யத்தையும் விரித்துரைக்க யான் அசக்தனாயிருக்கிறேன். பாரத தேவியின் உத்தம புதல்வர்களுக்கு தீர்க்காயுளும் திடகாத்திரமும் திருமகளருளும் சிறந்தோங்குமாறு ஈசன் அருள்பாலிப்பாராக.

கே. மாரப்ப கவுண்டர்.

---

## மோட்டார் பஸ்களும் ஆதித்திராவிட கிறிஸ்தவர்களும்.

சமீபத்தில் ஜான்பால் உபாத்தியாயர் என்பவர் கோயமுத்தூர் போவதற்காக காங்கயத்தில் ஊத்துக்குளி போகும் சர்வீஸ் கார் நெ. Co. 425 மோட்டாரில் டிக்கெட் வாங்கி உட்கார்ந்துகொண்டிருக்கும் பொழுது மேற்படி காரில் டிக்கெட் கொடுத்துக்கொண்டு வருபவர் எவ்விதத்திலோ ஆதித்திராவிடன் என்று அறிந்து ஷை காரில் உட்கார்ந்துகொண்டிருந்த ஜாதி இந்துக்களின் உதவியைக்கொண்டு ஷை உபாத்தியாயரை பலவந்தமாக இறக்கி விட்டு விட்டார்கள். தற்காலம் எங்களில் சிலர் எஸ்டேட் ரைட்டர், மேஸ்திரி, சிபாய், போலீஸ்; உபாத்தியாயர் முதலிய கீழ்தர உத்தியோகஸ்தர்களும், தாலூகா போர்டு ஜில்லா போர்டு, முனிசிபல் முதலிய சபைகளில் மெம்பர்களாகவும் இருந்து நாகரீகம் அடைந்து வருவது பிரத்தியக்ஷம். பொது ஜனங்களின் பிரயோஜனத்துக்காக கவர்ன்மெண்டு லைசென்ஸ் பெற்று நடக்கும் மோட்டார் பஸ்களில் ஆதித்திராவிடருக்கும் ஆதித்திராவிட கிறிஸ்தவருக்கும் அடிக்கடி இவ்வித இன்னல்கள் ஏற்பட்டு அநேக ஆதித்திராவிட கிறிஸ்தவர்களின் பிரயாணம் தடைபட்டும் அதனால் குறித்த காரியமும் குந்தகம் ஏற்பட்டுவிடுகிறது. ஆகையால் காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் கவனித்து இக்கொடும் செயல்களை நீக்கவேணுமென்று காங்கயம் சேகரம் ஆதித்திராவிட கிறிஸ்தவர்களின் சார்பில் வி. சி. பரமானந்தம் உபாத்தியாயர் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

---

## சென்னை சட்டசபை.

### நியமனம்பெற்ற உறுப்பினர்

அடியிற்கண்டவர்களை கவர்னர் பிரபு சென்னை சட்டசபை உறுப்பினராக நியமித்திருக்கிறார்.—

தாழ்ந்த வகுப்பினரின் பிரதிநிதிகள்:

1. ராவ்பகதூர் எம். வி. ராஜா
2. ராவ்சாஹிப் ஆர். ஸ்ரீனிவாசன்
3. ஸ்ரீமான் எல். சி. குருசாமி
4. ராவ்சாஹிப் பி. வி. எஸ். சுந்திரமூர்த்தி பிள்ளை
5. ஸ்ரீமான் ஜி. பிரேமய்யா
6. ,, கங்காதரசிவா
7. ஸ்வாமி சகஜானந்தம் [சிதம்பரம்]
8. ஸ்ரீமான் வி. ஐ. முனுசாமி பிள்ளை
9. ,, என். சிவராஜ பி. ஏ. பி. எல்.
10. ,, சுப்பிரமணிய மூப்பனார் (திருச்சி) இதரர்கள்.
11. ஸ்ரீமான் டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியார்
12. மிஸ்டர் டைர்மன்
13. ,, ஜி. டி. போக்
14. ,, காட்ரெல்
15. ஸ்ரீமான் வி. பி. ராவ்
16. ஜனாப் பஸ்லுல்லா
17. ஜெய்பூர் மஹாராஜா
18. சுபேதார் மேஜர் நஞ்சப்பா
19. ஸ்ரீமான் கே. நாகண்ண கௌட
20. டாக்டர் முத்துலக்ஷிமி அம்மாள்
21. ஸ்ரீமான் நாராயண நம்பூதிரிபாட்
22. கே. கிருஷ்ணன் [தலைச்சேரி]
23. ஸ்ரீமான் எஸ். என். துரைராஜா (புதுக்கோட்டை)
24. ஸ்ரீமான் ஜே. பீமய்யா
25. ராவ்சாகிப் ஹம்பய்யா
26. ஸ்ரீமான ராமநாதகொங்கா
27. வி. பி. ஏ. சௌந்தரபாண்டிய நாடார் (பட்டிவீரன்பட்டி)

---

## மதுரை ஸ்ரீ கழுகுமலை குமரவேள் அபிஷேக சங்க அறிக்கை.
## ஐந்தாம் ஆண்டுவிழா.

அட்சய ஆண்டு மாசித்திங்கள் 6 தேதி மகத்தன்று மதுரை ஸ்ரீ கழுகுமலை குமரவேள் அபிஷேகச் சங்க நிர்வாக உறுப்பினர் முருகனடியார் முதலிய பலருங்கொண்டு ஸ்ரீ கழுகாசல கந்தபெருமானுக்கு மஹாபிஷேகமும் மகேஸ்வர பூஜையும் வெகு சிறப்பாக நடத்துவார்கள். ஏழைகட்கும் அடியார்கட்கும் அன்னதானம் செய்யப்படும் என கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் எஸ். ஜி. நாராயணன் அறிவிக்கிறார்.

## —கௌரி ஆயுர்வேத சித்த வைத்ய மந்திரம்.—

கௌரி பாலாம்ருத ஸஞ்சீவி குழந்தைகளுக்குச் சாதாரணமாய் உண்டாகும் பலவித நோய்களைக் கண்டிக்கத்தக்க ஔஷதங்கள் அடங்கிய அரிய பெட்டி.

சாதாரணமாகக் குழந்தைகளுக்கு உண்டாகும் நோய்களைக் கண்டிக்கக்கூடிய பின்வரும் ஆறுவிதமான மருந்துகள் பிரத்தியேகமான சீசாக்களிற்போட்டு ஒரு பெட்டியில் வைக்கப்பட்டிருக்கின்றன. 1. குழந்தைகளின் ஜலிப்பு, சளிக்கட்டு இருமல் இவைகளுக்கு உபயோகிக்கும் கௌரி கோரோஜனை. 2. ஜுரம் இசிவு ஜன்னிகள் வந்த காலத்தில் கொடுக்கும் கௌரி கஸ்தூரி 3. ஸ்நானம் செய்வித்த பின் குழந்தைகளுக்கு உடைத்துப்போடும் உரைமாத்திரையாகிய கௌரி பால கற்பம் 4. குழந்தைகளின் வயிற்றில் கிருமிகள் கட்டுகள் சேராமல் பேதியாவதற்காகக் கொடுக்கும் கௌரி பால விரோசனி 5. குழந்தைகளுக்குண்டாகும் வயிற்றுப்போக்கை நிறுத்தவல்ல கௌரி குறுக்கம் 6. குழந்தைகளுக்கு மாந்தங்கள் வந்தால் கொடுக்கும் கௌரிபாலபோதனி. இந்த ஆறு அரிய மாத்திரைகள் இப்பெட்டியில் அடக்கம் செய்யப்பட்டிருக்கின்றன. உபயோகிக்கும் வழிகளைப் பெட்டிக்குள்ளிருக்கும் பிரயோக விதியில் காண்க. பெட்டி ரூ. 3.

இப்பெட்டி ஒவ்வொரு வீட்டிலும் இருப்பது அவசியம். இருந்தால் குழந்தைகளின் வியாதிகள் தொடரா வண்ணம் காப்பாற்றும். வைத்தியர்களைத் தேட வேண்டிய அவசியமில்லை. குழந்தைகட்கு வியாதிவந்தால் தக்க சிகிச்சை இல்லாமல் சிசு மரணம் அதிகம் ஆகின்றன. இதன்பொருட்டே மூன்று வருடங்களுக்குமுன் சென்னையில் வெளிவரும் சுயசக்தி பேப்பரில் குழந்தைகள் வைத்தியம் அதாவது குழந்தைகளை வியாதி தொடராத வழிகளை வாரம் வாரம் எழுதி வந்திருக்கிறேன். கூடிய சீக்கிரத்தில் குடும்ப வைத்யம் அதாவது வைத்யர்கள் தயவின்றி தாங்களே வைத்யம் செய்துகொள்ளும் புத்தகம் வெளிவரும். அதில் வியாதி வராமல் இருக்கும் மார்க்கங்கள், நோய் வந்துவிட்டால் அதனை நிவர்த்திக்கும் சுலபமான முறைகள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியிருக்கும். இது பொது ஜன நன்மையைக்கோரி அநேகர் வேண்டுகோளின்மேல் எழுதி முடிக்கப் பெற்றது. பல வைத்தியர்களும் டாக்டர்களும் பார்த்து நிராகரித்தன விடப்பெற்ற குஷ்டம், குன்மம், சுவாசகாசம், பாரிசவாய்வு, ஆரம்ப ஆனைக்கால், பிரமேகம், கெரி கட்டி வரும ஜுரம் பிளேக், காலரா, கண்டமாலை இன்னும்பல கடின வியாதிகட்கும் சிறந்த சஞ்சீவி ஔஷதங்கள் இருக்கின்றன. மேற்படி நோய்கள் ஸ்ரீ கௌரி தேவியின் அநுக்கிரகத்தால் அநேகம் குணப்பட்டு நற்சாட்சிப் பத்திரங்களும், தங்கமெடல்களும் பெற்றிருக்கிறேன். இதனை எம்மிடமுள்ள முழு விபரம் அடங்கிய கேட்லாக்கில் காணலாம். சில போலி வைத்தியர்கள் மலிந்துள்ள இக்காலத்தில மேற்படி வியாதிகளைக் குணப்படுத்துகிறேன் என்றால் எம்மிடம் ஔஷதம் வாங்கி உபயோகிக்காத புதிய நண்பர்கட்கு நம்பிக்கை வருவது கஷ்டம்.

டாக்டர் V. R. சுந்தரம்,

ஸ்ரீகௌரி ஆயுர்வேத வைத்ய மந்திரம். 268, பைகிராப்ட்ஸ் ரோட், இராயப்பேட்டை, சென்னை.



காதல் ரசம்! அற்புத வர்ணனை!!

# ராஜ ராஜி

அல்லது

## காதலரின் வெற்றி.

இதில் காதலர் இருவர் காதலை அந்தரங்கமாய்ப் பெருக்கிக்கொள்ளல். காதலியின்தந்தை வேறொருவருக்கு விவாகம் நிச்சயித்தல். அப்பெண் பெற்றோர்களுக்கு காதல் மணக் கடிதம் எழுதிவைத்து இறந்துவிடல். மீண்டும் காதலி உயிர்ப்பிக்கப் படுதல். உலகத்தார் வியக்கும் வண்ணம் இவர்கள் விவாகம் நடைபெறுதல் முதலியனவாசிப்போர்க்கு முக்கனியேயாகும். காதல் ரசம் ததும்பியுள்ள

இந்நாவலின் விலை 6 அணாதான்.

8 அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு ஒன்று அனுப்பப்படும்.

### ஜீவவசிய பரமரகஸியம்.

விழிப்பு நிலையில் மானிடரை வசியப்படுத்தும் வசிய நூல் இதுதான் 30 அரியவசிய இரகசிய ப்பாடங்களும் வேறு பல மர்ம ரகசியங்களும் மலிந்து கிடைக்கும் விலை ரூ. 3 தான்.

| | | | |
|---|---|---|---|
| ஆயிரந்தலைவாங்கிய அதிசய சிந்தாமணி | 1 | 0 | 0 |
| ஆங்கில ஆசான் | 2 | 0 | 0 |
| அண்டப்புளுகன் | 0 | 8 | 0 |
| பண்டிதை மெஸ்மெரிஸா | 1 | 8 | 0 |
| கருப்பசாஸ்திரம் | 1 | 8 | 0 |

ஏ என். ராஜா & கோ., ராயபுரம்,

(2) மதராஸ்.


### சைவ சித்தாந்த சபை தூத்துக்குடி.

இச்சபையின் 43-ம் ஆண்டு நிறைவுவிழா நிகழும் டிசம்பர் 26, 27-ம் (மார்கழித் திங்கள் 11, 12-ஆம்) நாட்களில் நடைபெறும். அவ்விழாவின் பேரவைக்கு சென்னை பச்சையப்பன் காலேஜ் தலைமைத் தமிழாசிரியரும் சித்தாந்த ஞானச் செல்வருமாகிய திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள் தலைமை வகிக்க அன்புடன் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள்.

மதிநுட்பம் நூலோடுடைய அறிஞர் பலர், சித்தாந்தம் தமிழ் இலக்கியம் ஒழுக்க முதலிய பொருள்கள்பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்கள். அன்றியும் சித்தாந்த சைவர்களின் முன்னேற்றம், தமிழ் மொழியின் வளர்ச்சி முதலியவற்றிற்குரிய தீர்மானங்களும் செய்யப்பெறும். அன்பர்கள் அனைவரும்; வந்து விழாவினைச் சிறப்பிக்கவும், சொற்பொழிவுகளைக் கேட்டு இன்புறவும் வேண்டுகின்றோம். விபரமான நிகழ்ச்சிக்குறிப்பு காரியதரிசியிடம் பெற்றுக்கொள்ளலாம் எனக் காரியதரிசி ஸ்ரீமான் க. சிவகுருநாத பிள்ளை அறிவிக்கிறார்.

### விருதுநகர் நாடார் வாசகசாலை 9வது ஆண்டு நிறைவுவிழா.

இந்நகர் ராவ் பகதூர் த. இரத்தினசாமி நாடார் ஞாபகசின்ன புத்தக வாசகசாலையின் 9வது ஆண்டு நிறைவுவிழா அக்ஷய வருஷம் மார்கழி மாதம் 1உ (16-12-26) வியாழக்கிழமைமாலை காரைக்குடி "குமரன்" ஆசிரியர் ஸ்ரீமான் முருகப்ப செட்டியார் தலைமையின்கீழ் நடைபெற்றதாக ஸ்ரீமான் பெ. கா. ம. பு. முத்துசங்கர நாடார் அறிவிக்கிறார்.


பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

## மஹா சந்தனாதித் தைலம்

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் நன்மதிப் பிரதியில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0 12-அவுன்ஸ் 2-4-0. 6-அவுன்ஸ் 1-3-0

தமிழ் மருத்துவ சாலை,

220 தங்கசாலைத் தெரு, சென்னை





## இனும்! லிவர் பாக்கெட் வாட்ச். இனும்!

14 கேரட் பவுண்டன் பேனா.

புதிதாய் தருவிக்கப்பட்ட எங்கள் இரடியம் நிப்புள்ள பேனாவை வாங்குபவர்களுக்கு இம்மாதம்வரைதான் லிவர்வாட்ச் இனும். வாட்ச் சரியான காலம் காட்டும். லிவர் சாமான்கள் நீடித்தகாலம் உழைக்கும் பேனாவுக்கும் கெடியாரத்திற்கும் உத்திரவாதம் 5 வருஷம். ரொம்பவும் குறைந்த விலை ரூ. 3 15 0.

லிவர் வாட்ச் இனும் முந்துங்கள். கைவசம் கொஞ்சந்தான்.

டெக்கன் வாட்ச் டிபோ, (ஊ) 11வது பீட், சவுகார்பேட், மதராஸ்.

தங்க மெடல்களும், அநேக நற்சாக்ஷி பத்திரங்களும் பெற்ற

**ராஜவைத்ய ஆஸ்ரமம்.**

சரஸ்வதி விலாசம் பிரஸ்—க்கு எதிரில் செவ்வாய்பேட்டை, சேலம்.

மேகரணங்கள், வெள்ளைவியாதி, ராஜபிளவை, கட்டிகள், நீடித்த மூல பவுத்திர வியாதிகளை ஆபரேஷன் இல்லாமல் சௌக்கியம் செய்யப்படும். விபரத்திற்கு எழுதுங்கள்

ஆயிரக்கணக்கான

**ஆயிரக்கணக்கான வியாதி** யஸ்தர்கள்

சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.



குறைந்த வட்டி! மிகுந்த லாபம்!! சிறந்த பாங்கு!!

கோயமுத்தூர்

## இந்தியர் கஷ்ட நிவாரணபாங்கு, (Ltd.,)

(1924-ஞு டிசம்பர் மாதத்தில் ஸ்தாபிக்கப்பட்டது.)

| | |
|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் ... ... | ரூ. 5,00,000—0—0 |
| வெளிவிடப்பட்ட பங்குகள் 7,390-க்கு... ... | ரூ. 73,900—0—0 |
| தவணைகளின்படி வசூலிக்கப்பட்டது ... ... | ரூ. 50,430—0—0 |
| டிபாசிட்டுகள் ... ... ... | ரூ. 86,346—7—4 |
| Reserve Fund காப்புத் திரவியம் ... | ரூ. 2706—0—0 |
| நடை முதல் தொகை ... ... ... | ரூ. 1,50,275—9—5 |

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி விகிதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ்பிக்செட் டிபாசிட்டு இரண்டு வருஷ கெடுவு:—வட்டி 100-க்கு மாதம் 1க்கு 0—10—0 அணா. இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு ஒரு வருஷ கெடுவு:—வட்டி 100க்கு மாதம் 1க்கு 0—9—0 இதற்கு வருஷத்திற்கொருமுறை வட்டி கொடுக்கப்படும்.

(1) இப்பாங்கின் பங்குக்காரர்களுக்கு முதல் வருஷமே, 100-க்கு மாதம் 1-க்கு ஒரு ரூபாய் வீதம் வட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது.

(2) பங்கு 1-க்கு 10 (பத்து ரூபாய்) வீதம், 10 பங்குகளுக்கு குறையாமல், 10, 20. 30 என்கிற முறையே, எத்தனை பங்குகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படும். பங்குகள் (அலாட் செய்யும்போது பங்கு 1க்கு ஒரு ரூபாய் வீதமும் பிரவேசதனம் பங்கு 1க்கு 0—8—0 எட்டணா) வீதமும் ரூல்ஸ் புஸ்தகத்திற்காக 0—6— அணாவும் செலுத்தவேண்டும்.

(3) பத்து பங்குகள் உடைய பங்குக்காரர், பர்ஸனல் இன்வெஸ்டுமெண்டு டிபாசிட் ஒன்றுக்காக, 25 மாதத் தவணைகளில் மாதம் 1-க்கு 2—0—0 (இரண்டு ரூபாய்) வீதமும் பிரவேசதனம், பண்டுக்கிரயம் ரூபாய் 2—8—0 செலுத்தலாம், அல்லது ஒரே தடவையிலாவதும் ரூபாய் 52—8—0 செலுத்தி விடலாம். ஒருவர் எத்தனை டிபாசிட்டுகள் வேண்டுமானாலும்செலுத்தி வரலாம்;

(4) மேற்கண்ட டிபாசிட்டுக்கு பூரா தொகையும் பிரதி வருஷம் டிசம்பர் மாதம் 31ந் தேதிக்குள்செலுத்தப்பட்ட டிபாசிட்டார்களுக்கு, பிரதி வருஷத்திலும், மேற்படி நெம்பரை பிரைஸ் சீட்டில் சேர்த்து வாசிக்கப்படும்.

(5) மேற்கண்ட பிரைசில் பிரைஸ் கிடைத்த டிபாசிட்டருக்கு ஒவ்வொரு பிரைசுக்கும் ஒவ்வொரு டிபாசிட்டருக்கும், அவர் பங்குடையவரானால் ரூபாய் 250—0—0 தனி டிபாசிடரானால், ரூபாய் 125—0—0 இரண்டு வருஷ கெடுவிற்கு வட்டியில்லாமலும்,ஜாமீன் இல்லாமலும் கடன் கொடுக்கப்படும். டிபாசிட்டார்கள் இறந்து போனாலும், அவர் பங்குஉடையவரானால், ஒவ்வொரு டிபாசிட்டிற்கும் ரூபாய் 250—0—0 வீதமும் தனி டிபாஸிடரானால், ஒவ்வொரு டிபாசிட்டுக்கும் ரூபாய் 125—0—0 வீதமும், பாங்கின் சட்டப்புஸ்தகம் 3வதுபக்கம் (a) பிரிவின்படி போனசும் கொடுக்கப்படும்.

கோயமுத்தூர், 22—9—26.

ஜி. ராமச்சந்திர செட்டியார்,
மானேஜிங் டைரக்டர்.



ஸ்ரீவில்லிபுத்தூர்

## பி. பி. அன்ஸன்

பிஸ்கட் பாக்டரி

குழந்தைகளுக்குத்தகுந்தஆகாரம்

**அரரூட் பிஸ்கட்.**

சிற்றுண்டிக்கு முதன்மை பெற்றது.

**ரூஸ்பரி பிஸ்கட்.**

புஷ்டியைக் கொடுக்கக் கூடியது.

**பழம் கேக்.**

எல்லா முக்கிய இடங்களிலும் கிடைக்கும்

P. P. & SON,
Cake & Biscuit Factory,
SRIVILLIPUTTUR.



ஆயிரக் கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

## மஹா சந்தனாதி தைலம்.

இந்த தைலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தைலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்து வந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக்குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தைலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்து கொண்டேயிருக்கின்றன. இத்தைலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒருமுறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவுன்ஸ். பாட்டல் ரூ. 4-0-0. 12 அவுன்ஸ். பாட்டல் ரூ. 2-2-0. வி. பி. செலவு வேறு.

## சாலாமிசிரி லேகியம். சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவுள்ள ஆண்தன்மையை விருத்திபடுத்துவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலவீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரித ஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக் கொடுத்து, தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும்.பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0 வி. பி. தபாற் செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு திருச்சி.



## வார்த்தக யுக்தி.

ஸ்ரீமான் M. A. நெல்லையப்பர் எழுதியது.

இந்நூல் நாவலல்ல—கதையல்ல. ஒவ்வொருவருக்கும் ஊக்கத்தை ஊட்டி உன்னத ஸ்திதிக்குக் கொண்டுவரத்தக்க அருமையான புத்தகம். இதுவரை நாலாயிரம் பிரதிகள் விசேஷ விளம்பரமின்றிச் செலவாகிவிட்டன. இது புதிய பதிப்பு. விரிவான நூல். அதிக விஷயங்கள் அடங்கியுள்ளது. படிக்கப்படிக்க உற்சாகத்தை தரக்கூடியது. அவ்வளவும் அனுபவங்கள்.

வர்த்தகயுக்தி என்ற பெயருக்கேற்ப அநேக யுக்திகளும், வியாபாரம் செய்வதற்கான வழிகளும், விளம்பரம் செய்யவேண்டிய முறைகளும் கோர்வையாக எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

விலை அணா 12. தபாற்செலவு வேறு.

கேட்லாக் இனம்.

அமிர்தம் அண்டு கோ.,
165, பிராட்வே, தபாற்பெட்டி 222,
மதராஸ்.


ரோஜா முத்தையா

# மின்சார ரசம்.

## எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

**மின்சார ரசத்தின் குணம் எப்படி?**

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது

**மின்சார ரசத்தின் விசேஷமென்ன?**

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அனுபானமு மில்லை. எவ்வித பத்தியமு மில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

**மின்சார ரசத்தின் அனுபோகம் எப்படி?**

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட் லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

**ஒரு புட்டியின் விலை ரூ 2. தபால் செலவு வேறு.**

## மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம் (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

---

வித்வத்வம்! அநுபவம்! ஆச்சரியம்! விநோதம்! ஆநந்தம்! விசித்திரம்! அற்புதம்!
இவைகளெல்லாம் அடைவது எப்படி?

எமது **"ஆநந்த குண போதினி."**

ஆநந்த குண போதினி அறிவை விளக்கி உற்சாகத்தைத் தரவல்லதான உயர்ந்த நூதன செந்தமிழ் மாதப் பத்திரிகை.

பத்திரிகாசிரியர்:—எஸ். ஜி. ராமாநுஜலு நாயுடு.

வருஷ சந்தா:—இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு ரூ. 1—0—0
மாதிரிப் பிரதி இனம். வெளி நாடுகளுக்கு ரூ. 1—4—0
சித்திரை மாதத்திலிருந்து வெளிவந் துலவுகிறது.

டி. இராஜகோபால் முதலியார்,
ஆநந்த குண போதினி ஆபீஸ், 302 தங்கசாலை வீதி, சென்னை.

---

ஆங்கிலேயம் படிக்க விரும்பும் கனவான்களே ஏன் கவலைப்படுகிறீர்கள்?
27000 ஜனங்களால் வாசித்து பிரபல்யமடைந்த

**ஆங்கில ஆசான் அல்லது ஆங்கில போதினி.**




தமிழ் எழுத்துக்களை வாசித்தால் இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 8-ம் பதிப்பு 800 பக்கம் கொண்ட ஓர் பெரிய புத்தகம்.

உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள உதவும் புத்தகம் இதுதான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தொழிலாளிகளுக்கும், மிகவும் முக்கியமானது. இவ்வெட்டாம் பதிப் பில் மிகவும் சிரமப்பட்டு $1\frac{1}{2}$ ரூபாய் முதல் 3000 ரூபாய் வரைக்கும் மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.

முழு காலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0.

அந்நிய நாட்டார் முன் பணம் அனுப்பவேண்டும்.

டி. இராஜகோபால் முதலியார், நெ. 302, தங்கசாலைத் தெரு, மதறாஸ்.

---



கூலிக்காரன்

**200 தொழில் முறைகள்.**

தொழில் முறைகளைக் கற்று தன் முயற்சியால்

4 பாகங்கள், 34 அத்தியாயங்கள், சர்ப்பத்து, ஐஸ் கிரீம், இங்கி, கண்ணாடி ஒட்டும் சொலுஷன், செயற்கை தங்கம், தீப்பெட்டி, சிகரெட்டு, ரசம் பூசுதல், ரப்பர் ஸ்டாம்பு, சோப், செண்டு கூந்தல் தைலம், பற் பொடி, தேள் விஷசஞ்சீவி, வீரிய விருத்தி மாத்திரை, அஞ்சனம் முதலிய 200 அபூர்வ செய்முறைகள் புத்தகம் விலை ரூ. 4-0-0 வி.பி. வேறு. இதன் 14பக்கம் விபரப்புத்தகம் இனம்.

சீமானுயினன்.



ஆர்ட் புக்ஸ் கம்பெனி.
26 திருச்சினாப்பள்ளி.

---

**அம்பட்டன் பீயர்ஸ்**



சோப் செய்து கோடீஸ்வரனாகிய உண்மை 24பக்கம் அணா 2. "என் சரித்திரம்" நான் ரூ. 4000 சம்பாதித்த வரலாறு. அணா 2. எத்தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.

ஆர்ட் புக்ஸ் கம்பெனி, திருச்சினாப்பள்ளி.


கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. இராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.